# திருக்கோயில்

ஆகஸ்ட் 1981 ரூ. 1-25






காரைக்குடிச் சிவாலயத்தில் அருள்மிகு
சரபமூர்த்தியின் திருவுருவம்




பழநித் திருவாவினன்குடி ஆலய நிகழ்ச்சியில் அறநிலைய ஆணையர் திரு யு. சுப்ரமணியன், I.A.S., துணையாணையர், நிர்வாக அதிகாரி திரு கே. சிதம்பரம் B.A., திருப்பணிச் செல்வர் திரு இராமநாதன் செட்டியார் B.A.




சென்னைத் திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு மா. து. குப்புசாமி முதலியார் அவர்களின் மணிவிழா நிகழ்ச்சியில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், 'முத்தமிழ்க் காவலர்' டாக்டர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்.






சென்னை திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வருகை தந்தபொழுது, அற நிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், அறங்காவலர் குழு உறுப்பினர்-நிர்வாக அதிகாரி ஆகியோர்களும், வரவேற்பு அளித்தல்.



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

முகப்பு

அருள்மிகு பெருந்தேவித் தாயார்,
அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில்
காஞ்சிபுரம்.

(உதவி: திரு. ஏ. இராமச்சந்திரன்)

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 23 | திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு — ஆவணி [ ஆகஸ்ட் 1981 ] | மணி : 11 |
| --- | --- | --- |

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

*திருக்கோயில்* திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப் பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

சித்தாந்த நெறி
—பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை, எம்.ஏ., எல்.டி.

கம்பனும் உலகியல் அறிவும்
—டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், எம்.ஏ. பிஎச்.டி.

சைவ சமயம்
—பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்

திருப்புகழில் சந்த அமைப்பும், தாளங்களும்
—டாக்டர் சேலம் ஜெயலட்சுமி.

''தெய்வம் என்பதோர் சித்தம்''
—ஆசிரியர்.

பாற்கடல் கிடக்கும் பதுமநாபன்
—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி

நறையூர் நீலகண்ட நண்டர்
—மகாவித்துவான் பண்டிதநடேசனார், பி.ஏ., ஜே.பி.

சரணாகதியின் சிறப்பு
—பன்மொழிச் செல்வர் டி.வி. ஆர். சாரி, எம்.ஏ.,

மேற்கியல் வேதாந்தம்
—டாக்டர் டி.எம்.பி. மகாதேவன், எம்.ஏ. பிஎச்.டி

முருகன் அழகு
—'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன்.

சேவகக் கண்ணன்
—நா. வேணுகோபால்நாயகர், பி.ஏ., பி.எல்

இந்து சமயத்தின் உலகளாவிய இனியநல் இயல்பு
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்,.

இராமபிரானின் இனியதொரு குணம்
—மகாவித்துவான் பி.ப. அண்ணங்கராச் சார்ய சுவாமிகள்

பெரிய குந்தவையார்
—கே. எம். வேங்கடராமையா, எம்.ஏ., பி.ஓ.எல்.,

''வாழ்முதல் ஆகிய பொருள்''
—ஆசிரியர்

வள்ளலார் கண்ட சித்தமருத்துவம்
—டாக்டர் திரு. ச. செகசோதிபாண்டியன், B.I.M.

# சித்தாந்த நெறி

'மும்மொழிக் கொண்டல்'

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, M.A.,L.T., சென்னை.

'வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல் '(397) என்றார் திருமூலர். பின்னர் வந்த நம் சந்தானாசாரியரான அருள்நந்தி தேவரும் 'அருமறையாகமம் முதனூல்' (266) என்றார். 'வேதாந்தத் தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்' என்றும், பிறிதோரிடத்தில் அவரே கூறுகிறார். 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்றாம்' என்று, அவருக்குப் பின் வந்த சந்தானாசாரியாரான உமாபதி,சிவமும் அதே கருத்தைத் தெளிவுபடுத்துகின்றார். ஆகவே சைவசித்தாந்தத்திற்குப் பிரமாண நூல்களாக நாம் கொள்ள வேண்டியவை, நால் வேதமும், இருபத்தெட்டு சிவாகமங்களும், பதினான்கு தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்களுமாம் என்று பெறப் பட்டது.

வேதங்களும் சிவாகமங்களும் இறைவனாகிய நம் சிவபெருமானால் அருளப்பட்ட காரணத்தினாலேயே, அவை பிரமாண நூல்களாக ஆகின்றன. இவ்விரண்டையும் ஒரு சேர வைத்தெண்ணுகின்ற நம் சமயாசாரியர்கள் திருவாக்கும், இதற்கு அரண் செய்வதாய் அமைந்துள்ளது. திருஞானசம்பந்த மூர்த்திகள் 'தொகுத்தவன் அருமறை அங்கம், ஆகமம் வகுத்தவன்' (3.2.6) என்றும், 'ஆறு சமயங்களும் விரும்பி அடிபேணி அரன் ஆகமம் மிக்க கூறும்' 3.79.6) என்றும் கூறியுள்ளார். அப்பர் பெருமான், 'நாலு வேதம் சரித்தது நன்னெறி நாலு..'' (5.89.4) என்ற இடத்தில், நான்கு வேதங்களையும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு நெறிகளை விரித்துக் கூறும் ஆகமங்களையும் அருளியவன் எம்பெருமான் என்று அறிவித்துள்ளார். சுந்தரரும், திருநொடித்தான் மலையில் வீற்றிருக்கும் பெருமானைத் துதிக்கின்றபோது (7-ஆம் திருமுறை பக். 257) 'அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள் விரவிய வேத ஒலி' என்று வேதாகமங்களைக் குறிப்பிடுகிறார். மாணிக்கவாசகரும், 'மகேந்திரமதனிற் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளிய பெருமான்' என்றும்,'மூவா நான்மறை முதல்வா' என்றும் போற்றுவதைப் பார்க்கிறோம். காரைக்காலம்மையாரும்'வேதப் பொருளை வேதத்துக் காதியானை' என்று திருவிரட்டை மணிமாலையில் துதிக்கின்றார். சேக்கிழார் பெருமானும் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில், ''எண்ணில் ஆகமம் இயம்பிய''இறைவனைக் குறிப்பிடுகின்றார் (51). இக்கூற்றுகளிலிருந்து சமயாசாரியர்களும் சந்தானாசாரியர்களும் எப்படி வேதாகமங்களைப் பொன்னேபோல் போற்றி வந்தனர் என்பது புலனாகும்.

திருமூலரின் கருத்தை யொட்டி, பிரம்ம சூத்திரத்திற்கு உரைவகுத்த சிவாத்வைத வாதியான சீகண்டரும், ''சிவ பெருமனிடமிருந்து வந்தது (ஆகமம்) என்பதால் வேதத்தையே 'ஆகமம்' என்று கூறுவாரும் உண்டு. ஆயினும் வேதம் மூவருணத்தாருக்கு மட்டும் உரியது, சிவாகமமோ எல்லா வருணத்தாருக்கும் உரியது. இவ்விரண்டையும் அருளியவன் சிவனாதலால், இவ்விரண்டிற்கு மிடையே வேறுபாட்டை யாம் காணவில்லை'' என்கிறார்.

திருவதிகை மனவாசகங் கடந்தார், வண்மை தரும் ஆகமநூல் வைத்தபொருள் வழுவா உண்மை விளக்கம் உரை செய்யப்புகுவதாக, நூலின் காப்புச் செய்யுளில் கூறுவதைக் கொண்டு, சிவாகமங்களுக்கும் சித்தாந்த சாத்திரங்களுக்கும் உள்ள தொடர்பைக் காணலாம். சிவஞான சித்தியாருக்கு உரை வகுத்த சிவாக்கிரயோகிகளும் 'சிவாகமப் பொருள்களையெல்லாம் திருமுனிவர் சிவஞான சித்தியென்று செப்பினர்' என்று கூறியிருப்பதையும் நோக்குக.

வேதங்களும் சிவாகமங்களும் சைவசித்தாந்திகளுக்குப் பிரமாண நூல்கள் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டபோதிலும், எந்த அளவிற்கு இவை மெய்கண்ட சந்தானத்தில் தோற்றுவிக்கப்பட்ட நூல்களுக்கு அரண் செய்கின்றனவோ, அந்த அளவிற்கே அவை கொள்ளத்தக்கன என்பதையும், நாம் நினைவில் இருத்திக் கொள்ளத்தகும். வேதப் பகுதிகளில் ஒரு சிலவே, சமயாசாரியர்களும் சந்தானாசாரியார்களும் வகுத்துத் தந்துள்ள சைவ சித்தாந்தத்திற்குத் துணையாவன. அவற்றைக் காட்டிலும் மிகுதியான அளவில் சிவாகமங்கள் சித்தாந்தத்திற்குத் துணை செய்வனவாக நாம் காணலாம். சிவாகமங்களுக்குள்ளும், சித்தாந்தக்

கொள்கைக்கு முற்றிலும் ஒவ்வாத பகுதிகள் இருக்கின்றன.

இந்த நிலையில் வேதங்களும் ஆகமங்களும் சிவன் அருளியவை என்றால் அதை எப்படி ஏற்றுக் கொள்வது என்ற ஐயம் எழலாம். இதற்கு விடை ''வேதாந்தத் தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம்' (சித்தியார்—சுப 267) என்ற சொற்றொடரில் அமைந்துள்ளதை ஞானப்பிரகாசர் கூறுவது போல, 'சித்தாந்தத்திற்கு விரோதமாகாத வேதாந்தப் பொருள் குறிக்கும் பகுதிகள்' என்ற வகையில் நாம் காணலாம். இக்கருத்து காமிகாகமத்திலேயே வலியுறுத்தப்படுகிறது — 'வைதிகம் சர்வ சங்கிராயம் சைவ வாக்யா விரோதி யத்'. இதன் பொருள், 'சைவ சாத்திரங்களுக்கு முரணாகாத எந்த வேத வாக்கியம் உளதோ அது கொள்ளத் தக்கது' என்பதாகும்' வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்' என்ற உமாபதி சிவத்தின் வாக்கும் இங்கே நினைவு கூரத் தக்கது. 'வேதாந்தத்தில் மயக்கந் தருகின்ற தெளிவற்ற பகுதிகள் இருக்கின்றன. அவரவர் தத்தம் கொள்கைக்கேற்ப வலிந்து பொருள் கொண்டு மக்களை மயங்கச் செய்கின்றனர். உபநிடதங்களின் தெளிந்த பொருளைச் சுருதி, யுக்தி, அநுபவம் என்பனவற்றின் துணைகொண்டு தெளிவுபடுத்துவது சைவ சித்தாந்தத் திறன்' என்று அவர் கூறுகிறார். அப்படியானால் முரண்பட்ட கருத்துக்களை அத்வைதிகள், விசிஷ்டாத்வைதிகள் போன்றோர் போற்றும் வகையில் அமைத்து அவ்வேதப் பகுதிகளைச் சிவபெருமான் அருளியிருப்பது எங்ஙனம்? என்ற வினா எழுகிறது.

சைவசித்தாந்த பரிபாஷையின் ஆசிரியரான சூரிய சிவாசாரியர் கருத்து, இவ்வினாவிற்கு விடை காண முற்படுகிறது. 'வேதத்தில் கூறப்படும் காமிய கருமாக்களையும், பஞ்சாக்கரி மந்திரத்திற்கு மாறுபட்ட முறையில் வேதத்தில் விதிக்கப்பட்ட உபாசனா முறைகளும், சித்தாந்தத்திற்கு ஒவ்வாத சீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தைக்கூறும் பகுதிகளும்பிரமாணமாகா. அவையெல்லாம் அபக்குவான்மாக்களின் தரத்திற்கேற்ப ஆக்கப்பட்டவை. அவர்கள் ஆன்மீகத்துறையில் அடைந்துள்ள படிநிலைகளுக்கேற்ப அவ்வப்பகுதிகள் அவர்களுக்குப் பிரமாணமாகும். சோபான முறையில் அப்படி நிலைகளைக் கடந்து, அவர்கள் வேதாந்தம் என்ற கிளையின் உச்சியில் பழுத்த சைவ சித்தாந்தம் என்னும் நறுங்கனியைச் சுவைக்கும் பக்குவத்தை அடைவதற்காக, நம் பெருமான் அருள்கூர்ந்து அருளப்பெற்றவை, அவ் வேதவேதாந்தப் பகுதிகள் என்று கொண்டால், வேதாகமங்கள் அனைத்தும் அவரவர்களுக்குப் பிரமாணமாம் என்பதை அறியலாம். பாச ஞானம் மிகுதியும் கொண்டது வேதமும், அபரஞானம் மிகுதியும் கொண்டது ஆகமமுமாகும். எனினும் இவ்விரண்டின் இயல்பையும் இன்றியமையாத் தன்மையையும் உணர்ந்த அருள் நந்தி சிவாசாரியார் 'வேதாகமங்களின் குறியிறந்து விளங்கும் சிவனடி'யைப் போற்றியுள்ளதைப் பார்க்கிறோம்.

அக்கினி, சூரியன், வருணன் முதலான தேவர்களை ஆராதிப்பதையே வேதம் முக்கியமாகக் கொள்வதால் அதைப் பொதுநூல் என்றும், சிவனையே முழுமுதற் பொருளாகக் கொள்ளும் சிவாகமம் சிறப்புநூல் என்றும் சித்தியார் கூறியுள்ளதை, இங்கே நாம் நினைவு கூர்தல் தகும். பொதுவான கூற்றுக்கும் சிறப்பான கூற்றுக்கும் முரண் ஏற்படும்போது,சிறப்பான கூற்றையே மேற் கொள்ள வேண்டும் என்பது, சாத்திரங்களில் கடைப்பிடிக்கப்படும் நியாயம். இதை நாம் இங்கே பின்பற்ற வேண்டும். மேலும் உலகத்தவர்க்கு ஏற்பட்ட பொதுநூல் வேதம். சத்தி நிபாதர்க்கு ஏற்பட்ட சிறப்புநூல் சைவம். (சித்தியார், 8-267)

இருக்குவேதத்தில் உருத்திர தேவதையை நோக்கி, 'உமது பாணங்கள் எங்கள் எதிரிகளின் மீது செல்லட்டும். நல்லவீரர்களை எங்களுக்குப் புத்திரர்களாக அளியுங்கள்' என்று கூறும் மந்திரம் பாசஞானத்தின்பாற்பட்டது. 'அகம் பிரம்மாஸ்மி' என்று 'நானே பிரமம்' என்று தருக்கிக் கூறும் கூற்று பசுஞானத்தின் பாற்பட்டது. இவை சைவ சித்தாந்திகளுக்குப் பிரமாணமாகா. மூன்று வேதங்களின் நடுவில் அமைந்த எசுர் வேதத்தின் நடுவில் காணப்படும் திருவுருத்திரம் சைவர்களுக்கு உரித்தான பகுதி. அதிலும் நடுவில் அமைந்துள்ளது பஞ்சாக்கர மந்திரம். இவ்வேதப்பகுதி கொள்ளத்தக்கது. அதே போல் சுவேதாசுவதர உபநிடதத்தில் 'தம் ஈச்வராணாம் பரமம் மகேச்வரம், தம் தேவதாநாம் பரமம் ச தைவதம், பதிகம் பதீநாம் பரமம் பரஸ்தாத், விதாம தேவம் புவனேசம் ஈட்யம்' (ஈட்யம்-போற்றத்தக்கவர்) என்ற மந்திரம் (6-7) தேவர் கோனாகிற மகேசுவரன் பிரபஞ்சத்தைக் கடந்தும் அதனை ஆண்டும் வருகின்ற நிலையைக் கூறும் பகுதி. இது நாம் கூறும் பதியிலக்கணத்திற்கு ஒத்த முறையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

ஆகமங்களை எடுத்துக் கொண்டாலும் காச்மீர சைவம் அறுபதுக்கும் மேற்பட்ட ஆகமங்களை ஏற்றுக் கொள்கின்றது. திருமூலர் இருபத்தெட்டு ஆகமங்களைக் (57) குறிப்பிட்ட போதும், நந்தி பெற்ற நல்லாகமங்கள் பத்தைப் பெயரிட்டுக்குறிப்பிடுகின்றார். அவை காரணம் காமிகம், வீரம், சிந்தம்,வாதுளம், வியாமளம், சுப்பிரம் (சுப்பிரபேதம்), மகுடம் என்பனவாகும். (63) காச்மீரத்தில் பயின்று வரப்பட்ட ஆகமங்களுள் மாலினீவிஜயம், ஸ்வச்சந்தம், விஞ்ஞானபைரவம், உச்சஸ்மபைரவம், ஆனந்தபைரவம், மிருகேந்திரம், மதங்கம், நேத்ரம், நைசுவாசம், சுவாயம்புவம், ருத்ரயாமளம் ஆகியவை சில. இவை காச்மீர சைவம் தோன்றிய 9ஆம் நூற்றாண்டுக்கு முன்பே இருந்தவை. 'இறையும் உயிரும் இயல்பால் வேறுபட்ட இரு நித்தியப் பொருள்கள்' என்ற கருத்தைப் பண்டைக்காலம் முதல் தென்னாட்டுச் சைவம் போலவே காச்மீரத்தில் வாழ்ந்த சைவர்களும் கருதிவந்தனர். ஆனால் அத்வைதச் சார்பு பெற்ற சைவம், காச்மீரத்தில் தோன்றிய பின்னர் வந்த க்ஷேமராஜர், தாம் எழுதிய சுவச்சந்தாகம உரையில்', 'சுவச்சந்த தந்திரத்திற்கு (ஆகமத்திற்கு) வழி வழியாக வந்த வியாக்கி

யானம் தரப்பட்டு வந்துள்ளது. அதனால் விளைந்த அறியாமையைப் போக்க எழுந்தது, அத்துவைதாமிருதத்தைப் பெருக்கும் எனது 'உத்யோதம்' என்ற உரை' என்று ஒளிவு மறைவில்லாமல் கூறுவதிலிருந்து, தென்னாட்டில் வழங்கி வந்தது போன்ற சைவக் கொள்கை, சங்கரர் 8-ஆம் நூற்றாண்டில் காச்மீரத்தில் அத்வைத மடம் ஏற்படுத்திய பின்னர் அந்த வாடை பட்டுக் காச்மீரத்தில் சைவம் அத்துவைத நெறியால் ஓரளவு தாக்குற்று மாறுபாடடைந்திருக்கக் கூடும் என்றுஎண்ணுவதற்கு இடமுண்டு. இன்றும் மும்மலத்தையும் பஞ்சகிருத்தியத்தையும் உடன்பட்டுப் பேசும் காச்மீர சைவம், சிவபெருமானே தன் சங்கற்பத்தால் அவ்வப்போது பிரபஞ்சமாகத் தோன்றுகிறான், அவனே இப்பிரபஞ்சம், இப்பிரபஞ்சமே அவன் என்ற வகையில், இரண்டுமே இயல்பில் ஒரு பொருளே என்ற அத்வைதக் கொள்கையை வலியுறுத்தி வருகின்றது. ஆயினும் அத்வைதத்தைப் போலன்றி, இப்பிரபஞ்சம் மித்தையல்ல, உண்மைப் பொருளே என்றும் பேசுகின்றது.

இதுகாறும் கூறியவற்றால் வேதங்களும் ஆகமங்களும் இறைவன் நூல் என்ற காரணத்தால் முதனூல்களே ஆயினும், அவனருளுபதேசத்தால் நந்திமரபில் வந்த சிவாகமங்களும், அச்சந்தான பரம்பரையில் வந்த சந்தானாசாரியார் நூல்களும், சிவனருள் பெற்ற சமயாசாரியார்களின் தோத்திரங்களும், சித்தாந்திகளுக்குரிய பிரமாண நூல்களாகும் என்றும், சித்தாந்திகளுக்கொவ்வாத வேதாகமப் பகுதிகள் அந்தந்தப் படிநிலைகளில் உள்ளோர் உய்யப் பெருமானால் அருளப்பட்டன என்றும், இச் சித்தாந்த நெறி பண்டைக்காலத்திலேயே காச்மீரம் முதல் கன்னியாகுமரி வரை பரவியிருந்தது என்றும் தெளியலாம்.

---

நூல்கள் அறிமுகம்

## திருமகள் திருவந்தாதி

இந்நூல் சேலத்திற்கு அருகில், கெஜ்ஜல் நாயக்கன் பட்டியில் அமைந்துள்ள இந்து சமயக் கல்லூரியின் முதல்வர், புலவர் திருக்குறள் திரு. சி. இராமசாமி அவர்களால் இயற்றப் பெற்றது. 100 பாடல்கள் கொண்டது. அந்தாதி முறையில் அமைந்தது. இந்நூலுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியிருந்த திரு.கோ. சுப்பிரமணியபிள்ளை, எம்.ஏ., பி.எல். அவர்களும், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களும், பாராட்டுரை வழங்கியுள்ளனர். இந்நூலுக்குப் புலவர் திரு. து. அ. சீனிவாசன் அவர்கள் சிறந்த முறையில் உரை எழுதியிருக்கின்றார். திருமகள் பற்றிய இந்நூல், அன்பர்கள் பாராயணம் செய்து, திருமகளின் அருளைப் பெற்று வளம் பெற்று வாழ்வதற்குத் துணைபுரியத் தக்க நல்ல கவிதை நூல் ஆகும். நூல் திருத்தமாக, அழகுறப் பதிக்கப் பெற்றுள்ளது. விலை ரூ. 3.

கிடைக்குமிடம் : **சமயப் பிரச்சார நிலையம், 7, நாராயணராசு தெரு, சேலம்–636 001**

---

## இந்து சமயம்

"இப்பரதமாகண்டத்தில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற சாருவாகம், பௌத்தம், சமணம், மாயாவாதம், வைஷ்ணவம், சைவம் என்றற் றொடக்கத்துச் சமயங்களெல்லாம் இந்து சமயங்களென்று பெயர் பெறுகின்றன.

இவ்விந்துசமயத்தின் பிரிவுகளான சாருவாகம், பௌத்தம், சமணம், மாயாவாதம், வைஷ்ணவம், சைவம் முதலிய சிறப்புச் சமயங்களெல்லாம் அழிந்தொழியினும், அன்றி வேறு சில சமயங்கள் புதிதே முளைப்பினும், இவற்றிற்கெல்லாம் பொதுவாக விரிந்து, இவைதம்மையெல்லாம் தன்கண் அடக்கிக் கொண்டிருக்கும் இயல்புடையதான இந்துசமயம், என்றும் உள்ளதாகவே விளங்கும்'.' —அருட்திரு மறைமலையடிகளார்.

# சைவ சமயம்

'திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்'

*பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்,*

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

உலகில் வழங்குந் தொன்மையான சமயங்களுள் முதல்வரிசையில் வைத்து எண்ணத்தக்கது சைவம். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் ஆதலின் சைவம் என்பது காரணப்பெயர். கி.மு. 5000 ஆண்டுகட்கு முன்னரே பாரத நாட்டில் சிவலிங்க வழிபாடு நிலைபெற்றிருந்ததென்பது சிந்து நதிக்கரையின் அகழ்வாராய்ச்சியால் நன்கு புலனாகின்றது. தொல்பழங்காலத்திலேயே சிவலிங்க வழிபாடு உலகமுழுவதும் பரவியிருந்ததென்பதற்கு மேலை நாடுகளிலும் கீழைநாடுகளிலும் ஆங்காங்கே அருகிக் காணப்படுகின்ற சிவலிங்கத் திருவுருவங்களே சான்றாகவுள்ளன.

மக்கள் வாழும் நிலத்தியல்புக்கு ஏற்ப அவர்தம் மனத்தியல்பாகிய தெய்வக் கொள்கையும் வழிபாட்டு முறைகளுந் தோன்றி நிலைபெறுவனவாதலின் தெய்வக் கொள்கையினைக் கருப்பொருள்களுள் முதலில் வைத்து எண்ணுதல் தமிழிலக்கண மரபாகும். இந்நுட்பம்,

'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ,
அவ்வகை பிறவுங் கருவென மொழிப'

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால் விளங்கும். காடுறையுலகமாகிய முல்லை நிலத்தில் திருமால்வழிபாடும், மைவரையுலகமாகிய குறிஞ்சி நிலத்தில் முருகன் வழிபாடும், தீம்புனலுலகமாகிய மருதநிலத்தில் இந்திரன் வழிபாடும், பெருமணலுலகமாகிய நெய்தல் நிலத்தில் வருணன் வழிபாடும் தோன்றி நிலைபெற்றன. இவ்வழிபாடுகளோடுவெற்றிவிளைவிக்குங் கொற்றவை வழிபாடும், மறவர்களால் நிகழ்த்தப்பெற்றது. 'சிறந்த கொற்றவைநிலை' என்றார் தொல்காப்பியனார். நிலப்பாகுபாடின்றி எல்லா நிலத்துக்கும் உரிய நிலையில் எங்கும் நீக்கமற நிறைந்த முழுமுதற் பொருளைக் 'கடவுள்' என்ற பொதுப் பெயராற் போற்றுவர் தொல்காப்பியனார்.

மக்கள் முதலிய உயிர்கள் வினைவயத்தாற் கட்டுண்டு அறிவு மறைக்கப்பட்டு இருள் நிலையில்நின்று இருவினைகளைச் செய்து இன்ப துன்பங்களை நுகர்கின்றன என்பதும், தூய மெய்யுணர்வே தனக்குரிய திருமேனியாகக் கொண்டு,வேண்டுதல் வேண்டாமையிலானாதலின், இயல்பாகவே பாசங்களின் நீங்கி நின்று தானேவிளங்கிய முற்றுணர்வினனாய்த் திகழ்வோன் இறைவன் ஆதலின், அவனருளால் அருளிச் செய்யப் பெற்றதே முதனூல் என்பார்,

'வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்'

என்றார் தொல்காப்பியர். இறைவன் ஞானமே திருமேனியாகவுடையான் என்பதனை 'வாலறிவன்' என்ற பெயரால் குறித்தார் திருவள்ளுவர். கடவுள் என்னுஞ் சொல் இன்னவுரு என்று அறியவொண்ணாத நிலையில் எல்லாத் தத்துவங்களையும் கடந்து உலகு உயிர்களாகிய எல்லாப் பொருள்களையும் ஊடுருவி நின்று இயக்கும் முழுமுதற் பொருளைக் குறித்து வழங்கும் காரணப்பெயராகும். எல்லாப் பொருளையும் இயக்குபவன் என்ற கருத்தில் இயவுள் என்பதும், யாண்டும் பொருள்தோறும் நீக்கமற நிறைந்து விளங்குபவன் என்ற கருத்தில் இறைவன் என்பதும் தெய்வத்தைக் குறித்து வழங்கும் காரணப்பெயர்களாகும். கடவுளைக் குறித்த இறைவன் என்னும்சொல் வேண்டுதல் வேண்டாமையிலானாகிய அம்முதல்வனைப் போன்று யாவரிடத்தும் விருப்புவெறுப்பின்றி ஆட்சிபுரியும் வேந்தனுக்குரிய பெயராகவும் ஆளப்பெற்றது. இவ்வுண்மை,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்

எனவரும் திருக்குறளாற் புலனாம். இறைவேறு மன்னன் வேறு என்பதும் மன்னனுக்கு

---

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் காந்தியியல், இராமலிங்கர் தத்துவச் சிந்தனை வகுப்புச் சிறப்புச் சொற்பொழிவின் சுருக்கம்.

இறையென வழங்கும் பெயர் உபசார வழக்கே என்பதும் இத் திருக்குறளால் நன்கு புலனாகும்.

எல்லா நிலத்திற்கும் மேலாய் உயர்ந்து தோன்றும் மலைநிலத்தில் தோன்றியசேயோன் வழிபாட்டின் வளர்ச்சியே சிவ வழிபாடென்பதும், முல்லைநிலத் திருமால் வழிபாட்டொடும் சிவவழிபாட்டொடும் தொடர்புறும் நிலையில் அமைந்ததே கொற்றவை வழிபாடென்பதும், நானிலத்தில் உருப்பெற்று வளர்ந்த தெய்வவழிபாடுகளின் திரட்சியாய் வளர்ந்து உருவாகிய சமயதத்துவமே சைவம் என்பதும், தமிழக வழிபாட்டு முறைகளையும் தமிழகத் தொன்னூல்களையும் இடைக்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய தெய்வப் பனுவல்களையும் ஒப்பிட்டு ஆராய்வார்க்கு இனிது விளங்கும்.

தொல்காப்பியத்திலும் இப்பொழுது கிடைத்துள்ள சங்க இலக்கியங்களிலும் பயின்றுள்ள கடவுள் இறைவன் என்னும் பெயர்கள் சிவனைக் குறித்தனவாக அமைந்துள்ளன. 'புல்லிலையெருக்கமாயினும் கடவுள் பேணேமென்னா' என்னும் புறநானூற்றுத் தொடரும், 'இறையோன் தருக திருநுதலாகென' என்னும் சிலப்பதிகாரத் தொடரும் இக்கருத்தை வற்புறுத்தும் சான்றுகளாகும். இப்பெயர்கள் பிற்காலத்தில் எல்லாச் சமயத் தெய்வங்களையும் குறித்து வழங்கும் பொதுப்பெயர்களாகவும் ஆளப்பெற்றுள்ளன. இறைவனை உருவநிலையில் அன்றி உண்மைநிலையிற் குறித்துப் போற்றும் செம்பொருள் சிவம் என்னும் பெயர்கள் முற்காலத்தில் சைவசமயக் கடவுளுக்கே யுரியனவாய் வழங்கின என்பது,

'சிவனெனும் நாமந் தனக்கே யுடைய
செம்மேனி யம்மான்'

எனத் திருநாவுக்கரசரும்,

'செம்மேனிப் பேராளன் வானோர் பிரான்'

எனக் காரைக்காலம்மையாரும்அருளியதொடர்களால் நன்கு வலியுறுத்தப்படுதல் காணலாம். 'சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பதறிவு' எனவரும் திருக்குறளிற் செம்பொருள் எனப் பெற்றது சிவபரம்பொருளே என்னும் உண்மையினை,

'செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே'

எனவரும் திருவாசகத் தொடர்கொண்டும் உணர்ந்துகொள்ளலாம்.

தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோன், ஆலமர்செல்வன், முக்கட்செல்வன், காரியுண்டிக் கடவுள், மழுவாள் நெடியோன், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், காலக்கடவுள் முதலாகப் பலவேறு சிறப்புப்பெயர்களாற் சங்கவிலக்கியம் சிவபெருமானைப் போற்றிப் பரவுகின்றது. 'பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்' என இளங்கோவடிகளும், 'நுதல் விழிநாட்டத்து இறையோன்' எனமணிமேகலையாசிரியரும், சிவபெருமான் வழிபாட்டினைத் தமிழகத் தெய்வ வழிபாடுகள் எல்லாவற்றிலும் முதன்மையுடையதாகக் குறித்துள்ளார்கள். தமிழகத் தெய்வ வழிபாடுகளில் சிவவழிபாடே தலைமையுடையதாகச் சிறந்து விளங்கியதென்பது, தமிழக வரலாறு, இலக்கிய வரலாறு, தமிழகக் கோயில்வரலாறு முதலியவற்றை ஆராய்வார்க்கு இனிது விளங்கும்.

நிலங்கடந்த வழிபாட்டளவில் பொதுமையமைப்பில் உருவாகிய சிவ வழிபாடு, முப்பத்தாறு தத்துவங்களையும் இணைத்துநோக்கும் நிலையில், சைவ சித்தாந்த சமயமாகவளர்ந்து நிறைவு பெற்றகாலம், திருமூலர்காலம் எனக் கொள்ளலாம். பாரதநாட்டுச் சமயங்களுள் இருபத்தைந்து தத்துவப்பகுப்பு சாங்கிய தத்துவத்தில் அமைந்துள்ளமை பலரும்அறிந்த உண்மையாகும். இருபத்தைந்தினும் அடங்காது அவற்றின் மேலுள்ள தத்துவவுண்மைகள் சில,

''காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்'

எனவரும் தொல்காப்பிய நூற்பாவில் இடம் பெற்றிருத்தல் காணலாம். இவை எல்லாவற்றையும் உளங்கொண்டு வரையறுக்கப்பெற்ற தமிழகத்துத் தத்துவக்கொள்கையே சைவ சித்தாந்தமாகும். தத்துவ இலக்கணமாகிய இக்கொள்கை சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளிற் புலனாக வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர்கள் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் நாயன்மார்கள் ஆவார்கள். அவர்களில் திருமூலரும், காரைக்கால் அம்மையாரும், தேவார ஆசிரியர் மூவரும் மாணிக்கவாசகரும் திருமுறையாசிரியர்களும் அருளிச் செய்த தோத்திரப்பனுவல்கள் சைவர்களால் வழிபடப் பெறும் சிவபரம்பொருளின் இயல்பினை விரித்துரைக்கும் திருவருளிலக்கியமாகத் திகழ்கின்றன. சைவ சமயச் சான்றோர்களின் வரலாறும் சைவத்திருமுறைகளின்பொருள்நலனும் சரியை கிரியை யோக ஞானம் என்னும் நால்வகை நெறிகளின் இயல்பும் சைவ சமய தத்துவவுண்மைகளும் விளக்கும் வரலாற்றுக் காப்பியமாகச் சேக்கிழார் நாயனார் அருளியது திருத்தொண்டர் புராணமாகும்.

பன்னிரு திருமுறைகளாகிய இலக்கியத்திலிருந்து உருவாகிய திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய பதினான்கு நூல்களும், சைவ சித்தாந்த சாத்திர உண்மைகளைத் தெளியவுணர்த்தும் மெய்கண்ட நூல்களாகத் திகழ்கின்றன. இவற்றில் விரித்துரைக்கப்படும் தத்துவ உண்மைகளை உறுதிப்படுத்தும் முறையில் உலகப் பொதுமறையாகிய திருக்குறளும், இயற்றமிழ் நூலாகிய தொல்காப்பியமும், சங்கச் செய்யுட்களும் சிலப்பதிகாரமும் மணிமேகலை முதலிய செந்தமிழ்க் காப்பியங்களும் உறுதுணை செய்கின்றன.

அருணகிரிநாதர் முதல் தாயுமானவர், அருட்பிரகாசவள்ளலார் வரையுள்ள பெருமக்கள் அனைவரும் பாடியருளிய திருப்பாடல்கள், திருநெறி யாகிய சைவசமயத்தின் சிறப்பினையும் தத்துவ வுண்மைகளையும் சாதிசமய வேறு பாடின்றி அனைவருக்கும் நலம்பயக்கும் சமரச நெறியினையும் யாவருக்கும் விளங்க விரித்து விளக்கும் உலகியல் இறையியல் தத்துவங்களையும் விளக்கும் விளக்க நூல்களாக அமைந்துள்ளமை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தகுவதாகும்.

தமிழகச் சைவசித்தாந்த நுட்பங்களை விளக்கும் நிலையில் வடமொழியில் இயற்றப் பெற்ற சிவாகமங்களும் உபநிடத நூல்களும் ஒருங்கே துணைபுரிதலும் எல்லாவற்றிற்கும் முதன்மையாக வேதத்தினை உடன்பட்டு வேதத்தொடர்கள் சிலவற்றுக்குச் சித்தாந்த நோக்கில் பொருள் விரித்துரைத்தலும், குமரி முதல் இமயம்வரை நின்றுநிலவும் தத்துவக் கொள்கை சைவசித்தாந்தமே என்ற உண்மையை வற்புறுத்தல் காணலாம்.

சமயவாதிகள் கூறும் தத்துவவுண்மைகளை அறிந்துகொள்ள விரும்பிய மணிமேகலை, இறைவன் ஈசன் என்னும் கொள்கையில் நிலை பெற்றொழுகிய சைவ வாதியை நேர்பட்டு, நின்னாற் போற்றப்பெறும் தெய்வத்தின் இலக்கணம் யாது என வினவிய நிலையில், அவளை நோக்கிச் சைவவாதி தான் வழிபடும் இறைவனது இலக்கணத்தினைத் தொகுத்துக் கூறுவதாக அமைந்தது.

''இருசுடரோடு இயமானன் ஐம்பூதம் என்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனும் கலையுருவி னோனும்
படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தான்ஒன்றில் லோனும்
அன்னோன் இறைவன் ஆகும்''

எனவரும் மணிமேகலைத் தொடராகும். ''ஞாயிறு திங்கள் ஆன்மா நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என்னும் எண் பேருருவினனாகவும், உயிரும் உடம்பும்போல உலகுயிர்களின் உள்ளும் புறம்பும் வியாபித்துள்ள அவற்றைப் பிணித்து நின்று உலகுயிர்களை இயக்கி நிற்பவனும், கலைகளே வடிவமாகத் திகழ்பவனும், தன்னையன்றித் தனக்குரிய சார்பாக (ஆதாரமாக)ப் பிறிதொன்றின்றி எல்லாப் பொருட்கும் தானே சார்பாக விளங்குபவனும், ஆகிய அவ்வியல்பினையுடையவனே சைவர்களாற் போற்றப்பெறும் ஈசனாகிய இறைவன் என்பது, இத்தொடரின் பொருளாகும். இதன்கண் சிவபெருமான் உலகமே உருவமாக அட்ட மூர்த்தியாய் விளங்கும் பருமை நிலையும், உயிர்க்குயிராய்ப் பொருள்தோறும் இரண்டறக்கலந்து உலகுயிர்களைத்தொழிற்படுத்தும் நுண்மை நிலையும், உயிர்களின் பொருட்டு உலகு உடல் கருவி நுகர்பொருள்களைப் படைத்து அளித்துக் காத்தலும் கறங்கோலை போலப் பிறப்பிறப்புக்களிற் பட்டுச் சுழன்று களைத்த உயிர்த்தொகுதிகளின் களைப்பு நீங்குதற்பொருட்டு அழித்தலும் ஆகிய தொழில்களைச் செய்து அவ்வுயிர்களின் துயரகற்றி இன்பம் நல்கும் அருட்செயலும், தனக்குச் சார்பொன்றில்லாத இறைவனே உலகுயிர்கட்குச் சார்பாதலும் ஆகிய உண்மைகள் விளக்கப் பெற்றுள்ளமை காணலாம்.

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போல் பசுபாசம் அநாதி''

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

என்பது திருமந்திரம். பதி ஞானத்திரளாய் நின்ற பொருள். பசு, ஆணவம் கன்மம் மாயை என்னும் பாசங்களாற் பிணிப்புண்டு கிடத்தலால் தானே யுணரும் ஆற்றலின்றி இறைவன் உணர்த்தவுணரும் தன்மையனவாகிய உயிர்கள். பாசம் உணர்வற்ற சடப்பொருள். பதி ஒன்றே. உயிர்கள் பல.

ஆன்மாக்கள் ஒரு மலமுடைய விஞ்ஞான கலர், இருமலமுடைய பிரளயாகலர், மும்மல முடைய சகலர் என முத்திறப்படுவன. சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடையன.

''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு''

எனவரும் திருக்குறள் உயிரியல்பாகிய சார்ந்ததன் வண்ணமாந் தன்மையினைப் புலப்படுத்துதல் காணலாம்.

பாசங்களாவன உயிர்களைப் பிணித்துள்ள ஆணவம் கன்மம் மாயை என்பன. இவற்றுள் ஆணவமென்பது செம்பிற்களிம்பு போன்று உயிர்களை அநாதியே பற்றி நின்று உயிர்களின் விழைவு அறிவு செயல்களைத் தடை செய்து நிற்கும் இருள்மலமாகும். கன்மமாவது நெல்லுக்குள் முளைபோல் ஆன்மாவிற் பற்றியிருப்பதாய், கடலலை போன்று தொடர்ச்சியாய், அழிந்தும் ஆகியும் வருவதாய்ப் படைப்புக் காலத்தே செயற்படுவது. இது சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என மூவகைப்படும். அவற்றுட் சஞ்சிதமாவது பிறப்புக்கள்தோறும் ஆன்மாக்களால் ஈட்டப்பட்டு எழுத்து, சொல், சொற்றொடர், உலகம், தத்துவம், கலை என்னும் ஆறுவழிகளாலும் கட்டுப்பட்டிருக்கின்ற புண்ணிய பாவங்கள். பிராரத்தம் என்பது மேற்குறித்த புண்ணிய பாவங்களுள் நாம் எடுத்துள்ள இவ்வுடம்புகளால் முகந்து கொள்ளப்பட்டு நுகரும் வினைகள். ஆகாமியம் என்பது பிராரத்தம் நுகருங்கால் அவற்றிடையே விருப்பு வெறுப்புக்களால் வந்து ஏறும் வினைகள்.

காணப்படும் உலகிற்கு முதற்காரணமாவது மாயை என்னும் சடப் பொருளாகும். அது சுத்தமாயை அசுத்தமாயை என இருதிறப்பட்டமைந்த ஆற்றலின் திரட்சி. உலகம் மாய்தற்கும், மீள உண்டாதற்கும் மூலமாதல் பற்றி, இது மாயா (மாயை) எனப்பெற்றது. உலகம் மாய்தல் ஆதல் இரண்டிற்கும் நிலைக்களமாதலால், மாயை என்பது காரணப்பெயர்.

சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத கடவுளை உருவநிலையில் வைத்தன்றி அருவநிலையில் வழிபடுதல் என்பது எல்லாமக்களுக்கும் இயலாததாகும். பிறப்பிறப்புக்களையுடைய உயிர்த்தொகுதியைப் போலன்றி எல்லாப் பொருள்களோடும் கலந்து நின்றே அவற்றுள் ஒன்றினுந்தோய்வின்றி அப்பாற்பட்டு விளங்கும் முழுமுதற் பொருளை உலகியற் பொருள்களுக்குரிய உருவம் அருவம் அருவுருவம் என்னும் முக்கூறுகளிலும் அடங்குதல் இயலாது. எனவே வழிபடுவோர் தமது பக்குவ நிலைக்கேற்ப இம்மூவகைத் திருவுருவங்களில் ஒன்றை வழிபடுந் திருமேனியாகக் கொள்ளுதல் இயல்பே. அண்டத்தின் அப்புறத்தும் உயிர்களின் அகத்தும் ஒளியுருவில் திகழும்இறைவனை உயிர்கள் தம் உள்ளத்து அகத்தும் புறத்தும் வைத்துப் பூசிக்கும் முறையில் அமைந்தது, உருவமும் அருவமுங்கலந்த சிவலிங்கத் திருமேனியாகும். சிவலிங்கத்தின் பீடம் உயிர்களின் நெஞ்சத் தாமரையாகிய உருவநிலையினையும், பீடத்தின் மேல் ஒளிப்பிழம்பாகச் சுடர்விட்டு விளங்கும் பாணம் அருவ நிலையையும் குறித்தலால், இதனை அருவுருவத் திருமேனி என வழங்குதல் மரபாகும்.

'ஒருவனே தேவன்' என்றவாறு ஒவ்வொன்றிலுந்தோய்வற விளங்கும் தனிமுதற் பொருளாய்த் திகழும் இறைவனைச் சிவம் எனவும், அதனைவிட்டு நீங்காத அருட்சுடராய் உலகுயிர்கள் தோறும் ஊடுருவிக் கலந்துநின்று அவற்றை வளர்த்துப் பக்குவப்படுத்தும் ஆற்றலைச் சத்தி எனவும், ஒருமையின் இருமை நிலையுணர்ந்து ''நீலமேனி வாலிழை பாகத் தொருவன்'' ஆகப் போற்றிய தமிழ் முன்னோரது அருளனுபவம் உணர்ந்து பாராட்டத்தகுவதாகும்.



## சுந்தர ஓதுவா மூர்த்திகள் நினைவு விழா

சென்னை சைதாப்பேட்டை செங்குந்தகோட்டம் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத் திருமண மண்டபத்தில், 'தமிழிசைச் சான்றோர் —'திரு நெறித் தமிழிசை வேந்தர்'—'பண்ணிசை மன்னர்'—'தேவார நாயகம்'—திருநெல்வேலி சா. சுந்தர ஓதுவா மூர்த்திகள் நினைவுவிழா, அண்மையில் மிகச் சிறப்பாக இரண்டு நாட்கள் விமரிசையுடன் கொண்டாடப் பெற்றது. மயிலை மாமுனிவர் தவத்திரு குருஜி சுந்தரராமன் அவர்கள் தலைமையில், அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமண்யம், ஐ.ஏ.எஸ். அவர்கள், திரு சுந்தர ஓதுவா மூர்த்திகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். திரு கீ. இராமலிங்கனார், திருக்குறளார் வீ. முனிசாமி, டாக்டர் அவ்வை துரை. நடராசனார், திரு. மா. து. குப்புசாமி முதலியார், திரு. செந்தில் ஆறுமுகம், தேவாரம் நடராசன், தேவாரம் ரா. பாலசுந்தரம், டாக்டர் சேலம் ஜெயலட்சுமி, திருமதி வள்ளி நாயகி செந்தில், நடிகமணி திரு டி. வி. நாராயணசாமி, 'பைந்தமிழ்ச் செல்வர்' ச. சிவகுமார், 'புலவர் ஏறு' ந. ரா. முருகவேள், திரு. அம்பை சங்கரனார், திரு. ஊ. செயராமன், திரு. ஆ. விநாயக முதலியார், திரு. வ. உ. சி. சுப்பிரமணியம், கவியோகி சுத்தானந்த பாரதியார், திரு புரிசை சு. முருகேச முதலியார், திரு. அகிலன், திரு. ப. நாகேந்திரன், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு. எஸ். சாமிக்கண்ணு, அமுதசுரபி ஆசிரியர் திரு. விக்கிரமன், தீபம் நா. பார்த்தசாரதி, தினமணி துணை ஆசிரியர்கள் திரு. அரங்காச்சாரியார், திரு. சே. இராமாநுஜாசாரியார், டாக்டர் இ. சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். செல்வன் அரவிந்த இராமலிங்கம், திரு. கே. சோமு, செல்வியர் என். உமா, சரஸ்வதி, எஸ். மலர்க்கொடி ஆகியோர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

செந்தமிழ்ப் புலமை வாய்ந்தார்! தெய்விக இசைஞர் வேந்தர்!
சிந்தையைக் கவரும் சைவப் பேரெழில் செறிந்த தோன்றல்!
நந்தமிழ் இசையே பாடி, நலம்மிக வளர்த்த சான்றோர்!
சுந்தர ஓதுவா மூர்த்தி தொண்டுகள் போற்றி வாழ்வாம்!

—ஆசிரியர்.

# "கம்பனும், உலகியல் அறிவும்"

திரு. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், M.A., Ph.D. அவர்கள்,
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-20

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

''உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே''

— கடவுள் வாழ்த்து

'உலகம்' எனும் காப்பியத் தொடக்கத்திலேயே, கம்பனின் உலகளாவிய பார்வையின் தெளிந்த தோற்றம் அமைந்து விடுகின்றது. பழங்கதை யொன்றனைக் கருவாகக்கொண்டு காப்பியம் படைத்தபோதும், நடைமுறை வாழ்வியலை எண்ணற்ற உலகியல் கூறுகளை உட்பொதிந்து அமைத்தமையால், அப்படைப்பு ஒரு இயங்கும் நிகழ் உலகமாகவே அமைந்துள்ளது.

கம்பன் தன் காப்பியத்தில் பல இடங்களிலும் உலகியலைப் புலப்படுத்துகின்றான். அவன் எடுத்த கதையிலும் உலகியல் உண்டு. நல்லாட்சி-குழந்தை இன்மை பற்றிப் பெற்றோர் உறும் வருத்தம்-பெற்றோர்க்கு அடங்கிய குழந்தைகள் - மாற்றாந் தாயின் மனநிலை-காமத்தின் இழிநிலை-தன்னுயிரை அளிக்கும் அன்பு - இனம் கடந்த அருள் - விருந்தோம்பலின் ஈடில்லா இன்பம்-வரையாத உதவி-தன்னலமே நோக்கமான இழிதகவு-வஞ்சம் பொய்-போர்அழிவு-அறத்தின் வெற்றி என விரித்துக் கொண்டே செல்லலாம்.

கதையின் வாயிலாக உலகியலைப் புலப்படுத்துவதுடன் அமைந்துவிடாது இன்னும் பல்வகை வெளியீட்டு நிலைகளில் அதனைப் படைத்தளிக்கின்றான். இயல்வு உரைத்தல் வாயிலாக உலகியல் தரப்படுகின்றது, புனைந்துரை வாயிலாக -மிகுத்து மொழிதல் வழியாக உலகியல் அமைக்கப்படுகின்றது. வழிப்படுத்தல்-நெறிப்படுத்தல் வாயிலாகவும் உலகியல் புலப்படுகின்றது. கடிந்துரைத்தல் வழியாகவும் உலகியல் வெளிப்படுகின்றது. பாத்திரக் கூற்றாகவும், கவிஞரின் நேரடி வாய்மொழியாகவும், உலகியல் எண்ணங்கள் தரப்படுகின்றன. விலக்குதலும் வேண்டுதலுமான அறிவுரை நிலைகளிலும் இதனைக் காணலாம். பாத்திரங்களின் பண்பு நிலையிலும், பல்வகை வருணனையிலும் கூட, இதனைப் பார்க்கலாம். தொட்டவிடமெங்கும், பார்த்தவிடம் எங்கும் உலகியல்எண்ணங்கள் நிறைந்தமைவதால் இவ்இராமாயணத்தைப் பக்திக் காப்பியம் என்பதுடன் அமைந்துவிடாது உலகியல் காப்பியம் எனச் சிறப்பிக்கலாம்.

கவிஞன் நேரடிக் கூற்றாக உலகியல் எண்ணங்களைத் தரும் போதும், வெளிப்படையாக மட்டும் கூறாது வருணனை வாயிலாகவும் அளிக்கின்றான். கதை கூறும் போக்கில் அங்கங்கே தம்மை வெளிப்படுத்தும் காப்பியக் கவிஞரின் பொது இயல்பு கம்பனிடம் அமைகின்றது. ஐயுறவு நீங்கிப் பரதனை உணர்ந்து குகன், 'ஆயிரம் இராமன் நின் கேழ் ஆவரோ' (2337) எனப் புகழும் உணர்ச்சிமிக்க அன்பு குமிழியிட்டுப் பெருகும் சூழலில் கம்பன்தன்னை வெளிப்படுத்துகின்றான். 'ஆர் அவற்கு அன்பு இலாதார், நினைவு அரும் குணம்கொடு அன்றோ இராமன் மேல் நிமிர்ந்த காதல்' (2339) எனும் கவிஞனின் நேரடிக் கூற்றான வியப்புரையில் அன்பும் உயர்பண்பும் நிறைந்த உலகியல் வெளிப்படுகின்றது.

வருணனையில் உலகியல் பெரும்பாலும் உவமை வாயிலாகப் புலப்படுகின்றது எனலாம். சேது பந்தனத்தின்போது மலைகளும் மரங்களும் கடலில் மூழ்கும் காட்சி, சில உலகியல் எண்ணங்களைக் கவிஞன் மனத்தில் தோற்றுவித்ததால் அதனை அவன் உவமையாக இணைத்துக் காப்பியத்தில் பொருத்துகின்றான்.

பழுமரம் பறிக்கப் பறவைக் குலம்
தழுவி நின்று ஒருவன் தனித் தாங்குவான்
விழுதலும் புகல் அவற்று இடம் இன்மையால்
அழுது அரற்றும் கிளை என ஆனவால்(6729)

வேறு பற்றுக்கோடு இல்லாது, புரந்தவன் மரணத்தால் நிலைகுலைந்து கலங்கும் இயல்புலகியலின் பரிதாபமான காட்சியை இங்கு அமைக்கின்றான் புலவன்.

இயல்பான வருணனைக் காட்சியிலும், கவிஞன்தான் கண்ட, அறிந்த உலகியல் பற்றிய கருத்துக்களையும் கோட்பாடுகளையும் அமைக்கின்றான். பெண்டிர் இயல்பு பற்றிப் பல சூழலில் பலவிதமாகக் கம்பன் பேசுகின்றான். பொதுப் பெண்டிரை இழிதகக் கூறியது ஒருபுறமாக, கற்புடை மகளிரின் இயல்பையும்பண்பையும் சிறப்பித்து மொழிதல் மறுபுறத்தில் அமைகின்றது. கணவனிடம் பெற்ற அன்பை—நெருக்கத்தை, நெஞ்சம் நிறைந்து வழிந்த அதன் நினைவால், மற்றொருத்தியிடம்—தன் தோழியிடம் கூற நினைத்தலும், பேச நாணலுமாக எதையோ தொடங்கி ஏதோ பேசி நிற்கும் இயல்புக் காட்சியைக் கம்பன் உண்டாட்டுப் படலத்தில் படைப்பது பெண்ணியல்பைப் புலப்படுத்துகின்றது.

ஊறு பேர் அன்பினாள் ஒருத்தி, தன்உயிர்
மாறு இலாக் காதலன் செயலை, மற்றுஒரு
நாறுபூங் கோதைபால் நவில நாணுவாள்,
வேறுவேறு உறச்சில மொழி விளம்பினாள்
(1008)

இவ்வாறு இயல்புக் காட்சிகளின் மூலமாக உலகியலைப் படைத்து அளிப்பதுடன், மிகுத் துரைக்கும் உயர்வு நவிற்சிப் புனைவுகள் வாயி லாகவும், கம்பன் உலகியலைக் காட்டுகின்றான். இயற்கைக் காட்சிகள் பலவற்றைக் காப்பியக் களனில் அமைக்கின்றான் புலவன். அங்கெல் லாம் இயல்பான இயற்கையை அவ்வாறே படைக்காது, பல்வகையாகப் பதுக்கியும், அழகுறுத்தியும், இணைத்தும், வண்ணங்களால் இழைத்தும், வடிவங்களால் பொருத்தியும், குழலால் சிறப்புறுத்தியும் கவின் காட்சியாக்கு கின்றான்.

சடையப்ப வள்ளலின் கொடையாதரவி லும் அன்பு நிழலிலும் மனநிறைவும் இன்பமும் பொருந்திய வாழ்க்கை பெற்ற கவிஞன், உலகி யலின் அவ் இன்றியமையாக் கொடை வன்மை யைத் தான்புனைந்த இயற்கையிலும் போற்று கின்றான். கொடுப்பாரும் புரப்பாரும் இன்றி அறிவுக் கொழுந்தும் ஆற்றலுடைக் கவிதை வளமும், கரிந்து அழிந்த இளங்கவிஞரின் காட்சி ஒரு பக்கமாக, கேட்காமலே, விரும்பி வரையாது கொடுத்தவள்ளல் இயல்பு மறுபுற மாக அவன் புனைவை அழகுறுத்துகின்றன. கிட்கிந்தா காண்டம் கார்காலப் படலத்தின் இயற்கைப் புனைவில் மகிழ்ந்து அளிக்கும் வள்ள லின் உலகியலைக் காண்கின்றான் கவிஞன்.

நன்னெடுங் காந்தட் போதில்,
நறைவிரி கடுக்கை மென்பூ,
துன்னிய கோபத் தோடும்
தோன்றிய தோற்றம், தும்பி
இன்னிசை முரல்வ நோக்கி,
இருநில மகள் கைஏந்திப்,
பொன்னொடும் காசை நீட்டிக்
கொடுப்பது போன்ற தன்றே

கவிஞன் வருணனை வாயிலாக இவ்வா றெல்லாம் உலகியலைக் காட்டுவதுடன் தான் படைக்கும் பாத்திரங்கள் வழியும் உலகியலைப் புலப்படுத்தும் இயல்பினனாக அமைகின்றான். நல்ல பாத்திரங்களும் தீய பாத்திரங்களும் நன்மையும் தீமையுமாக அமைந்த உலகிய யலையே வெளிப்படுத்துகின்றன. தீய மக்கட் கூட்டத்தினரிடையேயும் ஓரிரு நல்லவர் அமை யும் வாய்ப்பு உண்மையை வீடணனும், திரி சடையும் காட்டுகின்றனர். முன்பின் எவ்விதத் தொடர்பு இல்லாதவரிடமிருந்தும் அன்பும் பண்பும் கலந்த உதவி புலப்படும் உலக இயல் பைக் குகனும், சுக்கிரீவனும் பிறரும் காட்டு கின்றனர். தன்னலமே நோக்கமாகிய சூழலில் ஈடுபடும் மக்களின் இயல்பு நிலையைக் கைகேயி சூர்ப்பணகை போன்றோரிடம் பார்க்கின்றோம். அன்புடையோருக்காக எதிர்நோக்கிக் காத்தி ருத்தலைச் சபரி வாயிலாக அறிகின்றோம், இவ்வாறு, கம்பனில் எங்கும் பாத்திரங்கள் பல உலகியல் பண்பு காட்டி அமைகின்றன.

கவிஞரின் நேரடிக் கூற்றில் உலகியல் வெளிப்பட்டது போன்றே, பாத்திரக் கூற்றாக வும் வாழ்வியல் எண்ணங்கள் வெளிப்படுத்தப் படுகின்றன. கவிஞரே கதை மாந்தர் வாயி லாக உலகியல் கருத்துக்களைப் புலப்படுத்துவ தாகவும் இதனைக் கொள்ளலாம். இராமனைப் பஞ்சவடியில் கண்டு காமுற்ற சூர்ப்பணகையின் சொற்களில்கூட உலகியலைப் பொருத்துகின் றான் கம்பன். காமுறினும் மகளிர் தாமே தம் அன்பை நுவலுதல் இல்லை எனும் உலகியல் நெறி இவள் பேச்சில் உணரப்படுகின்றது.

தாம் உறு காமத் தன்மை
தாங்களே உரைப்பது என்பது
ஆம்எனல் ஆவது அன்றால்,
அருங்குல மகளிர்க்கு அம்மா (2776)

பாத்திரத்தின் இயல்பான கூற்றாக அன்றி ஒரு நோக்கமோ குறிக்கோளோ பற்றி எழுந்த அறிவுரையிலும் உலகியல் சுட்டப்படல் மற் றொரு நிலையாகும். ஒரு குறிப்பிட்ட சூழலில் அல்லது தேவை ஏற்படுமிடத்து சிறியோருக் குப் பெரியோரும், இளையவருக்கு முதியவரும், புதியவருக்குப் பட்டறிவுடையவரும் அறிவுரை கூறுதலே உலகியல்தான். அவ் அறிவுறுத்த லும், அறிவியல் பற்றியும், வாழ்வியல் தொடர் புடனும் அமையுமிடத்து உலகியல் முற்றிலும் பொருந்துகின்றது.

தயரதன் விரும்பியதற்கேற்ப, அடுத்த முடி சூட்டுக்கு இராமனைத் தயார் செய்வது போன்று வசிட்டன் அவனுக்குப் பல உறுதிப் பொருண்மைகளைக் கூறுகின்றான். அரசிய லும், அறிவியலும், உலகியலும், உண்மையிய லும், விரவிய சிறந்த பல அறிவுரைகள் இங்கு அமைகின்றன. உலகனைத்துக்கும் பொதுவான, பெருமையான, புறந்தள்ளத் தகாத அன்பினைப் பற்றி முனிவர் மன்னன் மகனுக்குக் கூறும் அறிவுரை, உலகியலின் முழுமையைப் புலப்படுத்தும் சிறு துளியாக அமைகின்றது. வள்ளுவன் அன்பு பற்றி எழுப் பிய அறக்குரலின் எதிரொலியாக இதுதோற் றம் கொள்கின்றது.

என்பு தோல் உடையார்க்கும் இலார்க்கும் தம்
வன் பகைப்புலன் மாசு அற மாய்ப்பது என்
முன்பு பின்பு இன்றி, மூஉல கத்தினும்
அன்பின் அல்லது ஓர் ஆக்கம் உண்டாகுமோ (1422)

நல்லவனுக்கு நல்லவர்கூறும் நல்லறி வுரையாக இது அமைகின்றது. கடிந்துரைத்த லும், விலக்குதலும், வேண்டுதலாகவும் இத்தகு அறிவுரைகள் அமையலாம். அத்தன்மையன வான சூழலிலும் உலகியல் எண்ணங்கள் வெளிப் பட வாய்ப்புண்டு. இராவணன் செயல்சுட்டி அவன் தம்பியர்கூறும் அறிவுரையில் இந் நிலைகள் அமைகின்றன. 'வேறு ஒரு குலத் தோன் தேவியை நயந்து சிறை வைத்த செயல் நன்றோ' (6119) எனக் கும்பகருணன் கடிதலும் 'கிளையொடு மடியாது அசைவு இல் கற்பின் அவ் அணங்கை விட்டருளுதி' (616 ( ) என வீடணன் வேண்டலும் 'சீதையை விடுதி ஆயின் தீரும் இத்தீமை' (6827) என மாலியவான்

விள்ளலும் உலகியலின் பிறர்மனை நயவாமை தொடர்பாக அமைகின்றன.

மாரீசன் இராவணனுக்குக் கூறும் புத்திமதிகளிலும் இத்தகு இயல்புடைய உலகியல் கருத்துக்கள் பொருந்துகின்றன. அறவியல் தத்துவங்களாகவே அவை அமைந்து விடுகின்றன எனலாம். 'நெஞ்சம் தருக்கினர்கெடுவார்' என்றும், 'செருக்குநர்த் தீர்த்தும் என்பார் தம்மின் ஆர் செருக்கார்' (3267) என்றும், 'நன்மையும் தீமை அன்றே நாசம் வந்து உற்ற போது' (3268) எனவும் வரும்சொற்கள்கவிஞன் உலகியலைக் கூர்ந்து அறிந்த பாங்கினையே புலப்படுத்துகின்றன எனின் அது மிகையன்று,

இவ்வாறு அறிவுரை கூறும் சூழலில் மட்டுமின்றி மற்றொருவர் முன்னாக, தான் எடுத்த குறிக்கோள் பற்றி வஞ்சினம் உரைக்கும்போது உலகியல் பற்றிய எண்ணற்ற சிந்தனைகள் எழுவதைப் பரதன் சூளுரை காட்டுகின்றன. (2199-2217) தீயதென அச்சமுதாயத்தினர் கருதிய இழிவுகளின் பட்டியலாகவே இது அமைந்து விடுகின்றது. பொய்க்கரி கூறுதல், போருக்கு அஞ்சுதல், கன்று இறக்கும் வண்ணம் பால் கறந்து உண்ணுதல், தாய் பசியில் உழலத் தான் உண்ணுதல், நன்றி மறக்கும் நயனில் நாவினன் ஆதல், நறை பருகுதல், களவினில் பொருந்துதல் எனச் சமுதாயத்தில் ஒரு வீரனிடம் பொருந்தக் கூடாதனவான பல தீய இயல்புகள் சுட்டப்படுகின்றன.

இவ்வாறு, பல இடங்களில், பல சூழலில், கம்பனின் நேரடிக் கூற்றாகவும், உவமை வாயிலாகவும்,இயல்வுவருணனையாகவும், கற்பனைக் காட்சி வழியாகவும், கதை நிலையிலும், பாத்திரப் பண்பு நிலையிலும், கதை மாந்தர் கூற்றாகவும், அறிவுரையிலும், சூளுரையிலும் வெளிப்படும் உலகியல் எண்ணங்கள் பல நிலையில் பகுத்தும் வகுத்தும் ஆயத்தக்கன.

கம்பன் காவியத்தில் இருவகையான உலகியலைக் காண்கின்றோம். ஒன்று இயல் உலகியல், மற்றொன்று கற்பனை உலகியல், இவற்றுள் முதல் வகை, அவன் உணர்ந்து கண்டது. மற்றது காண விழைந்து கற்பித்துக் கொண்டது. முதல்வகை, நன்மையும் தீமையும் கலந்த இயற்கையான, இன்றும் நாம் காணும் 'நிலைத்த உலகு; பின்னதோ எக்குறையுமில்லாத எல்லா நிறைவுகளும் உள்ள இலட்சியப் படைப்பு உலகு.'

இயல்புலகியலை, எண்ணம்-சொல்-செயலாலான வாழ்வியல் அமைக்கின்றது. இவ்வாழ்வியல் உலகம், உணர்வு நிலையில் கலையியலையும், அறிவு நிலையில் அறிவியலையும் இன்றியமையா இரு கூறுகளாகக் கொண்டது. கலையியல் உலகு, வாழ்க்கையின் புறநிலைக்குரிய பயன்பாட்டுக் கலைகளையும், அகநிலைகட்குரிய இன்பக் கலைகளையும் பெற்று அமைகின்றது. உடல் வாழ்வுக்கும், உள வாழ்க்கும் அப்பாற்பட்டு உயிர் வாழ்வியல் என நினைக்கும் போது தத்துவமும் மறுமையும் இணைந்த இறையியல் உலகு உருவாகின்றது, மண்ணில் வேரூன்றிய உடல் வாழ்வுக்கும், வானில் பறக்கும் பட்டம் போன்ற உளவாழ்வுக்கும் மாறுபட்டு, காற்றாகவும், ஒளியாகவும், மேகமாகவும் நிற்கும் உயிர்வாழ்வு இறையியல் உலகாக வெளிப்படுகின்றது எனலாம்.

இங்ஙனம் இராமகாதையில் விரவி வருகின்ற கம்பனின் பாடற் பகுதிகள் பலவும், பிரிவின்றி இணைந்த முழுமையான உலகியலை நம்மனோர் உணர்வதற்குப் பெரிதும் உதவுகின்றன.

**


நூல்கள் அறிமுகம்

## பேரின்பம்

இந்நூல், அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள், அவ்வப்போது எழுதிய 17 சிறுசிறு கட்டுரைகளைக் கொண்டது. அரிய பெரிய பொருள்களைத் தெளிவாகவும் எளிதாகவும் இக்கட்டுரைகள் நுண்ணிய முறையில் விளக்குகின்றன. கலைவாணி புத்தகாலயத்தினர் இதனை அழகுற வெளியிட்டுள்ளனர்.

கிடைக்குமிடம்: திரு. சீனி. திருநாவுக்கரசு,
435, டாக்டர் ஏ.ஆர்.எம். ரோடு, கே.கே.நகர், சென்னை–600 078

## சிவஞான சித்தியார் உரைத்தொகுப்பு

இந்நூல் சிவஞான சித்தியார் சுபக்கப் பகுதியைப் பன்னிரண்டு சூத்திரங்களாகக் கொண்டு, அவற்றின் கருத்தை உரைநடையில் சுருக்கமாகவும் அழகாகவும், பலரும் படித்துப் பயன்பெறத் தக்கவகையிலும் தொகுத்துத் தருகின்றது. திரு. பண்டித ந. பிச்சைக்கண்ணு அவர்களும், திருமதி பி. திலகவதி மோகன், எம்.ஏ., பி.எட். அவர்களும், இதனைத் தொகுத்துத் தந்துள்ளனர். இதனை உருத்திரபதி விநாயகர் அருள்நெறித் திருக்கூட்டத்தினர் (நாகர்கோயில் - 2) வெளியிட்டுள்ளனர். சிறிய நூலாயினும் பயன்மிக்க நல்லநூல். தொகுத்தவர்கள், வெளியிட்டவர்கள் ஆகிய இருவரின் தொண்டும் பெரிதும் போற்றுதற்குரியது. 42 பக்கம்.

கிடைக்குமிடம்: உருத்திரபதி விநாயகர் அருள்நெறித் திருக்கூட்டம், நாகர்கோயில்-2.

# திருப்புகழில் சந்த அமைப்பும், தாளங்களும்

"இசைப் பேரரசி" *திருமதி. டாக்டர் சேலம் ஜெயலட்சுமி* அவர்கள், சென்னை.

தென்றல் வடிவுஞ் சிவனார் திருவடிவும்
மன்றல் வடிவு மதன்வடிவும்-குன்றாத
வேயின்இசை வடிவும் விண்வடிவ முங்காணில்
ஆய தாளங்காண் லாம்.

—பரத சங்கிரகம்.

இசைத் துறையில் தாளம் அல்லது லயம் என்னும் பொருள் பற்றி ஆராயப் புகும் பொழுது, அது, ஆழம் காண முடியாத ஒரு மாபெரும் கடலாகவே கருதப்படுகிறது. சுருதியுடன் கூடிய இசை, எவ்வளவு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றதோ, அதேபோன்று பழுதில்லாத லயஞானமும் வேண்டப்படுகிறது. நமது நாட்டு இசையில், சிறப்பாகத் தமிழ் நாட்டு இசையில் காணப்படும் தாள இலக்கணமும், மரபும் வேறு எந்த இசையிலும் காண்பதரிது எனத் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

இறைவன் காலத்தைக் கடந்து நிற்கின்றான். தில்லையுட் கூத்தன் ஊழிக் கூத்து ஆடிய போது, அந்த ஆவேசத்தை அடக்குதற் பொருட்டு மகாவிஷ்ணு, நந்தியிடமிருந்த முழவை, நம், தி, தொம், தா என்றுகூறித் தாம் வாங்கி வாசித்தார் என்றும், அதன் பின்னரே நடராசப் பெருமான் ஆவேசம் அடங்கிப் பூமியில் காலை ஊன்றினார் என்றும் புராண வரலாறு உண்டு. பரதமும் பண்ணும், ஆடற்கலை அரசன் நமக்கு அளித்த அரிய செல்வமாகும், வேகம் மிக அதிகமாக இருந்தால் நம்மால் அளக்க முடியாது. அதேபோல் வேகம் மிகமிக மந்தமாக இருந்தாலும் நம் கருத்தில் கொள்ள முடியாது. இசையின் காலத்தையும் வேகத்தையும் அளப்பதற்குத் தனித் தனியே அளவுகளும் இலக்கணமும் வகுக்கப் பட்டுள்ளன. தாளங்களின் வகைகளையும் இலக்கணத்தையும் அறியாதவர்கள், திருப்புகழ்ப் பாடல்களையும் சந்தங்களையும் தக்க முறையில் கையாள்வது இயலாது.

திருப்புகழ்ப் பாடல்கள், தாளங்களின் வகைகளை எண்ணில் அடங்காத வகையில் தம்பால் கொண்டுள்ளன. திருப்புகழ், தாளம் என்னும் கடலின் எல்லையைத் தொட்டு நிற்கின்றது என்று கூறினால், மிகையாகாது. லயத் தொகுதிகளைப் பற்றிய ஆராய்ச்சியில், திருப்புகழ்தான் முதல் இடம் பெறும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

தாள வகைகளுக்குத் தாள தசப் பிரமாணம்—தாளத்தின் பத்து விதிகள், கொடுக்கப் பட்டுள்ளன. அவை : (1) காலம் (2) மார்க்கம் (3) கிரியை (4) அங்கம் (5) கிரகம் (6) சாதி (7) கலை (8) லயை (9) யதி (10) பிரத்தாரம் ஆகியவை. இவைகளைப் பற்றிய விரிவான செய்திகள் தாள தீபிகை, தாள சமுத்திரம், பரதசங்கிரகம் ஆகிய நூல்களில் உள்ளன.

தாளங்களில் பல வகைகள் கூறப் பட்டுள்ளன : அவை — ஏகதாளம் தாளத்திரயம், பஞ்சதாளம், சட்தாளம், சப்த தாளம், நவதாளம், நவகும்ப தாளம் ஆகியவையாகும். நவசந்தி கவுத்துவம் என்ற வகை, பரதத்திற்கு ஏற்றதாகத் திகழ்ந்திருக்கிறது. இவையன்றி, மற்றும் இருபெரும் தாளவகைகள் உள்ளன. அவை முப்பத்தைந்து தாளங்களும், நூற்றெட்டுத் தாளங்களுமாகும். இவற்றில் முப்பத்தைந்து தாளங்கள், இசைக்கு ஏற்றவை என்றும்; நூற்றெட்டுத் தாளங்கள் பரதத்திற்கு ஏற்றவை என்றும் கருதப்படுகின்றன. முப்பத்தைந்து தாளங்கள், பாடுவதற்கும் கையாள்வதற்கும் எளியனவாகக் கைவிரல்களால் அட்சரங்கள் எண்ணிப்போடும் வகையில் அமைந்துள்ளன. இவை, பிற்காலத்தில் ஏற்பட்டவை என்று கூறப்படுகிறது. நூற்றெட்டுத்தாளங்கள் பரதத்திற்கும் அபிநயத்திற்கும் ஏற்றனவாக விளம்ப காலத்திலும், நீண்ட மாத்திரைக்கால அங்கங்களைக் கொண்டவைகளாய் உள்ளன. இவைகள், தேசீயம் என்றும், மிகப் பழமை வாய்ந்தவை என்றும் தெரிகிறது. சிம்மநந்தனம் போன்ற அரிய அற்புதமான தாள வடிவங்களை நாம் இங்குக் காண முடிகிறது.

திருப்புகழ்ப் பாடல்களில் சந்தங்கள்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சந்தங்களை வைத்து ஒத்துப்பார்க்கும்போது, பலதாளங்கள் மேற்கூறிய முப்பந்தைந்து அல்லது நூற்றெட்டுத் தாள வகைகளில் அடங்குவனவாகத் தெரியவில்லை. ஆனால், எளிதாக எல்லோரும் பாடும் பொருட்டு அரிய சந்தங்களை, ஆதி தாளம் போன்ற எளிதான தாளங்களில் அடைத்துப் பாடுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால், அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடல்களைச் சந்தங்களில் அமைத்துள்ள திறத்தை நோக்குமிடத்து, அவர், தாளம் என்னும் கடலின் கரை கண்டவரோ என்று வியக்கும்படியாக இருக்கிறது. அருணகிரியார் தமது பூத வேதாள வகுப்பில், பஞ்ச தாளங்களைப் பற்றியும் நூற்றெட்டுத் தாளங்களின் பெயர்கள் சிலவற்றைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

''கைச்சதியி னாமுறைவி தித்தனா முற்கடித
சச்சபுட சாசபுட சட்பிதா புத்திரிக
கண்டச் சம்பதிப் பேத மாம்பல
கஞ்சப் பஞ்சகத் தாள மாம்படி
கற்கரி யுற்சவ தர்ப்பண லட்சண
சச்சரி மட்டிசை யொற்றிய றுப்பன
காயெரிய பங்கியொடு சேகரமி குந்தசைவ
காதுபடு சங்கவள மாலிகை புனைந்திசைவ
கருணைய திகந்துவந் தொண்கோகு லப்பெரிய
கருமுடியொடும்படுங் கங்காள மொத்துவன''

—பூதவேதாள வகுப்பு.

சச்சபுடம், சாசபுடம், சட்பிதாபுத்திரிகம், கண்டசம்பதி, உற்கடிதம் ஆகிய பஞ்சதாளங்களையும், கற்சரி, உற்சவம், தர்ப்பணம், சச்சரி, அபங்கி, கோகிலப்ரியம், கங்காளம் ஆகிய நூற்றெட்டுத் தாள வகைகளையும், பூத வேதாள வகுப்பில் அருணகிரியார் குறிப்பிட்டுள்ளார். ஆகவே அருணகிரிப் பெருமான், தாள இலக்கணத்தில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது இனிது விளங்குகிறது.

திருப்புகழின் சந்தத் தாளங்களைஆராய்வதற்கு முன், தாளத்தைப் பற்றிய இலக்கணங்களை ஓரளவு அறிய வேண்டியது அவசியமாகிறது. தாள விதிகளில் நான்காவதாகியஅங்கம் என்ற பகுதியில், பதினாறு அங்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. வடமொழியில் அவை, சோடசாங்கம் எனக் கூறப்படுகின்றன. மேற்கூறிய தாளத்தின் பதினாறு அங்கங்களில் முப்பத்தைந்து தாளவகையில் மூன்று அங்கங்களே கையாளப்படுகின்றன. அவை, அனுத்திருதம் அல்லது விராமம், திருதம், லகு ஆகிய மூன்று. இந்த மூன்று அங்கங்களும் அட்சரமாகக் கணக்கிடப்பட்டு இசையில் பெரும்பாலும் மத்திம காலத்தில் வழங்கப்படுகின்றன. நூற்றெட்டுத் தாள வகையில் இவை தவிர, மேலும் மூன்று அங்கங்களே கையாளப்படுகின்றன. அவை-குரு, புலுதம், காகபாதம் ஆகியவை. ஆகவே இந்த ஆறு அங்கங்களும் சடாங்கம் என வழங்கப்படுகின்றன. குரு என்ற அங்கம், எட்டு அட்சரம் கொண்டது. குரு, புலுதம், காகபாதம் ஆகிய அங்கங்கள், ஒரு மாத்திரைக் காலமாகக் (ஒரு மாத்திரைக்கு நான்கு அட்சரங்கள்) கணக்கிடப்படுகின்றன. இவை கைவிரல்களால்எண்ணப்படாமல் அங்கமாகக் கை அசைவுகளால் காட்டப்படுகின்றன. ஆறு அங்கங்கள் தவிர திருதசேகரம் என்ற மூன்று அட்சரம் உடைய அங்கமும் காணப்படுவதால், நூற்றெட்டுத் தாளங்களில், சப்தாங்கம் கையாளப்படுகின்றன என்று கூறலாம்.

திருப்புகழ்த் தாளங்கள், நூற்றெட்டுத் தாளங்களின் சாதி பேத வகையால் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் அப்படியிருப்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை என்பது, சற்று ஆராய்ந்தால் தெரியும். மேற்கூறிய பதினாறு அங்கங்களில் லகு ஒன்று மட்டுமே, சாதி மாற்றங்களுக்கு உரியது. மற்ற அங்கங்களுக்குத் திட்டமான அட்சரகாலம் கொடுக்கப்பட்டுள்ளது. நூற்றெட்டுத் தாளங்களில் லகு என்ற அங்கம் இல்லாதபலதாளங்கள் இருக்கின்றன. மேலும் நூற்றெட்டுத் தாளங்களில் லகு என்ற அங்கம், நான்கு அட்சர காலம் மட்டுமே கொண்டதாகும். பிற்காலத்தில் ஏற்பட்ட முப்பத்தைந்து தாளங்களில் மட்டுமே, 'லகு' சாதி வேறுபாட்டிற்கிணங்க மாறுதலுக்கு உட்படுகின்றது. ஆகவே நூற்றெட்டுத் தாளங்களில், ஐந்து வகைச்சாதி மாற்றங்களுக்கு இடமில்லை என்பது பெறப்படுகிறது.

திருப்புகழ்ச் சந்தங்களில், முன் கூறிய சப்தாங்கங்களைத் தவிர, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது அட்சரகாலங்கள் கூடிய லகுவிராமம், லகுதிருதம், லகுதிருத விராமம், குருவிராமம் ஆகிய அங்கங்களும் கையாளப்பட்டுள்ளன என்று சொல்லாம். தொங்கல் என்ற தனிச் சொல், தாளத்தில் ஒரு அங்கமாகுமா? என்பது கருத்து வேறுபாடு நிறைந்ததாகும், தொங்கல் என்ற தனிச் சொல்லை, ஒரு அங்கமாகக் கொள்ளாமல், அச்சொல்லை ஒரு முழு ஆவர்த்தனத்திற்கு நீட்டிவிடுவது வழக்கமாக இருந்து வருகிறது. அத் தனிச் சொல்லை ஒரு அங்கம் என்று கொண்டாலோ ! ஆகா ! விந்தையிலும் விந்தை ! அதனால் நமக்குக் கிடைக்கும் தாளங்கள்தான் எத்தனை வகைகள் ஆகின்றன! தாளக் கணக்குகள்தாம் எத்தனை சிக்கலாகி விடுகின்றன ! திருப்புகழ்ப் பாடல்களின் அற்புதத் தாளங்களை ஓரளவேனும் அறிய வேண்டும், இசையில் கையாள வேண்டும் என்றால், அதற்குத் தக்க லயஞானமும் நுண்ணறிவும் பெருக அந்த ஆறுமுகச் செம்மல்தான் நமக்கு அருள்புரிய வேண்டும்; வழி காட்டியருள வேண்டும் !

R. RAJU
Dy Commissioner
(Retired
HR&CE Administration Dept

திருப்புகழ் என்னும் அமுதம், தாளம் என்னும் கடலின் எல்லையைத் தொட்டு நிற்கின்றது என்று கூறலாம். பாடல்களில் சொற்கோவைகள் லய வடிவமாக ஊடுருவப் பின்னப்பட்டுள்ளன. நாதவடிவமும் லயவடிவமும் ஆகிய இரண்டும், சக்தியும் சிவமும் போல் ஒருங்கிணைந்து திகழ்கின்றன. தேவார ஆசிரியர்கள், பண்சுமந்த பாடல்களை, இயல்இசை என்னும் தேனையும் பாலையும் குழைத்து வழங்கினார்கள். அருணகிரியாரோ பண்ணும் பாடலும் மட்டுமின்றி, லயம் என்னும் மிடுக்கையும் பின்னற் கோலத்தில் இடையே புகுத்தித் திருப்புகழ் என்னும் அமுதத் தமிழை அரிய முறையில் வழங்கி உள்ளார். திருப்புகழ்ப் பாடல்களுக்கு ஈடான சந்தப்பா அல்லது வண்ணப்பா, வேறு காண முடியாது என்பதே அரிய உண்மையாகும்.

முருகப் பெருமானின் அருளை முற்றிலும் பெற்ற அருணகிரியார், 'தொங்கல்' என்ற தனிச் சொல்லைப் பெரும்பாலும் ஆறு அட்சரம் கொண்ட சொற்களாகவே அமைத்திருக்கிறார். 'சரவணபவ' என்னும் சடாட்சரத்தை எண்ணியே அங்ஙனம் வைத்தாரோ எனஎண்ணி வியக்க வேண்டியிருக்கிறது! திருப்புகழில் உள்ள தாளங்கள் மிகக் கடினமானவை; பாடுதற்கும், கருவிகளில் வாசிப்பதற்கும் அரியவை, எவரும் எளிதில் கையாள்வது இயலாத செயல் என்பது உண்மையே! ஆனால், அதற்காக இத்தகைய அரிய தாளங்களைக் கையாள்வதற்கு, முயற்சி கூடச் செய்ய வேண்டுவதில்லை என்பது பொருளல்லவே.

காஞ்சிபுரம் நாயனாப் பிள்ளை அவர்கள், இவ்வகை அரிய தாளங்களைக் கையாண்டு வந்தார்கள் எனத் தெரிகிறது. பின்னர், அவரது சீடரான சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும், தமது குருவைப் பின்பற்றி அரிய தாளங்களில் திருப்புகழைப் பாடி வந்தார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததே! அவர்களுக்குப் பின், திருப்புகழை அரிய தாளங்களில் பாடும் வழக்கம் அருகியிருக்கிறது. ஏன், நூற்றெட்டுத் தாள வகைகளைக் கையாள்வதும் அரிதாகி விட்டது. சென்ற தலைமுறையைச் சேர்ந்த மகா வைத்தியநாத ஐயரைப் போன்றவர்கள், பல அரிய தாளங்களில் பல்லவி பாடியிருக்கிறார்கள் என்பதைஅறிகிறோம். இப்போது நாலு களைச் சவுக்கப் பல்லவிகள் கூட அரிதாகிவிட்டன. அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களை, நாம் நம் இசையரங்கு நிகழ்ச்சிகளிலும், பக்திப் பஜனைப் பாடல்களிலும், மிகுதியாகக் கையாண்டு பரப்புதல், நமக்குப் பெரிதும் நலம் பயக்கும்.

# "தெய்வம் என்பதோர் சித்தம்"

## முன்னுரை :

மக்களாகப் பிறந்தோர் அடைதற்குரிய பேறுகள் பல. அவைகளுள் 'தெய்வம் ஒன்று உண்டு' என்னும் நம்பிக்கையையுடைய மனத்தைப் பெறுதலும் ஒன்றாகும். குருடனுக்குக் கண்கள் உள்ளன. ஆயினும் பார்வையில்லை. செவிடனுக்குக் காதுகள் இருக்கின்றன. ஆயினும் கேட்குந்திறன் இல்லை. ஊமைக்கு வாய் உள்ளது. எனினும் பேசும் ஆற்றலைப் பெறவில்லை. இவற்றால் குருடும் செவிடும் ஊமையும் எங்ஙனம் குறைபாடு உடையனவாகக் கருதப்படுமோ, அங்ஙனமே கடவுள் நம்பிக்கை வாய்க்கப் பெறாத மனமும், குறைபாடு உடையதாகக் கொள்ளப்படுதல் பொருந்தும்.

## திருவள்ளுவர் :

இக்கருத்தினையே ஆசிரியர் திருவள்ளுவர் பெருமான், தமது ஒப்புயர்வற்ற திருக்குறள் நூலில்,

"கோளில் பொறியிற் குணமிலவே ; எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

எனச் சிறப்பாகத் தலையின் மீது வைத்துக் கூறி வற்புறுத்தினார். இறைவனை வணங்காத தலைகள் பயனில. எனவே, இனம் பற்றி வாழ்த்தாத நாவும், தொழாத கைகளும், நம்பாத மனமும் பிறவுமெல்லாங் கூட, ஒரு சிறிதும் பயனில்லாதனவாகும் என்பது சொல்லாமலே உபலக்கண முறையாற் பெறப்படும்! கடவுள் உணர்ச்சி கலக்கப் பெறாத வாழ்க்கையினை, அஃது எத்தனைச் சிறப்புக்கள் அமைந்து விளங்குமாயினும், ''நிரம்பா வாழ்க்கை'' என்று பரணர் என்னும் சங்ககாலப் புலவர் குறிப்பிடுகின்றார் (அகநானூறு, 125),

## மணிவாசகர் :

'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும், கூனும் குறளும் ஊமும் செவிடும்' ஆகிய குறைபாடுகள் நீங்கி, 'உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதல்' எங்ஙனம் அரிதோ, அங்ஙனமே 'தெய்வம் ஒன்று உண்டு' என்னும் நம்பிக்கை இயல்பாகவே அமையப் பெற்ற மனம் உடையவர்களாகப் பிறத்தலும், புண்ணியத்தின் பாலது ஆகும். அதுபற்றியே மாணிக்கவாசகப் பெருமான், மனிதன் ஓர் உயர்நிலை எய்தி, உய்தி பெறுவதற்கு முன்னர், இவ்வுலகியல் வாழ்வில் தப்பிக் கடந்து செல்ல வேண்டியிருக்கின்ற பல் வேறு தடைகளையும், படி நிலைகளையும் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

''ஆண்டுகள் தோறும் அடைந்த அக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப் பல பிழைத்தும்;

காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்:

கருங்குழற் செவ்வாய் வெண்நகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்

கச்சற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்த புடைபரந்து

ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்;
பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்;

கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்;
செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்;

நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்;
புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்;

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி...''

எனப் 'போற்றித் திருவகவல்' என்னும் பகுதியில், திருவாசகத்திற் பாடியருளியிருக்கின்றனர். இவ்வாற்றால் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதலின் அருமைப்பாடும், இவ்வுலகியல் வாழ்வில் நேரும் பலவகை இடர்ப்பாடுகள் ஆகிய படிநிலைகளைக் கடந்து சென்ற வழியே, அத்தகையதோர் அனுபவ வுணர்வின் மன நிலை வந்து வாய்க்கும் என்பதும், தெளிவாம்!

## தெய்வ உணர்வு:

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கையிலும், சிலபல நிகழ்ச்சிகளோ அனுபவங்களோ இடர்ப்பாடுகளோ ஏற்பட்டு, எங்ஙனமேனும் சமய உணர்வையும், கடவுள் நம்பிக்கையும் எழுப்பியே விடுகின்றன. நிலைபேறுடையன போலத் தோன்றும் பொருள்களெல்லாம் முடிவில் நிலைபேறின்றி அழிந்து, மருங்கற மாய்ந்து மறைந்து போதலை, நாம் நாடோறும் கண்டு வருகின்றோம். மனிதனின் செருக்கும் பெருமிதமும் முனைப்பும் நாளடைவில் தேய்ந்து மாய்ந்து

போகின்றன. எதிர்பாரா நிலையிற் பெருத்த துன்பங்களும், நோய்களும், தொல்லைகளும் நேருங்கால் எல்லாம், மனிதன் தன்னுடைய சிறுமையினை உணரவேண்டியவன் ஆகின்றான்.

எல்லோரையும் அடக்கி அச்சுறுத்திக் கொடுமைப்படுத்தி, யாவும் தம்மாலேயே நடப் பனவாகக் கருதித் தருக்கிக் களித்து நிற்போ ரும், பிறிதொரு ஞான்று 'அந்தோ வினையே' என்று அழுங்கி வருந்தித் துன்பம் உழக்கக் காண் கின்றோம். 'முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பர்' ஆகியே ஒழிகின்றனர். தன்னுடைய அறிவும் முயற்சி யும் ஆற்றலும் பிறவும் ஒரு வரையறைக்கு உட்பட்டனவே என்று உணர்கின்றபோது, வரையறைக்கு உட்படாத பேரறிவும் பேராற்ற லும் பேரின்பமும் உடைய ஒரு முழுமுதற் பெரும் பொருளின் துணையைத் தேடி அடைய, மனிதன் பெரிதும் ஆவலுற்று அலைய வேண் டியவனாகின்றான்.

பரந்துபட்ட இவ்வுலகியல் நிகழ்ச்சிகளைக் காணுந்தோறும், அவற்றிற்கெல்லாம் மூலமுதற் காரணமாக இருந்து இலங்கி வரும் ஒப்புயர் வற்ற ஒரு முழுமுதற் பெரும் பொருளின் உண்மையினை, யாவரும் இனிது உடன்படவே வேண்டியுள்ளது.

இற்றைக்குச் சற்றேறத் தாழ, இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோம நாட்டில் உயிர் வாழ்ந்திருந்த சிசரோ என்னும் பெரு நாவலர் ''இயற்கைப் பொருள்களின் இடத்தி லெல்லாம், மனிதன் தன்அறிவு—ஆராய்ச்சி— ஆற்றல் என்பவற்றால் செய்து நிறைவேற்ற இயலாத, ஏதோ ஓர் அற்புதம் அமைந்து கிடக் கின்றது. அது மனிதனை விடச் சிறந்ததாகவே இருத்தல் வேண்டும். அது கடவுளைத் தவிர வேறு யாதாக இருத்தல் கூடும்?'' என அறை கூவி அறிவுறுத்தியிருப்பது, ஈண்டு நாம் உணர் வதற்கு உரியது. (1)

உலகில் உள்ள பொருள்களில் எல்லாம்,
மனிதனின் உள்ளமும் உணர்வும்,
நிலவிடும் அவன்றன் ஆற்றலும் பிறவும்,
நிகழ்த்தொணா வியத்தகு திறன்ஒன்று,
இலகிநிற் கின்றது; இனியமற் றதுதான்
மனிதனிற் சிறந்துயர்ந் திலங்கும் ;
நலம்மிகும் அதனைக் கடவுள் என் றன்றி
எது? என நவிலுதல் கூடும்!

—தமிழாக்கம்: ந.ரா.மு.

## அவ்வையார் :

மேலும் நாம் நினைப்பது ஒன்றாக இருப்ப, நிகழ்வதோ பிறிதொன்றாக முடிகின்றது.

ஒன்றை நினைப்பின் அதுஒழிந்திட் டொன்றாகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்;ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல்.

என்ற அவ்வைப் பிராட்டியின் அனுபவம், நம்ம னோர் அனைவரின் வாழ்க்கையிலும்கூட, அவ் வப்போது நேர்கின்றது! எத்துணை உயர்ந்த இன்பங்களை நுகர்வோரும், எவ்வளவு செல்வச் செழிப்பில் திளைப்போரும்கூட, ஒரு காலத்தே அவற்றினை வெறுத்தொதுக்கி, இனைய தென்று கூற இயலாத வேறேதோ ஒரு பேரின் பத்தை விழைந்து நின்று, உள்ளம் அமைதி இழப்ப, ஏக்கற்று அலமந்து உழலுகின்றனர் !

## கார்டினல் உல்சி:

நமக்குத் துணையும் பற்றுக்கோடுமாக நம் மால் நம்பப் பெறுபவர்கள் பலரும், நம்மைக் கைவிட நேரும் நிலையில் ''நான் இந்த எட் டாம் என்றிக்கு ஊழியம் செய்ததை விட, இறைவனுக்கு ஊழியஞ் செய்திருப்பின், அப் பெருமான், இத்தள்ளாத வயதில் இங்ஙனம் என்னைக் கைவிட்டுக் கலங்கி நிற்க வைத்திருக்க மாட்டான்'' (2) எனக் கார்டினல் உல்சி என் பார், கதறிப் புலம்பியது போலவே, நாமும் இறைவனின் துணையை எதிர் நோக்கி வருந்திக் கதறி அலறும் நிலையை அடைகின்றோம். இனைய செய்திகள் பலவும் கருதுபவர்களுக்குத் 'தெய்வம் என்பதோர் சித்தம்' உண்டாதல் திண்ணம்.

## சர் சார்லஸ் எலியட்:

என்னும் பேரறிஞர், ''யாராவது ஒருவர் கடவுள் இல்லை என்று என்பாற் கூறினால், இறந் தொழியக் கூடிய, பரமாணுவினும் மிகச் சிறிய, ஓர் அற்ப மனிதன், இவ்வுலகின் ஓர் அணுத் துணைப் பரப்பில், ஒரு நொடி நேர அளவு மட்டுமே வாழ்ந்து கொண்டு, அழகும் வியப்பும் ஒழுங்கமைப்பும் நிறைந்து,எல்லையின்றி விரிந்து விளங்கும் பேரண்டத் தொகுதிகளை யெல்லாம் கண்டுணர்ந்து வைத்துங்கூட, எவ்வாற்றானும் மெய்ப்பிக்க முடியாத இக்கருத்தை, இத்துணை உறுதியுறக் கொள்ளுதல் எவ்வாறு இயலும் ? என்று தான் நான் வினவுகிற்பேன்'' (3) என்று விளம்புகின்றார்.

'கடவுள்இல்லை' என்றொருவன் கட்டுரைப்பின்,
'சிற்றுணர்வை; கணமே வாழ்வை;
படர்உலகில் அணு அனையை; பரந்தஅண்டப்
பரப்பமைப்பும், அழகும், பண்பும்,
உடனாய இயங்குமுறை ஒழுங்கனைத்தும்
கண்களிற்கண் டுணர்ந்து வைத்தும்,
திடனாய்நீ, பொருத்தமில்இத் தெளிவிலுரை
செப்பல்எங்ஙன்?' என்றே கேட்பேன்!

—தமிழாக்கம்; ந.ரா.மு.

---

(1) " There is something in the nature of things, which the mind of man, which reason, which human power cannot effect and certainly that which produces this must be better than man. What this can be but God ? " —*Cicero*

(2) " Had I but served God instead of Henry the Eighth, He would not have deserted me like this in my old age." —*Cardinal Wolsey.*

(3) " If anyone says ' There is no God ' I can only ask how a speck of a mortal living for a moment, on an atom of an earth, in plain sight of an infinite universe, full of beauty, wonder and design, can confidently hold so improbable a view ?" —*Sir Charles Eliot*

### கௌண்ட் லியோ டால்ஸ்டாய் :

என்னும் ரஷ்ய நாட்டுப் பெருஞானியான வர், ''சமயம் அல்லது கடவுளுணர்ச்சி இன்றி, உள்ளபடியே உண்மையான ஒழுக்கம் நிலை பெறாது; எதுபோல எனில், அடியில் வேர் இல்லாமல் மேலே பூக்கள் மலர்தல் இயலாமை போல'' என்றும்; ''சமயம் இல்லாமல் அறிவு டைய மனிதன் வாழ்தல் முடியாது ; ஏனெனில் மனிதனுடைய தனிச் சிறப்பான இயற்கைப் பண்பு, காரண காரியத் தன்மைகளை ஆராய்ந் தறியும் திறம் வாய்ந்ததாக அமைந்திருத்தலே அதற்குச் சரியான காரணமாகும்''(4) என்றும் வலியுறுத்தி மொழிகின்றார்.

### வால்ட்டேர்:

பிரஞ்சுப் புரட்சி தோன்றுதற்கு வித்திட்டு வைத்த பேரறிஞர் ஆகிய வால்ட்டேர், தொடக்கத்திற் சமய எதிர்ப்பாளராக இருந்து வந்தாராயினும், நாளடைவில் 'தெய்வம் என்ப தோர் சித்தம்' உடையவராக மாறி நின்றார். ''கடவுள் என்பவர் இல்லாவிட்டாலும்கூட, அவரை உண்டாக்குவது இன்றியமையாத தாகும்'' (5) எனத் தம் நூல் ஒன்றில் அவர் எழுதுகின்றார். ''கடவுளைத் தொழுதுகொண் டும், நண்பர்களை நேசித்துக் கொண்டும், என் பகைவர்களை வெறுக்காமலும், குருட்டு நம்பிக் கைகளை அருவருத்துக் கொண்டும், நான் இறக்கின்றேன். (ஒப்பம்) வால்ட்டேர், பிப்ரவரி 28, 1778'' என்னும் அறிக்கை ஒன்றினைத் தம் செயலரிடம் எழுதியளித்து விட்டு, அவர் உயிர் நீத்தார்.

### முடிவுரை :

இன்னோரனைய சுவைமிகு செய்திகள் பலவும், ''தெய்வம் என்பதோர் சித்தம்'' நம்மனோர்க்கு எத்துணை இன்றியமையாதது என்பதனை விளக்க வல்லனவாகும். நாம் அனைவரும் தெய்வம் என்பதோர் சித்தம் உடையவர்களாக விளங்கி, வையத்து வாழ் வாங்கு வாழ்ந்து நலம் பெற, இறைவன் திரு வருள் துணை புரிவதாக ! **

---

(4) " Without religious roots there can be no real sincere morality, just as without roots there can be no real flower."
*—Count Leo Tolstoy,*
Essays and Letters, p. 154

"A rational man cannot live without a religion, precisely because reason is characteristic of his nature."
*—Ibid*, p. 2I1.

(5) " Even if God did not exist, it would be necessary to invent him, for the good of the world.''

''I die adoring God, loving my friends, not hating my enemies, and detesting superstition (Signed) Voltaire. February, 28, 1778."
*—Prof. Will Durant,*
The Story of Philosophy, p. 250.

x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x x


## திருச்செந்தூர் அகவல்

சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்கள் நால்வரில் ஒருவராகிய உமாபதி சிவாச் சாரியரின் வழிவந்த காழிக் கங்கை மெய்கண்டார் அருள்பெற்ற சிற்றம்பல நாடிகள் என்னும் சான்றோரால், இந்நூல் இயற்றப் பெற்றது. யோகநெறி பற்றிய அரிய பெரிய நுட்பங்கள் பல, இந்நூலில் அமைந்துள்ளன. 426 வரிகள் கொண்ட இந்நூலில், யோகநெறி பற்றி 114 வரிகள் அமைந்துள்ளன. அவைகள் எளிதில் பொருள் விளங்காதவை. அவற்றிற்கெல்லாம் சிறந்த முறையில் வித்துவான் பொன். அ. கனகசபை அவர்கள் விரிவான முறையில் விளக்க உரைகள் எழுதியுள்ளார். யாழ்ப்பாணம் சிவயோகர் சுவாமிகள் அருளாசியின் துணை கொண்டே, வித்துவான் திரு. பொன். அ. கனகசபை அவர்கள், இவ்விரிவான விளக்கவுரையினை எழுதியிருக் கின்றார். இந்நூல் இலங்கை புங்குடுதீவு சிவதொண்டர் வெளியீடாக மலர்ந்துள் ளது. ஆசிரியர் திரு. ச. தம்பையா அவர்கள், இதனைச் சிறப்புறப் பதிப்பித்திருக் கின்றார்கள். திருச்செந்தூர் முருகன் அடியார்களுக்கும், சைவசித்தாந்த ஈடு பாடுடைய அறிஞர் பெருமக்களுக்கும், இந்நூல் சிறந்ததொரு பாராயண நூலாக வும், ஆராய்ச்சி நூலாகவும், பயன்படும். விலை ரூ. 12.50.

கிடைக்குமிடம் :

சைவசித்தாந்த மகாசமாசம்,

3, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை—4.

—ஆசிரியர்.

# பாற்கடல் கிடக்கும் பதுமநாபன்

டாக்டர் திரு. ந. சுப்பு ரெட்டியார், M.A., Ph.D.

R. RAJU
(Retired)
HR&CE Administration Dept

''பாலாழி நீ கிடக்கும்
பண்பையாம் கேட்டேயும்
காலாழும் நெஞ்சழியும்
கண்சுழலும்—நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்!
தொல்வினைஎம் பால்கடியும்
நீதியாய் நிற்சார்ந்து
நின்று''

என்று திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் எம்பெருமானை அனுபவிக்கின்றார் நம்மாழ்வார். ''நின்னை அடியேன் நேரில் கண்டதில்லை. நீ திருப்பாற்கடலில் கிடந்திருக்கும் திருக்கோலத்தைச் சாத்திரம் அறிந்த பெரியோர்களின் வாயிலாகக் கேட்ட அளவிலேயே 'இப்படியும் ஓர் அழகு உண்டோ' என்று ஈடுபட்டுக் கால் நடைதாராமல் ஆழ்ந்து போகின்றன. நெஞ்சு நீர்ப்பண்டமாகக்கரைந்து அழிந்து போகின்றது. கண்கள் ஒரு பொருளையும் பார்த்து அறிய முடியாதபடி சுழலத் தொடங்குகின்றன'' என்று கூறுகின்றார். இந்தப் பாசுரத்தால் எம்பெருமான் சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார் என்பது தெரிகின்றது. எம்பெருமானின் திருநாமம் க்ஷீராப்திநாதன் (திருப்பாற்கடல் நாதன்). தெற்கு நோக்கிய திருமுகமண்டலங் கொண்டு புயங்க சயனத்தில் (பாம்பணை மேலான்) காட்சி தருகின்றார். தாயார், கடல்மகள் நாச்சியார். இந்த எம்பெருமானை மானசீகமாகத்தான் சேவிக்க வேண்டும்.

திருப்பாற்கடல் நாதனைப் பற்றிச் சாத்திரம் என்ன கூறுகின்றது ? இவன் வியூக நிலை எம்பெருமான். வியூக நிலையாவது; லீலா விபூதியில் (இவ்வுலகில்) அதன் படைப்பு, அளிப்பு, அழிப்பு இவற்றை நடத்துவதற்காகவும், சமுசாரிகட்கு வேண்டியவற்றை ஈந்து, வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காத்தற் பொருட்டும், தன்னை இடையறாது நினைப்பவர்க்கு (உபாசிப்பவர்கட்கு) அவர்தம் தளைகளைப் போக்கித் தன்னை வந்து அடைவதற்குக் காரணமான பேரருளைச் சுரப்பதற்காகவும், வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற பெயர்களுடன் இருக்கும் நிலையாகும். இவற்றுள் வாசுதேவ ரூபமான பரத்துவத்தில் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்ற ஆறு குணங்களும் நிறைந்திருக்கும். ஏனைய மூன்றில் அவரவர் மேற்கொண்ட செயலுக்குத் தக்கவாறு ஒவ்வோர் இரண்டிலும், இரண்டிரண்டு குணங்கள் விளக்கமாக இருக்கும். சங்கர்ஷணரானவர் ஞானம் பலம் என்ற இரண்டு குணங்களை யுடையவர்; இவர் பிரகிருதிக்குள் உருமாய்ந்து கிடக்கும் உயிர்த் தத்துவத்திற்குத் தலைவனாக நின்று அதனைப் பிரகிருதியினின்றும் வேறாக்கிப் பிரத்யும்ந நிலையும் அடைந்து, வேதம் முதலிய சாத்திரங்களை வெளியிடுவதையும், உலக அழிப்பையும் செய்பவராக இருப்பார். பிரத்தியும்நரானவர் ஐசுவரியம், வீரியம் என்ற குணங்களோடு கூடி ஞானத்திற்கு ஊற்றுவாயான மனம் என்ற தத்துவத்திற்குத் தலைவனாக நின்று சாத்திர முறைப்படி ஒழுகவேண்டிய தர்மோபதேசத்தையும் சுத்தவர்க்க சிருஷ்டியையும் செய்ய வேண்டியவராக இருப்பார். அநிருத்தரானவர் சக்தி, தேஜஸ் என்ற இரு குணங்களோடும் கூடி உலகப் பாதுகாப்பிற்கும் உயிர்கள் ஈடேறுவதற்குத் தகுதியான தத்துவ ஞானங்களைக் கொடுத்தற்கும், காலப் படைப்பிற்கும், மிச்ரவர்க்க சிருஷ்டிக்கும் உரியவராக இருப்பார்.

இந்த நான்கு வியூகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பன்னிரண்டு கிளை வியூகங்களாகப் பிரியும். வாசுதேவர், கேசவன் நாராயணன், மாதவன் என்று மூன்றாகவும், சங்கர்ஷணர், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனனாகவும்; பிரத்யும்நன் திரிவிக்கிரமன், வாமனன், சீதரதாமோதரனாகவும், பிரியும். இவர்கள் பன்னிரண்டு ஆதித்தர்களாக நின்று பன்னிரண்டு திங்கள்களின் தலைவர்களாகப் பன்னிரண்டு திசைகளில் வீற்றிருப்பர். இவர்களின் அறிகுறியாகத்தான் வைணவர்கள் தமது திருமேனியில் திருமண் காப்பினை (புண்டரத்தை) இட்டுக் கொள்வர். இவர்கள் மரணமாகும் வரையிலும் திருமேனியைக் காப்பர் என்பது வைணவர்களின் நம்பிக்கை. திருவாய்மொழியிலுள்ள பன்னிரு திருநாமப் பாட்டும், தேசிகப் பிரபந்தத்திலுள்ள பன்னிரு நாமம் என்ற சிறு பிரபந்தமும், இந்தப் பன்னிரு எம்பெருமான்களைப் பற்றியவை. திருமண் தரித்துக் கொள்ளும்போது இந்தப் பாசுரங்களை அநுசந்திப்பது வழக்கம். இதனால் இறைவன் திருவடிப்பேறு கிட்டும் என்பது வைணவர்களின் நம்பிக்கை.

திருப்பாற்கடல் என்ற திருத்தலம் வட துருவத்திற்கும் அப்பால் உள்ளதாகச் சொல்லப் பெறுகின்றது. மனிதர்கட்கு எட்டாத இடம் இது; வட கடலைச் சேவித்தே மன நிறைவு பெற வேண்டியதுதான். சூக்கும உடலைக் கொண்டவர்கள் தாம், இந்த இடத்திற்குச் சென்று அடைதல் முடியும்; தேவர்கள், பண்டைய முனிவர்கள்,யோகியர் இவர்களைப் போன்ற பிறர், இந்த இடத்திற்குச் செல்லுதல் கூடும். நான்முகன், தேவர்கள் இவர்களின் குறைகளைக் கேட்டு அவற்றைத் தீர்ப்பதற்

காகவே பரமபதநாதன் வியூகநிலையில் இங்கு எழுந்தருளியுள்ளான். அடியார்கள்பொருட்டு அவதாரங்கள் எடுக்கும் இடமும் இதுதான். இந்தப் பாற்கடலைக் கடைந்துதான் அமுதம் பெற்றுத் தேவர்கட்கு வழங்கினான் எம்பெருமான்; பெரிய பிராட்டியார் பிறந்த இடம் இதுதான்; அவரை இறைவன் ஏற்றான்.

பாலோடை என வழங்கப் பெறும் விண்மீன்களின் கூட்டத்தைத்தான் பண்டையோர் பாற்கடல் என வழங்கியதாகவும் சொல்லப் பெறுகின்றது. இப்பாற்கடலின் தனிச்சிறப்பு இன்றும் அறிவியலறிஞர்களிடையே ஒரு புதிராகவே உள்ளது. பேரண்டத்தில் வேறெங்கும் நடைபெறாத ஒரு திருக்கூத்து இங்கு நடைபெற்று வருவதாகக் கருதுகின்றனர் அவர்கள். மற்ற இடங்களிலெல்லாம் ஒரு பொருள் உரு மாறி வேறொரு பொருளாகுமேயொழிய சூனியத்திலிருந்து ஒரு பொருள் உண்டாவதில்லை. ஆனால், பாலோடைமாத்திரம் இதற்கு விதி விலக்காகும் என்பது அறிவியலறிஞர்களின் கருத்தாகும். வெறும் பாழிலிருந்து அதாவது இன்மையினின்று நீரிய அணுக்கள் பாலோடையில் எப்படியோ படைக்கப் பெறுகின்றன. இது விளங்காப் புதிராக இருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். இந்த இடத்திலேயே பதுமநாபன் கொப்பூழில் நான்முகன் தோன்றி உலகினையும் பிறவற்றையும் படைத்தான்.

இந்தத் திருப்பாற்கடல் எம்பெருமானை முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகிய ஒன்பதின்மர் மங்களாசாசனம் செய்துள்ளனர். ''வரைமேல் மரகதமே போலத் திரைமேல் கிடந்தான்'' என்று பொய்கையாழ்வாரும், ''பாற்கடலான்'' ''மாகடலான்'' என்று பூதத்தாழ்வாரும், ''பாற்கடல் உளான்'' என்று பேயாழ்வாரும் இந்த எம்பெருமானைக் குறிப்பிடுகின்றனர். பெரியாழ்வார்,

''அரவத்து அமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து''

என்றும்,

'' பனிக்கடலிற் பள்ளிகோளைப்
பழகவிட் டோடிவந்துஎன்
மனக்கடலில் வாழவல்ல
மாயமணாள நம்பீ ''

என்றும் குறிப்பிடுவர். இரண்டிலும் தன் வியூக நிலையைவிட்டு அந்தர்யாமித்துவ நிலையை மேற்கொண்டதைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இந்த ஆழ்வாரின் ஒரு மகளான திருமகளார்,

'' பாற்கடலுள்
பையத் துயின்ற
பரமன் அடிபாடி ''

என்று பேசுவர். திருமங்கையாழ்வார், 'பாற்கடலாய்' 'கடல்கிடந்த கனியே' 'பாற்கடல் கிடந்தாய்' என்றெல்லாம் கூப்பிட்டழைப்பர், மேலும், இந்த ஆழ்வார் இந்த எம்பெருமானை ''அரவு அணை வேலைக் கிடந்தாய்'' ''பாற்கடல் கிடந்த பரமனார்'' ''கடல்கிடந்த கருமணி'' ''அறிதுயில் அலைகடல், நடுவே ஆயிரம் சுடர்வாய் அரவு-அணைத் துயின்றான்'' ''பரனைத்துயில் ஏறு வங்கமலி தடங்கடலுள் அநந்தன் என்னும், வரி அரவின் அணைத் துயின்ற மாயோன்'' என்பன போன்ற சொற்றொடர்களால் நமக்கு இனங் காட்டுவர்.

நம்மாழ்வார் திருப்பாற்கடல் நாதனைப் ''பாற்கடல் சேர்ந்த பரமன்'' ''அலைகடல் பள்ளி அம்மான்'' ''தொடுகடல் கிடந்த எம் கேசவன்'' என்றெல்லாம் இனங்காட்டுவர். இன்னும் தெளிவாக இவர்

'' ஏகமூர்த்தி இருமூர்த்தி
மூன்றுமூர்த்தி பலமூர்த்தி
ஆகி.....''

என்று இந்த எம்பெருமானைக் காட்டுவர் : ஏகமூர்த்தி என்பவர் பரவாசுதேவர்; இருமூர்த்தி என்பவர்கள் பரவாசுதேவர், வியூக வாசுதேவர்; மூன்றுமூர்த்தி சங்கர்ஷணர், பிரத்யும்நர், அநிருத்தர். பலமூர்த்தி. ''எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்'' என்றபடி பல அவதார மூர்த்திகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இந்த ஆழ்வார் வியூக நிலை எம்பெருமானை மிக அழகான உவமையாலும் எடுத்துக் காட்டுவர்.

மாநீர் வெள்ளி மலைதன்மேல்
வண்கார் நீல முகில்போல
தூநீர்க் கடலுள் துயில்வானே''

திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது எம்பெருமான் திருக்கண் வளர்வதானது ஆழ்ந்த நீர்க்குள்ளே அழுந்தின தொடு வெள்ளிமலையின்மீது காளமேகம் படிந்தாற்போன்றுள்ளது என்கின்றார்.

இங்ஙனம் இந்த எம்பெருமான்மீது ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்யப்பெற்றுள்ள திருப்பாசுரங்களில் ஆழங்கால்பட்டு இந்த எம்பெருமான்களை அநுபவிக்கின்ற நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர அதனையும் அநுசந்திக்கின்றோம்.

'' தொழும்பாய நான்நல்ல
சூதுஅறிந்து கொண்டேன்
செழும்பாய் அலைமுத்தம்
சிந்தி—முழங்கும்
திருப்பாற் கடலான்தாள்
சேர்ந்தார் அடிசேர்ந்து
இருப்பாற்கு அடலாம்
இடர்''

இதில் ''பாகவதர்களின் திருவடிகளை ஆச்சிரயித்தலே பிறவித் துன்பங்கள் யாவும் எளிதில் ஈடேறுதற்குரிய உபாயம் என்பதை யான் நீங்கி அறிந்துகொண்டு கடைப்பிடிக்கலானேன்'' என்கின்றார். எளிய செயலால் பெரும்பேறு கிடைக்கக்கூடிய வழியாதலின் 'நல்ல சூது' என்று குறிப்பிட்டார். நாம் இருந்த இடத்திலிருந்தே அநுபவிக்கக்கூடிய எம்பெருமானாதலின் பயணத்தால் ஏற்படும் சிரமம் ஏற்படவில்லை.

***

# நறையூர் நீலகண்ட நண்டர்

'மகாவித்துவான்'

திரு. பண்டித நடேசனார், பி.ஏ., ஜே.பி

திருநறையூர், நாச்சியார்கோயில் என்று வழங்கும். சித்தீச்சரம் என்ற சிவன்கோயிலும் இவண் உண்டு. ''திருநறையூர்த் தேனே'' என்று விளித்துப் போற்றுகின்றார் ஆழ்வார். நாறும் பொழில் சூழ்ந்து அழகாய நறையூர் நின்ற நம்பியை, இயற்கையை இறையை, அவண் உள்ள ஊருணியை அநுபவிக்கும் ஆழ்வார், அந்நீரில் வாழும் நண்டர் நட்பினையும், அவர் தம் மனைவியின் கற்பினையும் கண்டு களித்துத் தம் பாடலில், அத் தம்பதிகளை வைப்பாக வைத்துப் பாடினார். ஆழ்வார் பாசுரத்தைப் படித்ததும் திருநீலகண்டநாயனார் வரலாறு என் நினைவுக்கு வந்தது; அண்டர்க்குப் பயந்தோடும் நண்டரது நிலையையும், நள்ளியினது கற்பினையும் காண்பம்.

தென்றல், மலர்களை வீசி இறைக்கும், முல்லைமலர்கள் முறுவலிப்பனபோல் மலரும். தாமரைப் பூவில் பாயல் கொண்டிருந்தஅலவன் (ஆண் நண்டு) முகத்தைக் கண்டு, நள்ளி (பெண் நண்டு) பிணங்கும். நாச்சியார்கோயில் பெண்ணரசு நாடு. ஆண் அரசு நாடெனில் கேட்பாருண்டு; ஆனால் இங்குக் கேட்பாரில்லை. காஞ்சியில் காமாட்சிக்கு முதலிடம்தந்துள்ளது போல், திருநறையூரில் (நாச்சியார் கோயிலில்) பிராட்டிக்கே முதலிடம். திருவிழாக் காலங்களில் இன்றும் திருவீதிப் புறப்பாடுகளில், நாச்சியார் முன்னே வர, சுவாமி பின்னே எழுந்தருளுதல் கண்கூடு. பேணுவது பெண். பெண்ணே உலகிற்கு முதல். ''சத்தியாய்ச் சிவமாகி'' என்றார், பரஞ்சோதியார். தாய்மையே போற்றும் மலையாளத்தில் பெண்ணுக்கு ஆண் அடக்கமே.

ஆம்பல் மலரொன்றில், அலவனும் அவன் தருமபத்தினியாம் நள்ளியும் வீற்றிருந்தனர். இன்பச் சோலையுள் இருவரும் உலாவினர். நன்கலமாகும் நன்மக்கட் பெறக் கருவுற்றாள் நள்ளி. கருவுற்ற தன் பேடைக்கு இனிப்பும் புளிப்பும் உடைய சிற்றுணவு தேடித் தர அலவனுக்கு ஆசை பிறந்தது. அது வளர்ந்தது. மாலை நேரத்தில் நள்ளிக்குச் சொல்லாமலே புறப்பட்டது. தாமரைப் பூவிலிருந்து இனிய மகரந்தத்தைத் திரட்டிக் கொண்டிருந்தது. ஆசை அளவு கடந்ததால், நேரத்தை அளக்கவில்லை அலவன். சூரியன் மறைந்தான். முளரிநாயகன் மறையவே, முளரி தன்னைப் பிறர்காணா வண்ணம் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிக்கொண்டு இருந்தது. சூரியனைக் கண்டே தாமரை மலரும். அலவன் தாமரைக்குள் அகப்பட்டுக் கொண்டது. நள்ளியை நினைத்து நினைத்துத் தாமரை மலரைத் திறந்து வெளியே வர முயன்றது. ஆனால் முடியவில்லை. நாயகி கணவனது வரவினை எதிர்நோக்குவதுபோல் சூரியன் தோன்றும்வரை தாமரையும் அலவனும் நள்ளியும் காத்திருந்தன.

எண்ணாததெல்லாம் எண்ணி ஏழை அலவன், இரவு முழுவதும் மலரினுள் புரண்டு புரண்டு நித்திரையற்றுப் பொழுது புலர்ந்ததும் வெளிப்போந்தது. நிறம் மாறிய அலவன், தாதும் சுண்ணமும் உடலில் ஒட்டியவண்ணம் தன் மனைக்கு வேகமாக ஓடிவந்தது. கதவு தாளிட்டுக் கொண்டு கணவனைக் காணாது, கண்கலங்கியவண்ணம் நள்ளி ஆம்பலினுள் கிடக்கின்றாள். சந்திரனில்லாதபோது ஆம்பல் கூம்பும். ஆம்பல் குவியும்போது அலவன் நள்ளியிடம் வந்தது.

ஓர் இரவு முழுதும் அலவன் வேறோர் இடத்தில் தங்கித் தன்னிடம் வந்தது தகாது; கணவன் அசைவனாகிவிட்டான் என்ற எண்ணத்தால், திருநறையூர் நம்பியை முன்னிறுத்திக் கருவுற்ற நள்ளி, அலவனைக் கண்டு, அவனது தோற்றம் நாற்றம், நிறம் முதலியன மாறுபட்டிருத்தலால் ''எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்'' என்று கூறிய சைவப் பெண்போல், அலவனிடம் பேசாமல் நள்ளி ஊடியது. ஊடல் கூடற்கின்பம் என்று கருதி நறையூர் நண்டர் ஆம்பலண்டையே நின்றார். இவ்வழகிய இனிய காட்சியினைப் பின்வரும் திருப்பாடலில் திருமங்கையாழ்வார். அழகுறப் பாடியருள்கின்றார்.

பள்ளி கமலத்திடைப்பட்ட
பகுவாய் அலவன் முகம் நோக்கி
நள்ளி ஊடும் வயல் நறையூர்'' (6.7:6)

—திருமங்கையாழ்வார்

# சரணாகதியின் சிறப்பு

''பன்மொழிச் செல்வர்''
திரு டி. வி. ஆர். சாரி, எம். ஏ., புதுவை.

சரணாகதி என்பது நம் சம்பிரதாயத்தின் பழமையான தத்துவம் ஆகும். சரண் அடைதல், ஆச்ரயித்தல், தஞ்சம்புகுதல், அடைக்கலம் பெறுதல் என்றெல்லாம் ஆபத்திலிருந்து விடுபடுவதற்கு எண்ணிய காரியத்தைத் தன்னால் இயலாதபோது உரியவர்களை நாடி நிறைவு பெற நம் பெரியார்கள் பின்பற்றி வந்தசிறந்த முறை என்று புராணங்களிலிருந்தும், பெருங் காப்பியங்களிலிருந்தும் அறிய முடிகிறது. சரணா கதியில் மூன்று அங்கங்கள் அடங்கியுள்ளன. ஒன்று சரணாகதி என்பது. இது அடைக்கலம் புகுதல் என்ற செயலைக் குறிக்கிறது. அதாவது உரியவர்களை அணுகுதல் அல்லது தஞ்சம் அடைதல் என்பதாகும். தஞ்சம் புகுதல் பயன் அளிப்பதற்குத் தஞ்சம் அடைபவரும், தஞ்சம் அளிப்பவரும் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். தஞ்சம் பெறுபவன் அடைக்கலம் பெறுவதற்கான நிலையில் இருத்தல் எவ்வாறு அவசியமோ அவ்வாறே தஞ்சம் அளிப்பவருக்குத் தகைமை இருத்தல் அவசியம். சரணடைபவன், அடைக்கலம் பெறுபவன், தஞ்சம் புகுபவன் சரணாகதன் என்று அழைக்கப்படுகிறான். சரணாகதனுக்காக லட்சணங்கள் அகிஞ்சனத்துவம், அநந்நியகதித்துவம் ஆகும்.

தஞ்சம் அடைபவனுக்குத் தன்னால் இயலாமை, என்பதும், வேறு வழியில்லாமை என்பதும் அவசியமான நிலைகள் ஆகும். அதுபோல் சரண் அளிப்பவன் சரண்யன் என அழைக்கப் படுகிறான். சரண்யனுக்காக லட்சணங்கள், சர்வ சக்யத்துவம், சௌலப்யத்துவம், காருண்யம், சுவாமித்துவம் ஆகும். எல்லா வல்லமையும் பெற்றிருப்பதும், நாடி வந்தவரின் எண்ணத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய வல்லமை பெற்றிருப்பதும், எளிதில் அணுகக்கூடிய தன்மையும், பரிவோடு ஏற்கும் சிறப்பும், தலைவன் என்று ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்நிறைவும், அடைக்கலம் தரக் கூடியவரின் குண நலன்கள் ஆகும். தன்னால் இயலாமையை உணர்ந்து வேறு வழியில்லாமையை அறிந்து தன்னிறைவு பெற்றுத் தஞ்சம் அளிக்கக்கூடிய தகைமைசால் பெருந்தகையை அடைந்து, அவரின் கருணையிலும் வல்லமையிலும் தளரா நம்பிக்கை கொண்டு அணுகியபோது தஞ்சம் கிடைக்கிறது; சரணாகதி பலன் அளிக்கிறது; அருளைப் பெற முடிகிறது, என்பது சரணாகதியின் தத்துவமாகும். தலைவன் சரணளிப்பதற்கான தகைமையுடையவன் என்பது கம்பராமாயணத்தின் துவக்கப்பாடலாகிய ''உலகம் யாவையும்'' என்ற பாடலில், ''அவர் தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்கள்'' என்பதிலிருந்து தெளிவாகிறது.

சரணாகதித் தத்துவத்தைச் சித்தரிக்கும் சம்பவங்கள் புராண இதிகாசங்களில் பல இடங்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள்இராம காதையாகிய இராமாயணத்தில் சரணாகதியின் தத்துவம் சிறந்த முறையில் வரையப்பட்டுள்ளது. ஆகவே நமது பெரியோர்கள் இராமாயணத்தைச் 'சரணாகதி சாத்திரம்' என்றே போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

இராமாயணத்தில் பல இடங்களில் சரணாகதியைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதோடு, சரணாகதிபெற்ற பாத்திரங்கள் பலவற்றின் தன்மையையும், அவை பின்பற்றிய முறைகளையும், பெற்ற பலனையும் அழகுறச் சித்தரிப்பதையும் சரணாகதி பலன் அளிப்பதற்குப் பூரணத்துவம் அவசிய மென்று வலியுறுத்தப்பட்டிருப்பதையும் அறியலாம்.

பரம்பொருளாகிய இராமபிரான் விபீடணனுக்குத் தஞ்சமளிக்கும் சந்தர்ப்பத்திலே சுக்ரீவாதிகளுடன் நடத்திய சம்வாதத்தின் போது அனாதியாய், பலருக்குச் சரணாகதி பலனளித்த சம்பவங்கள் பலவற்றை எடுத்துக் கூறி, சரணாகதியின் சிறப்பினை வலியுறுத்தியிருப்பதை நாம் காணலாம்.

''உடைந்தவர்க்கு உதவான் ஆயின்
உள்ளது ஒன்று ஈயான் ஆயின்,
அடைந்தவர்க்கு அருளான் ஆயின்,
அறம் என்ஆம்? ஆண்மைஎன் ஆம்?''

என்ற கவிச் சக்கரவர்த்தியின் வரிகளில் அடைக்கலம் அடைந்தவர்க்கு அருளாமற் போயின், அறன் என்ன பயன் உடையது? என்ற வினாவில் ''அடைக்கலத்துக்கு அருளுதலே அறம்'' என்பது ஆணித்தரமாகக் கூறப்பட்டுள்ளது.

''போதகம் ஒன்று கன்றி,
இடங்கர்மாப் பொருத போரின்
ஆதி அம்பரமே! யான்உன்
அபயம் என்று அழைத்த அந்நாள்,
வேதமும் முடிவு காணா
மெய்ப்பொருள் வெளி வந்து எய்தி,
மாதுயர் துடைத்த வார்த்தை
மறப்பரோ, மறப்பு இலாதார்''

என்ற கம்பராமாயணப் பாடலில் சொல்லப் பட்டிருக்கும் கஜேந்திர மோட்ச சம்பவம் சரணாகதி தத்துவத்துக்கு ஒரு இலக்கணமாக அமைந்துள்ளது. பெருமாளின் வாய்மொழி களின் மூலம் அபயப் பிரதானத்தின் அரிய தன்மையை விபீடணன் அடைக்கலப் படலத் தில் அறியக் கூடியதோடு இராமாயணத்தில் சரணாகதி சம்பவங்கள் அனேகம் உள்ளன.

சக்கரவர்த்தித் திருமகனைத் திருக்கல் யாணக் கோலத்தோடு அயோத்திக்கு அழைத் துச் செல்லுங்கால், பரசுராமன் எதிர்வர, தயரதச் சக்கரவர்த்தி பரசுராமனிடத்தில் சரணாகதி பண்ணுகிறார். தயரதன் பண்ணிய சரணாகதியை ஆய்வு செய்தக்கால் அதில் பரசுராமனைச் சரண்யனாகக் கொண்டு சரணா கதனாகிய தயரதன் இராமன் முதலானவர் உயிர்காக்கப்பட வேண்டும் என்ற பயன்கருதி சரணாகதி பண்ணி வைக்கிறான்.

''பாலானாம் மம புத்ரனாம்
அபயம் தாது மர்ஹஸி''

என்னும் இராமாயணச் சுலோகம் தயரதனின் சரணாகதிப் பயனைத் தெளிவுபடுத்துகிறது. ''அவன் அன்னது பகரும் அளவையின் மன்ன வன் அயர்வான்'' என்று பரசுராமப் படலத்தில் வரும் கம்பராமாயணப் பாடலில் ''இவனும் எனது உயிரும் உனது அபயம் இனி'' என்ற தயரதனின் வேண்டுகோள், தனது உயிரினும் சிறந்தவன் இராமன் என்பதனால், இராம னுக்கு ஏதும் நிகழாவண்ணம் அடைக்கலம் தந்து காத்தருள வேண்டும் என்பதே தயரத னின் அடைக்கலத்திற்கான பயன் என்று தெளி வாகிறது. ஆயினும், சரணாகதிக்கான லட்ச ணங்கள் பூரணமாக இல்லாமற் போனமை யால் தயரதனின் சரணாகதி பயனடைய வில்லை. அதாவது இராமன் முதலோர் காக்கப்படுவதற்குப் பதில், இராமனிடத்தில் பரசுராமன் பங்கப்பட வேண்டியதாயிற்று. இவ்விடத்தில் தயரதனால் சரண்யனாகக் கருதப்பட்ட பரசுராமனுக்குச் சரண்யனுக் கான சம்பூர்ணத்துவம் இல்லை. அதாவது இராமன் முதலோரைக் காக்கக்கூடிய சாமர்த் தியம் இருந்தபோதிலும் சரண்யனுக்கே அவசிய மான கருணை பரசுராமனிடத்தில் இல்லாமற் போனதே காரணம். சரண்ய லட்சணப்பூர்த்தி இல்லாததால் தயரதனின் சரணாகதி பலிக்க வில்லை.

விபீடண சரணாகதிக்குப் பின்னர் இராம பிரான் வானர சைன்யத்துடன் சமுத்திரத்தைக் கடக்க, செய்வதறியாது, சிந்தனையில் மூழ்கி யிருந்தபோது விபீடணன் ''தான் சரணாகதி யால் பயனடைந்த காரணத்தால், அவ் வழியையே பின்பற்றிச் சரணாகதி செய்தால், சமுத்திரராஜன் மனமுவந்து வழியமைத்து உதவுவான்'' என்று கூறினான். சர்வலோக சரண்யனான இராமபிரானும் சரணாகதிப் பயனை, அதன் தன்மையைத் தானும் அனு பவிக்கலாமே என்று எண்ணியேபோலும், சமுத் திர ராஜனிடத்தில் சரண் அடைந்திருக்கிறார். ஆயினும் சரணாகதி பலன் அளிக்காமல் போன மைக்குக் காரணம், இராமன் சரணாகதனாக இல்லாமற் போனதேயாம். அதாவது, சர்வ லோக சரண்யனாகிய இராமபிரான் சரணா கதனாக இருக்க முடியாததேயாம். மூன்று தினங்கள் நிதானம் கடைப்பிடித்த பின்னர், கடல் அரசன் கருணை காட்டாதபோது, பொறுமை இழந்து, சினங்கொண்டு, ''சாகரம் ஸோஷயிஷ்யாமி'' என்று சூளுரைத்தமையால் இராமபிரானுக்குச் சரணாகதியில்லாது தன் வலிமையையும் துணை கொள்ளலாம் என்னும் வழியும் இருந்தது தெளிவாகப் புலப்படுகிறது.

''ஒரு வில்லால் ஓங்கு முந்நீர் அடைத்து'' என்ற, பாசுரப்படி இராமபிரானின் காரியப் பூர்த்தி, வில்லால் நிகழ்ந்ததே அன்றிச் சரணா கதியால் அல்ல. அதாவது, சரணாகதனுக்கு அவசியமான அகிஞ்சனத்துவமும், அநந்யகதித் துவமும், அதாவது,வேறு வழியின்மை, இய லாமை என்ற லட்சணங்கள் இராமனிடத்தில் இல்லாமற் போனதே இதற்குக் காரணம்.

M. RAJU, By Commissioner, I/c (Sd.) HR&CE Administration Dept

இராமாயணத்தில் முழுமையான சரணா கதி ''விபீஷண சரணாகதி'' என்றே கூறலாம். சரணாகதிக்கான லட்சணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்பம்சம் அதுவே யாம். இணையிலாத வல்லமை பெற்றவனாய், கருணைக் கடலாய், அறத்தின் திருவுருவமாய்த் திகழ்ந்த சர்வேஸ்வரனாகிய இராமபிரான், சரண்யனுக்கான லட்சணங்களாகிய சாமர்த்திய மும், காருண்யத்வமும் அமையப் பெற்றவன். இதனை, இராவணனிடத்தில் மாரீசன் விவரிக் கையில் ;

ராமோ விக்ரஹவான் தர்ம;
ஸாது; ஸத்ய பராக்ரம;

என்ற வார்த்தைகளில் இருந்து திவ்யமங்கள விக்ரஹம் படைத்த தர்மமே இராமன். அதா வது திருமேனி படைத்த அறமே இராமன் என்பதும், சத்யவான் என்பதும், பராக்ரம சாலி என்பதும் தெள்ளத் தெளிவாய்ப் புலப் படுகிறது. பகவான் ஒருவனே தர்மம். அவனே சரணம், அவனே உபாயம், என்பதாலும், பக வானைத் தர்மமாகப் பற்றுதலே சரணாகதி என்பதாலும் பகவானாகிய இராமன் சரண்ய னாகிறான்.

சரணாகதனாகிய விபீஷணனிடத்தில் அகிஞ் சனத்துவமும், அநந்யகதித்துவமும் அமையப் பெற்றிருந்தன. இராவணன் இராமனிடத்தில் அபசாரப்பட்டதை அதர்மம் என்று எடுத்து வைத்து, இராமனிடத்தில் நட்பு கொள்ளும் படி அறிவுரை வழங்கியதால் விபீஷணன் இராவணனால் புறக்கணிக்கப்பட்டபடியால், துணையின்றித் தவிக்கும் தனக்கு, நற்குணக் குன்றாக விளங்கும் இராமபிரான் அல்லாமல் வேறொருவர் தஞ்சமளிக்க இயலாதார் என்ற திட நம்பிக்கை கொண்டிருந்தமையால் சரணா கதனுக்காக லட்சணப் பூர்த்தி விபீடணனிடத் தில் காணப்படுகிறது.

''எல்லை இல் பெருங்குணத்து இராமன்
தாள் இணை புல்லுதும்;
புல்லி இப்பிறவி போக்குதும்''

என்ற கம்பராமாயணப் பாடலில், இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். விபீஷணனே பின்னர்—


''நாயக! நாயினேனை
உடன் உதித்தவர்களோடும் ஒருவன்
என்று உரையா நின்றாய்''

என்று இராமனைப் போற்றுங்கால், தன்னுடைய தகுதியின்மையைப் புலப்படுத்தவே, ''நாயினேனை'' என்று மொழிந்தது கண்டு, சரணாகதனுக்கான லட்சணங்கள் விபீஷணனிடத்தில் பூர்ணமாக இருப்பதைக் காட்டுகிறது. விபீடணன் சரணாகதியும் பூரணமானதே என்பதற்கு அவர் சரணாகதியின் பயனைப் பெற்றதே எடுத்துக் காட்டுகிறது. தஞ்சம் என வந்தடைந்த விபீடணனை நோக்கி இராமபிரான் அக்கணமே இலங்கையின் அரசுச் செல்வத்தைக் கொடுத்துவிட்டதாக அருளிச் செய்தவிருந்தே நன்கு அறியலாம்.

''ஏழினோடு ஏழாய் நின்று
உலகம் என்பெயரும் எந்நாள்
வாழும் நாள் அன்று காறும்,
வளைஎயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன் என்றனன்''

சரணாகதி பலன் அளித்ததனால் பெரு மகிழ்ச்சி அடைந்த போதிலும் விபீடணன் சரணாகதியின் பயன் அரச செல்வத்தை அடைவதற்கும் மேலாக அவன் திருவடியினைப் பற்றி இருத்தலே என்பதை முற்றிலும் உணர்ந்தவனாய் இராமபிரானின் பாதுகைகளைப் பிரார்த்தித்துப் பெற்றுத் தன் திருமுடியில் தாங்கி மகிழ்ந்தபடியால் சிறந்த சரணாகதனாகத் திகழ்ந்தான் என்னில் அது மிகையன்று.

சரணாகதி, சத்ய தர்மத்தைப் போல வியாபகமானது. யார், எவர் என்ற உயர்வு தாழ்வு இல்லாமல் யாவரையும் அதிகாரிகளாகக் கொண்டதே சரணாகதி தர்மம். உண்மையை இவர் தான் பேச வேண்டும் என்னும் நியதி எவ்வாறு இல்லையோ, அவ்வாறே இறைவனிடத்தில் இன்னார்தான் சரணாகதி பண்ண வேண்டும் எனும் நியதியும் கிடையாது. ஆசைகள் அறுபட்டு, ஆணவம் அழிந்து அறிவுச் சுடர் பிரகாசித்து அல்லல் நீங்கி அமைதி பெற்று, பேரானந்த நிலையடையப் பேருதவி புரியும் ஒரே வழி சரணாகதியே என்பதை நம் முன்னோர்களின் வாழ்க்கை நெறியிலிருந்தும், அருளிச் செயல்களிலிருந்தும் அறிய முடிகிறது. எக்காலத்திற்கும், எந்நாட்டவர்க்கும் பயன் தரவல்ல நம்பகமானதோர் நல்வழி சரணாகதியேயாம்.



சென்னை - சைதாப்பேட்டை -
திருக்காரணி,
அருள்மிகு பொற்கொடி அம்மை
உடனுறை
திருக்காரணீசுவரப் பெருமான்
உற்சவத் திருவுருவம்

# 'மேற்கியல் வேதாந்தம்'

'வேதாந்த வித்தகர்'
திரு. டாக்டர் பி. எம். மகாதேவன், M.A., Ph.D., அவர்கள்

''ஒரு புதிய பொருள் வரலாற்றுக்குள்
வந்திருக்கின்றது;
அதுதான் மேற்கியல் வேதாந்தம்''
—கெரால்ட் இயர்ட்

வேதாந்தம் என்பது, முழு அநுபவத்தின் அல்லது எல்லையற்ற ஞானத்தின் தத்துவமாகும். அஃது, இனம் அல்லது நிறம், தட்ப வெப்பம் அல்லது தேசம் என்னும் வேறுபாடுகளை அறியாதது. இந்தியாவிலேயே முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பெற நேர்ந்தபோதிலும், அஃது இந்தியநாடு ஒன்றிற்கு மட்டுமே உரியதாகக் கருதப்பெறவில்லை. வேதாந்தப் பயிற்சி பெறுதற்குரிய தகுதிகள் பலவற்றுள் ஒரு குறிப்பிட்ட இடத்தின் பிறப்பு அல்லது இனம் என்பது, சேர்க்கப்பெறவில்லை. வேதாந்தத்தின் தலைஊற்றாக விளங்கும் உபநிடதங்கள் ''அழியாப் பேற்றுக்குரிய குழந்தைகளாகிய நீங்களெல்லாம்'' என்றே, தம்முடைய அழைப்பை அமைத்து, அனைவரையும் ஒரு சேர விளிக்கின்றன.

அவ் உபநிடதங்களிலிருந்து பெருகுகின்ற அத்துவைதம் என்னும் அழிவற்ற தத்துவமானது, என்றும் உள்ள பரம்பொருளைப் பற்றிய எல்லோருடைய தாகத்தையும் தணிக்க வல்லதாகத் திகழ்கின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், உலக மக்களில் ஒரு சிலர் மட்டுமே இந்தத் தாகத்தை உணரக் கூடியவர்களாக இருப்பர் என்பது உண்மைதான். உபநிடதம் ஒன்று குறிப்பிடுவதுபோல, ''பிரமத்தைப் பற்றிக் கேட்டுணர்வது கூடப் பலருக்குக் கடினமாக இருக்கும்: ஒருகால் கேட்டாலும், பலர் அதனைப் புரிந்து கொள்வதில்லை. அதனைப் பயிற்றுவிக்கக்கூடியவன் வியக்கத்தக்கவன். அதனைக் கண்டுபிடிப்பவன், மிக வல்லமை உடையவன். ஆற்றல் மிக்க ஆசிரியர் ஒருவர் கற்பிக்க, அதனை உணர்பவன் மிகவும் நற்பேறுடையவன்''. அழியாத ஆன்மாவைத் தேடுபவர்கள், அதைத் தேடுவது எங்ஙனம் கடினமோ, அங்ஙனமே மிக அரிய ஆர்வலர்கள், ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது தேசத்துக்குத் தனிச் சிறப்பாக உரிய பொருள்கள் அல்லர். மிகவும் எதிர்பார்க்கப்படாத காலங்களில்கூட, அவர்கள் காணப்படலாம். இடம்-காலம் என்னும் நிபந்தனைகள், ஆன்மாவிற்குப் பொருந்துவதில்லை. இடம்-காலம் என்பவற்றைத் தவறாகப் பயன்படுத்துதலே, மாயையாக அமைகிறது.

காலம் இடம் என்னும் தடை நிலைகளினின்று, நம்மை விடுவிக்கும் குறிக்கோள் கொண்ட ஒரு தத்துவமானது, ஆன்மிகச்செய்திகளில், ஒருசார் நிலப்பகுதி உரிமைகளின் பொய்யான எந்தக் கொள்கையையும், உடன்படுவதில்லை. இந்திய நாட்டின் இயற்கைப் பரப்பளவு, எல்லைகளை உடையதாக இருந்தாலும், இந்தியாவின் ஆன்மிகக் குடியரசுக்கு எத்தகையதோர் எல்லைப் பாகுபாடும் இல்லை. பழங்காலத்தில் இருந்ததுபோலவே, இந்தியாவின் ஆன்மிக நற்செய்தி, உலகின் எல்லாப் பகுதிகளிலும், தனக்குரிய ஆர்வலர்களை, இந்நாளிலும் மீண்டும் பெற்று வருகின்றது. மேலை நாடுகளில், அதுவும் குறிப்பாக அமெரிக்க நாட்டில், வேதாந்தத்தின் செல்வாக்குப் பரப்பளவு-அங்கேயுள்ள நம்முடைய பல சுவாமிகளின் முன்னோடியான பணிகளின் மூலம், மெல்ல மெல்ல விரிந்து பரவி வருகின்றது. மேலைநாடுகளின் சிறந்த பேரறிஞர்கள் சிலர் வேதாந்தத்தின் உயரிய சிறப்பினை உணரவும், அது திறந்துள்ள வழியினைப் பின் தொடரவும் தொடங்கியுள்ளனர். மனிதகுல வரலாற்றில், ''மீளவும் விழிப்பூட்டப்பெற்ற மேலை நாடுகளின், வேதாந்த தத்துவ ஆர்வம்'' என்னும் ஒரு புதிய பகுதி, சேர்க்கப்பெற்று வருகின்றது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வேதாந்த மையங்களில், மேலை நாட்டுக்கு வேதாந்தம் கற்பிக்கும் முறை பற்றிய சிக்கல், தீர்க்கப் பெற்றுக் கொண்டு வருகின்றது. வேதாந்த உணர்வு என்பது ஒன்றாகவே உள்ளதாயினும், அதனைப் பற்றிய விளக்கங்கள், இந்தியாவிலும்கூடப் பலவேறுவகையாக விளங்குகின்றன. சங்கரரின் கலப்பற்ற அத்வைதக் கொள்கை முதல், மத்துவரின் நெகிழ்ந்து கொடாத துவைதக் கொள்கை வரையில், இடைப்பட்டனவாக எத்தனையோ பலவகையான வேதாந்தக் கொள்கைகள் இருந்து வருகின்றன. அவைகள் அனைத்தும், வேதங்களையே தம்முடைய பிரமாணங்களாக உரிமை கொண்டாடுகின்றன. வேதங்களின் சமய தத்துவச் சிந்தனையில், நிர்க்குணப் பிரமம் என்றும், சகுணப் பிரமம் என்றும், முதன்மையான இருவகைப் போக்குகள் உள்ளன. இவற்றில் ஒன்று அல்லது மற்றொன்று, வேதாந்தத்தின் பிரிவுகள் ஒவ்வொன்றிலும், முதன்மை இடம் பெறுகின்றது. ஆனால் இந்த எல்லா வகைப் பிரிவுகளிலும், ஒருபெரும் பொதுக்கூறு அமைந்துள்ளது. அதுதான், உபநிடதங்களால் பிரமம் என்று அழைக்கப்படுகின்ற ஓர் அடிப்படைப் பரம்பொருளை உடன்படுவது. இவைகளுள், ''பிரமத்தை உருவமுடைய கடவுளாகக் கொள்வதா? அல்லது உருவமற்ற ஒரு பரம்பொருளாகக் கொள்வதா?' என்பது பற்றி, மிகச் சிக்கலான வேறுபாடு உள்ளது. அத்துவைதம் அல்லது இரண்டின்மையாகிய சங்கரரின் வேதாந்தக் கொள்கை, பிரமம் உருவமற்றது என்னும் பின்னைய கொள்கையினை

ஆதரிக்கின்றது. ஏனையபிறவோ கடவுள் உருவம் உடையவர் என்னும் கருத்தினைத் தழுவுகின்றன. சுவாமி விவேகானந்தர், ''மேலைநாட்டு உள்ளத்திற்குப் பெரிதும் இயைந்தது, பிரமம் உருவமற்றது என்னும் அத்வைத வேதாந்தமே என்பதனைத் தெளிவாகக் கண்டுணர்ந்தார். அவருக்குப் பின்னர், அவருடைய பணியினை மேலை நாடுகளில் செய்துகொண்டு வருபவர்களும்கூட, தங்களின் அனுபவத்தின் மூலம், சுவாமி விவேகானந்தரின் கண்டுணர்வு எவ்வளவு பிழையற்றது, மிகவும் சரியானது என்பதை, ஆராய்ந்து உணர்ந்துள்ளனர்.

இந்திய நாடு, மேலைநாடுகளுக்கு வழங்குவதற்கு, அத்துவைத வேதாந்தமே சிறந்தது என்பதற்குப் பலவகையான காரணங்கள் உள்ளன. அத்துவைதம் அல்லாத இந்தியச் சிந்தனையின் மற்றைய கொள்கைகளுக்கு, மேலைநாடுகளில் ஒப்புமைப் பகுதிகள் பல காணப்படக்கூடும். ஆனால் அத்துவைத தத்துவத்திற்கு, அத்தகைய ஒப்புமைக்கூறு எதுவும் இருப்பதாகத் தோன்ற வில்லை. ஃபிக்டே, பிராட்லி போன்ற தத்துவப் பேரறிஞர்களின் சிந்தனைகளுடன், அத்துவைதக் கொள்கை ஒப்பிடப்படுவதுண்டு. என்றாலும் அவைகள் கூட, முதன்மையான பகுதிகளில் அத்துவைதத்தினின்று வேறுபடுகின்றன. ஆதலின் மனித குலத்தின் சிந்தைனையிலும் அனுபவத்திலும், அத்துவைதமானது தலைசிறந்த ஓர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. மேலைநாட்டு உள்ளமானது, தனக்குரிய சூழ்நிலையினின்று நீங்கி, ஒரு நல்ல வாய்ப்பான இடத்தில் இருந்து கொண்டு, உண்மையை நோக்கவும் உணரவும் விரும்புமாயின், அந்த இடமானது மேலைநாட்டுச் சூழல்களுக்குள் காணப்படமுடியாத ஓர் இடமாகவே (இந்தியாவாகவே) இருக்கும். அத்துவைதமானது தனக்கேயுள்ள சிறப்பியல்பைப் பெற்றுள்ளது. அச்சிறப்பியல்பானது, மேலைநாட்டுச் சிந்தனையின் தரங்களால் மட்டுமன்றி, கீழைநாடு மற்றும் இந்திய நாட்டின் தரங்களாலும், ஆராய்ந்து அளந்து மதிப்பிடப் பட்டதாகும். மேலும் அத்துவைதமானது, பரப்பிரம்மத்தின் கடவுளியல் அணுக்கத்தினைத் தழுவி உள்ளடக்கியதேயன்றி, அதற்கு மாறுபட்டதன்று. அத்துவைதத்தில் கடவுளுக்கு இடமில்லை என்று வாதிடுவது, பயனில் வீண் செயலேயாகும். பரம்பொருளின் இரண்டின்மையாகிய அத்துவைதக் கொள்கையினை விளக்கும் பேருரையாளராகிய சங்கரர் பல்வேறு வகையான வடிவங்களைக் கொண்ட, உருவமுள்ள பரம்பொருளைக் குறித்து, உயிரை இயக்கும் அழகிய பற்பல துதிப்பாடல்களைப் பாடியுள்ளார். தமக்குப் பின்னர், அவர் விட்டுச் சென்றுள்ள அப்பாடல்கள், அவருடையஆழ்ந்த சிறந்த நல்ல பக்தியுணர்வுகளுக்குச் சான்று பகர்கின்றது. ''வழிபடுபவர்-வழிபடப்பெறும் தெய்வம்'' என்னும் உறவு, ஒரு சிறந்த உறவாகும். அவ்வுறவு, ஏனைய பிற எல்லாவகையான உறவுகளையும்விட, மிகவும் புனிதம் வாய்ந்ததாகும்.

ஆனால் அதுவும்கூட, பிரித்துணர இயலாத இறுதிநிலை அனுபவத்தில் கடக்கப் பட்டு விடுகின்றது என்று, அத்துவைதம் கூறுகின்றது. எது மிகுதியானதோ, அது குறைந்ததாக இருக்க முடியாது. அத்துவைதமானது கடவுள் உணர்விலும் மேம்பட்டது என்றால், அது கடவுளின்மைக் கொள்கையாகவோ, அல்லது கடவுள் எதிர்ப்புக் கொள்கையாகவோ இருத்தல் இயலாது. கடவுள் உணர்வுக் கொள்கைகள் பலவும் தமக்குள் ஒன்றொடொன்று பூசலிட்டுப் பிணங்கிக் கொள்ளலாம். அத்துவைதத்திற்கு அவைகளுள் எதனோடும் பூசல் இல்லை. சங்கரரின் குருவுக்குக் குரு என்று தொன்றுதொட்டுக் கருதப்பெறுகின்ற, பழமையான அத்துவைத தத்துவ ஆசார்யர் ஒருவர், ''அத்வைதமானது, பல்வேறு சமய தத்துவக் கொள்கைகளுக்கும், மூலமும் முழுமையும் ஆக விளங்குகின்றது; சமய தத்துவங்கள் யாவும், அத்துவைத தத்துவத்தின் பகுதிகளும் பாகுபாடுகளுமே ஆகும்'' என்று கூறுகின்றார்.

தற்காலத்திய மேலைநாட்டு உள்ளத்திற்கு அத்துவைதத்தின் கொள்கைப் பிடிவாதமற்ற தன்மை, மிக்க பெரும் கவர்ச்சியை விளைவிப்பதாகும். பழைய கால ஐரோப்பிய தத்துவ ஞானிகள், வெவ்வேறு வகையான கொள்கை வகைகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியுற்றுத் திளைத்து நின்றனர். ஆனால் இப்பொழுது தற்காலத்திய சிந்தனையாளர்கள் பலர், ஏதேனும் ஒரு கொள்கையைத் தழுவுவதற்குத் தயங்குகின்றனர்: ''நீர் எந்தவகையான சிந்தனைப் பிரிவைச் சேர்ந்திருக்கின்றீர்?'' என்னும் வினாவிற்கு, அமெரிக்க நாட்டுத் தத்துவ அறிஞர்களில் பலர் எத்தகைய விடையும் அளிக்க இயலாதவர்களாக இருக்கின்றனர். இருக்கத்தகும் நிலைக் கொள்கை (Idealism), இருக்கும் நிலைக் கொள்கை (Realism), உலகாயதக் கொள்கை (Materialism), மன இயல்புக் கொள்கை ( Mentalism ) போன்றவற்றிற்கு இடையே இருந்துவந்த பழைய காலத் தடைநிலைகள், இந்நாளில் மறைந்து வருவதாகத் தோன்றுகின்றன. அதன் விளைவாக மேலைநாட்டு உள்ளம், அத்துவைதக் கொள்கையை அறிந்து வியந்து போற்றுதற்கு ஏற்றதாக உள்ளது. ஏனெனில் அத்துவைதம் உலகில் நிலவி வரும் பலவகைக் கோட்பாடுகளுள் ஒன்றன்று. அங்ஙனமாயின், 'அத்துவைதமானது இரண்டின்மையன்றா?' என்று, எவரேனும் கேட்கக் கூடும். அத்வைதம் என்னும் சொல்லிலுள்ள முன்னொட்டானது, இரண்டெனும் தன்மைக்கு மட்டுமின்றி, கோட்பாடு என்பதற்கும்கூட, எதிர்மறையாகும் என்பது தான், அதற்குவிடை. அத்வைதத்தின் குறிக்கோள்களில் ஒன்று, ''தத்துவங்கள் என்று சொல்லப்படுகின்றனவும், ஒன்றோடு ஒன்று முரண்படுவனவும் ஆகிய கருத்துக்கள், பல குறைபாடுகள் கொண்டவை; ஏதோ ஒன்றிற்கு அப்பால் நம்மைக் கொண்டு செல்லுகின்ற வரையில்தான், அவைகள் பயன் படும்'' என்னும் உண்மையை, உணர்த்துவதே யாகும். முழு அனுபவத்தைப் பெறுவதுதான் நம்முடைய குறிக்கோள். அத்துவைதத்தின் மிக மேலான குறிக்கோளானது, அந்த அனுபவத்தை அடையும் வரையில், ஓயாமல் உழைத்தலை வற்புறுத்துவதே யாகும்.

அத்துவைதத்தின் கொள்கைப் பிடிவாதமற்ற தன்மையைப் பற்றி, மேலே நான் குறிப்பிட்டேன். அங்ஙனம் அதன் பண்பைச்

சுட்டியதற்குரிய காரணங்களுள் ஒன்றையும் குறிப்பிட்டேன். அதற்கு வேறு காரணங்களும் கூட உள்ளன. அறிவின் கருவியாகத் தகுந்த இயற்காரணம் அமைவது பற்றிய, அத்வைதத்தின் நிலையை, உதாரணமாக நாம் எடுத்துக் கொள்வோம். மரபுநெறிமதங்கள் அறிவை நம்புவதில்லை; நம்பிக்கையினையே அவைகள் வற்புறுத்துகின்றன. மேற்கில் பலவும், கிழக்கில் சிலவும் ஆகிய தத்துவநெறிகள், பகுத்தறிவைத் தவிர வேறு எந்தவகையான அறிவையும் ஏற்ப தில்லை. இந்த இருவகையான நிலைகளும், கொள்கைப் பிடிவாதத் தன்மை உடையவை என்று காண்பது கடினமன்று. நம்பிக்கையைப் பொறுத்தவரையில் அறிவிற்கு இடமில்லை என்று கொள்வதில், சமயங்கள் பிடிவாதத்தன்மை உடையனவாக இருக்கின்றன. அறிவுக்கு மேலானதோ அல்லது அப்பாற்பட்டதோ எதுவும் இல்லை என்று கொள்வதில், தத்துவ நெறிகள் பிடிவாத இயல்புடையனவாக இருக்கின்றன.

சமய தத்துவ ஆராய்ச்சியில் அறிவுக்குரிய சரியான இடத்தைக் கொடுப்பதுடன், ''மனிதனின் குறிக்கோள் பரம்பொருளின் இயல்பினைக் கொள்கையளவில் உணர்ந்துகொள்வதனால் மட்டும் அடையப் பெறுவதில்லை'' என்று அத்வைதம் சுட்டிக் காட்டுகின்றது. தத்துவம் என்பது அநுபவம்; அது வெறுந் தருக்க இயல் அறிவு மட்டும் அன்று. அநுபவத்தை விளக்கி விரித்துரைப்பதற்குத் தருக்கநெறி அறிவு இன்றியமையாததாக இருந்தபோதிலும், தருக்கநெறி அறிவே தத்துவமாகாது. முழு அநுபவம் தருக்க நெறி அறிவைக் கடந்து நிற்கின்றது. ஆயினும் அஃது அறிவுக்கு மாறுபட்டதன்று. கௌடபாதரின் நான்கு அத்தியாயங்கள் கொண்ட மாண்டூக்கிய காரிகை என்னும் நூலின் உரையில், வேதப் பிரமாணம் பற்றிய முதல் அத்தியாயத்தில் நிறுவப் பெறுகின்ற அத்வைத தத்துவக் கொள்கைகள், அடுத்த மூன்று அத்தியாயங்களில் தருக்க இயற் காரண விளக்கங்களின் மூலம், புரிந்து கொள்ளுவதற்கு உரியனவாகத் தெளிவுபடுத்தப்படுகின்றன. ஆதலின் அறிவாராய்ச்சி என்பது பயனுடையதாகவே விளங்குகின்றது. ஆனால் அதே சமயத்தில், அது தனக்கே எல்லாம் தெரியும் என்று அகந்தை கொள்ளவும், தன்னுடைய அறிவின் எல்லைக்கு அப்பால் அநுபவம் எதுவும் இல்லை என்று உரிமை கொண்டாடவும், முற்படுதல் கூடாது.

அத்வைதத்தில் கொள்கைப் பிடிவாதமற்ற தன்மை, அதன் வரலாற்றைக்கற்றுணர முற்படுபவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அத்வைதத்தில் கொள்கை வேறுபாடுகள் உள்ளன. ஏனெனில் அத்வைத ஆசிரியர்கள், உண்மையினை விளக்குவதற்குப் பலவகையான முறைகளை மேற்கொள்வது இன்றியமையாதது என்று கண்டுள்ளனர். ''ஆன்மா ஒன்றா பலவா?'' ''உலகத்தின் நிலைமை என்ன?'' என்பன போன்ற வினாக்களுக்கு, அத்வைத ஆசிரியர்கள் வெவ்வேறான விடைகளை அளித்துள்ளனர். விடுதலைப்பேறு குறித்தும் கூட, அவர்கள் தமக்குள் வேறுபட்டுள்ளனர். விடுதலைப் பேற்றிற்கு வழிவகுப்பது ஞான நெறியா அல்லது இறைவனிடத்து அன்பு செலுத்தும் பக்தி நெறியா? என்னும் வினாக்களில், சங்கரர் ஞான நெறியே விடுதலைப் பேற்றிற்கு வழிவகுக்கும் என்கின்றார். பிற்காலத்தில் அவரது வழிவந்த மதுசூதனர் என்பவர், அத்வைத தத்துவங்களை முழுவதும் ஒப்புக் கொண்டபோதிலும், பரப்பிரமத்தை உணர்வதற்குப் பக்திநெறியே எளிய நெறி என்கின்றார். இங்ஙனமே அத்வைதத்தை அணுகும் முறைகளில், ஒன்றற்கொன்று மாறான நிலைகள் உள்ளன. அத்வைதத்தின் கொள்கை வேறுபாடுகளை விளக்கப் புகுகின்ற ஒருநூல், அத்வைதத்தை ஒரு பெரும் ஆற்றுக்கு ஒப்பாகக் கூறுகின்றது. ஆறானது தொடக்கத்தில் ஒரு மூலத்தினின்றே தோன்றிய போதிலும், சமவெளியை அடைகின்றபோது பல கிளைகளாகப் பிரிந்து, பலதிற மக்களுக்கும் பயன்பட்டுப் பணிபுரிகின்றது. அதுபோலவே அத்வைதமும் வேதம் ஆகிய ஓரே மூலத்தினின்று தொடக்கத்தில் தோன்றி, மக்களிடையில் பலவேறு வகைகளாகப் பிரிந்து, அவரவர்களின் அறிவுக்கும் மனப்பக்குவத்துற்கும் ஏற்பப் பயன்பட்டுப் பணிபுரிகின்றது.

R. RAJU

தத்துவ விசாரம் புரிபவர் அனைவரும், ஒரே வகையான உள்ளமும் அறிவும் உடையவர்கள் அல்லர். அவரவர்களின் இயல்புகளுக்கும் மனநிலைகளுக்கும் ஏற்ப, அத்வைத ஆசிரியர்கள், தம்முடைய கொள்கைகளை விளக்குவதற்கு வெவ்வேறு வகையான முறைகளைக் கைக்கொள்கின்றனர். பௌத்தமதம் இந்தியாவில் பரவலாகச் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், அத்வைதக் கொள்கையினைக் கற்பிப்பதற்குக் கௌடபாதர் பௌத்த மதத்தின் சொற்கள்-சொற்றொடர்கள் ஆகிய குறியீடுகளைக் கடன்பெற்றுப் பயன்படுத்தினார். சங்கரர் தம்முடைய பாடல்களில் ஒன்றில், காசுமீரச் சைவத்தின் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றார். பரமார்த்தசாரம் என்னும் அத்வைத நூல், சாங்கியக் கொள்கைபற்றி முதன்முதல் அறியப் பெற்றதொரு நூலின் மூலத்தைத் தழுவி, அமைக்கப்பெற்றுள்ளது. ஆதலின் மேலைநாடுகளில் நுழைந்து இடம் பெற்று வரும் அத்வைத வேதாந்தமானது, மேலைநாட்டு உள்ளத்திற்கு ஏற்ற முறையிலேயே விளக்கப்பெறுதல் வேண்டும். அது குறித்து வியப்படைதற்கு ஏதுமில்லை. அத்வைதத்தின் தனிச் சிறப்பியல்புக்கும், சம்பிரதாய நெறி முறைக்கும், அது முற்றிலும் மிக மிகப்பொருந்துவதேயாகும்.

இந்தத் தத்துவத்தை விரும்புபவர்கள் அனைவரும், அவர்கள் எங்கிருந்தாலும், மேலைநாடுகளில் அதன் வளர்ச்சிப் போக்கினைக் கூர்ந்து நோக்கிக் கவனித்து வருவதற்கு ஆவலுடன் இருப்பர். மேலைநாட்டு வாழ்க்கையில் வேதாந்தத்தைப் புகுமுகம் செய்து பரப்புவதின் மூலம், இந்தியநாடு மட்டுமின்றி, இவ்வுலகம் முழுவதுமே நலம்பெறும். மதவெறி உணர்வுகளுக்கும், மதமாற்றமுனைப்பு முயற்சிகளுக்கும், அத்வைதத்தின் இந்தப் புகுமுகப் பரப்பு முறை, அறவே பெரிதும் மாறுபட்டதாகும்.

தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்.

# முருகன் அழகு

'வாகீச கலாநிதி'

திரு. கி. வா. ஜகந்நாதன்

முருகப் பெருமானுடைய திருவழகைப் பற்றி அன்பர்கள் பலபடியாகப் பாராட்டியிருக்கிறார்கள். அவன் என்றும் மாறாத அழகுடையவன் ; என்றும் மாறாத இளமை உடையவன். இளமையும், அழகும் ஒன்றி நின்றால் அங்கே கவர்ச்சி தானே வந்துவிடுகிறது. முருகன் என்ற சொல்லுக்கே பேரழகு உடையவன் என்று பொருள். முருகு என்பது தெய்வத் தன்மை, பேரழகு, இளமை, மணம் ஆகியவற்றை எல்லாம் குறிக்கும். இந் நான்கு திறத்திலும் சிறந்து நிற்பதனாலேயே முருகன் என்ற திருநாமம் கந்தபிரானுக்கு வந்தது.

''அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக''

என்று அத்திருநாமத்தின் அருமைப்பாட்டை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் எடுத்தோதுகிறார்.

கந்தபுராணத்தில் முருகப் பெருமானுடைய பேரழகை அவனுடைய பெரும் பகைவனான சூரபன்மனே போற்றுகின்ற வரலாறு வருகிறது. முருகன் சூரபன்மனோடு போராடினான். அப்படிச் சொல்வதைவிட, பொல்லாத பிள்ளையாகிய சூரபன்மனை வசமாக்கித் தனக்கு அடியானாக்க வேண்டுமென்று போர்க்களத்தில் வந்து நின்றான் என்று சொல்வது பொருத்தம். சூரனும் முருகனும் செய்த போர் மிகப்.பெரிய போர். அந்தப் போரில் சூரபன்மன் முருகனைத் தன்னை அழிக்க வந்த பகைவனாக எண்ணினான். முருகனோ சூரபன்மனைத் தனக்கு அடியானாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று எண்ணினான். சூரபன்மனை அழித்துவிட வேண்டும் என்ற கருத்து முருகப்பெருமானுக்கு இருக்குமானால் ஒரு போர்க்களத்தை உண்டாக்கி, பல பெரும் படைகளை அணிவகுத்து வர வேண்டும் என்பதில்லை. தன்னுடைய மனத்தில் ஒரு கணம் நினைத்தானானால் சூரபன்மன் மாத்திரம் அல்ல, அவனது அண்டகோடி அத்தனையும் படுசூரணமாகி விடும். ஆனால் முருகப்பெருமானுக்கோ சூரனை அழிக்க வேண்டுமென்பது கருத்தன்று. கையில் கத்தியை வைத்துக் கொண்டு கண்டகண்ட இடங்களிலெல்லாம் குத்திக் காயப்படுத்தும் தன் குழந்தையைத் தாய் கண்டு குத்தமாட்டாள். குழந்தையின் கையில் உள்ள கத்தியை ஏதாவது தந்திரம் செய்து பிடுங்க நினைப்பாள். அதுபோல் சூரபன்மனுடைய உள்ளத்திலுள்ள அகங்காரத்தையும், அறியாமையையும் நீக்குவதற்குஎன்ன வழி என்றுதான் இறைவன் எண்ணிப் பார்த்தான். சூரனுடைய கண் நிரம்பும்படி பெரிய திருவுருவம் ஒன்றை எடுத்துக் கொண்டான். எப்படியாவது அவனுடைய உள்ளத்தை உருக்க வேண்டும், அறியாமையை ஒழிக்க வேண்டும் என்ற காரணத்தினால் அந்த அழகுப் பேருருவத்தை எடுத்துக் கொண்டான்.

சூரபன்மன் நிமிர்ந்து பார்த்தான். ஆயிரம் ஆயிரம் கதிர்களை வீசிப் பரப்புகின்ற தேசுமிக்க திருவுருவம் தன் முன்னே நிற்பதைப் பார்த்தான். இதுகாறும் அத்தகைய திருவுருவத்தை அவன் கண்டதில்லை. ஒருவனுக்கு அடிபணிந்துவளையவும், வியந்து அண்ணாந்து பார்க்கவும் அவனுக்குத் தெரியாது. நின்றால் என்றபடியே பார்க்கும் தகைமையன். இப்போது மிக உயரமாக இருக்கிற முருகப் பெருமானின் திருவுருவத்தை அண்ணாந்து பார்த்தான். அந்தப் பேருருவத்தின் அடி எங்கே என்று குனிந்து பார்த்தான். பார்க்கும்போது இதுகாறும் இத்தகைய பேருருவத்தைக் கண்டிலோமே என்ற வியப்பு உண்டாகியது. 'யாரோ சிறிய குழந்தை ஒரு மயில் குஞ்சின்மீது ஏறி வருகிறதென்று அல்லவா நினைத்தேன் ? இவ்வளவு பெரிய அழகுத் திருவுருவத்தை உடையவன் முருகன் என்பதை இந்நாள்வரை நினைத்திலேனே !' என்று எண்ணி ஏங்குகிறான்.

''கோலமா மஞ்ஞை மீதிற்
குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாள்;
பரிசிவை யுணர்ந்தி லேன்யான்;
மாலயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ?''

என்று வியப்பு அடைகிறான். இது முதல் தோற்றத்தில் உண்டான வியப்பு; தான் சிறுவன் என்று கருதிய திருவுருவம் எல்லாப் பொருளுக்கும் மூலகாரணமாக இருக்கிற மூர்த்தியாகத் தோன்றினவுடன் தோன்றிய வியப்பு.

அதற்கப்புறம் அவன் தன்னுடைய கண்ணால் அப்பெருமானது ரூப லாவண்யத்தை நுகரப் போகிறான். மெல்ல ஒவ்வோர் உறுப்பாக அவன் கண் உலவுகிறது. எல்லை கட்டிக் காணாவொண்ணாத பரப்பும், எல்லை கட்டிச் சொல்ல முடியாத அழகும் உடைய அந்தத் திருவுருவத்தின் திருவடி முதல் திருமுடிவரையில் தன் கண்ணை ஓட்டுகிறான்; பக்கத்தில் ஓட்டுகிறான். திருக்கரங்களின் முடிவு காணவில்லை. திருமேனியின் எல்லை காணவில்லை. அழகை அனுபவித்து முழுமையும் காண முடியவில்லை. இந்த நிலையில் எம்பெருமானுடைய திருவழகில் ஈடுபடுகிறான். 'உலகம் பைத்தியக்காரத்தனமாகக் காமனைப் .பேரழகன் என்று சொல்கிறது. அழகுக்குத் தலை எல்லை மன்மதன் என்று அறியாமையினால் சொல்கிறார்களே! அந்த மன்மதன் எம்பெருமானுக்கு முன்னாலே நிற்க முடியுமா? எம்பெருமானுடைய திருவுருவம் முழுமையிலும் உள்ள அழகு கிடக்கட்டும்; அவன் திருவடியின்கண்ணே உள்ள அழகின் ஒரு பகுதிக்காவது ஆயிரம் கோடி மன்மதர்களுடைய அழகு எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து உருவம் எடுத்தாலும் ஒப்பாகுமா?'' என்று ஈடுபட்டு அந்த அழகை வியக்கிறான்.

''ஆயிர கோடி காமர்
அழகெலாந் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணந் தன்னில்
தூயஇவ் வெழிலுக் காற்றா
தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வகுக்க வல்லார்?''

இந்த அருமையான பாடலை இரண்டு மூன்று இடங்களில் ஆழ்ந்து பார்க்க வேண்டும். இறைவனுடைய பாதாரவிந்தங்களில் அவன் உள்ளத்தைச் செலுத்துகிறான். இதற்கு முன்னால் அசுரத் தன்மையோடு நின்றவன் அவன். இப்போதோ முருகப் பெருமானுடைய திருவுருவ அழகு அவனைக் கவர்ந்திருக்கிறது. அதனால் அவனுடைய உள்ளம் உருகுகிறது. 'நம்முடைய திருவுருவத்தைக் கண்டாவது இவன் உருக மாட்டானா? உருகும் இயல்பு இருந்தால் இந்தப் போரை விரைவில் முடித்து அவனை ஆட்கொள்ளலாம் என்று கருதித்தான் முருகன் தன் திருவுருவத்தைக் காட்டினான். அந்த உருவத்தின் பேரழகு சூரபன்மனை மயக்குகிறது. அப்போது அவன் உள்ளம் உருகுகிறது. அடியார்கள் முருகப் பெருமானுடைய திருவுருவப் பேரழகைக் கண்டு கண்டு, பின்பு அவன் திருவடியைப் பார்த்து, அதிலே தங்கள் உள்ளம் வண்டாக மொய்க்கக் கிடப்பார்கள். அதே நிலை சூரபன்மனுக்கு வந்து விடுகிறது. முருகப் பெருமானது ரூப லாவண்யத்தை நன்றாகப் பார்த்து, அது முற்ற முடிவு பெறாமையினால் மெல்ல மெல்ல அவன் சரணத்திலே தன் கருத்தைப் பதிக்கிறான். அவன் கண்களிலே இதுகாறும் நின்ற மாசு அகலுகிறது. 'அடடா! இந்தச் சரணம் விமலமாகிய சரணம் அல்லவா? என்பது புலனாகிறது. மலச் சார்பற்ற, மலம் உள்ள இடத்தில் சார்ந்தால் அந்த மலத்தைப் போக்கக்கூடிய, சரணம் அது. அந்தச் சரணத்தின் அழகு தூய அழகு.

இத்தகைய தூய பேரழகை உடையவன் முருகன். அது எதனால் தெரிகிறது? முருகனுடைய பேரழகில் தன் உள்ளத்தைப்புதைத்து நிற்கிறான் சூரபன்மன். ஒவ்வோர் உறுப்பாக அவன் கண் பார்த்து வரும்போதே அந்த அழகு அவன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகிறது. மேலேயுள்ள கந்தையை எல்லாம் விசிறிஎறிந்து தலையில் உள்ள பாரத்தை எல்லாம் தூக்கி எறிந்து, மனத்தில் உள்ள அழுக்கு நீங்க, உடம்பு லேசாதாகத் தோற்ற நிற்கின்ற ஒருவகை இன்பம் அவனுக்குத் தோன்றுகிறது. ஆகவே.

''விமலமாம் சரணம் தன்னில்
தூய இவ் வெழிலுக்கு''

என்று சொல்லும்போது அவன் ஒருவகையான இன்பக் கிளுகிளுப்பில் நிற்கிறான்.

''தூய இவ்வெழில்''

என்று சொல்வதில் ஒரு நயம் இருக்கிறது. முருகப்பெருமானை அவன் நெருங்கிவிட்டான். கடவுளை 'அவன் அவன்' என்று வேதம் சொல்கிறது. அவனை நெருங்கிய அன்பர்கள் 'இவன்' என்று சொல்வார்கள். சூரபன்மன் இதற்கு முன்னால் முருகப் பெருமானின் முன் நின்றாலும் இதுவரைக்கும் நெருங்கவில்லை. ஆயிரம் காததூரம் நின்றவனைப்போல நின்றான். இப்போது எம்பெருமானின் அழகில் ஈடுபட்டு அடியார்களைப் போல, உள்ளுணர்ச்சிகொண்டு விட்டதால் நெருங்கிவிட்டான். முருகப்பெருமானுடைய கை எட்டும் தூரத்தில் நிற்கிறான்: கருத்துக்கு எட்டும் அண்மையில் இருக்கிறான். ஆகவே 'இந்தத் தூய எழில்' என்று அண்மைச் சுட்டைப் போடுகிறான்.

அந்தத் திருவுருவத்திலே உள்ளத்தை ஈடுபடுத்தி நின்றவனுக்கு மெல்ல மெல்ல அவன் தீமைகள் எல்லாம் ஒழிகின்றமை தெரிகிறது. உலகம் எல்லாம் தன்னுடையன என்று எண்ணினவன் அவன். நான் என்ற அகங்காரம், எனது என்ற விரிவான மமகாரம், அவனிடத்தில் தலைதூக்கி நின்றன. அந்த எனது என்பதற்குள் ஆயிரத்தெட்டுக் கோடி அண்டங்களை அடக்கி அமைத்தும் போதாது, தேவேந்திர லோகத்தையும் அகப்படுத்திக் கொள்ள முயன்றவன். இப்போதோ எங்கே பார்த்தாலும் தான் என்ற உணர்வு மறைந்து, எனது என்ற மமகாரம் போய் எல்லாம் இறைவன் மயமாக அவனுக்குத் தோன்றுகின்றன. அவன் உள்ளத்தில் புதிய அறிவு புகுகின்றது. சூரியோதயம் ஆனவுடன் எப்படி இருள் அகன்றுவிடுகிறதோ அப்படி எம்பெருமானின் பேரழகுத் திருவுருவம் அவனுக்குத் தோற்றியவுடன் அவன் உள்ளத்தில் உள்ள அறியாமை இருள் அகன்று விடுகிறது. அவ்வழகு அவன் உள்ளத்தில் புதிய ஞானத்தை உண்டாக்குகிறது. அந்த ஞானத்தோடு நான்கு திக்கிலும் திரும்பிப் பார்க்கிறான். இதுவரைக்கும் அவனுக்குத் தோன்

றிய காட்சிகளாக இல்லாமல் புதியனவாகத் தோன்றின. நான் எனது என்ற இரண்டு பற்றுக்களும் தொலைய, முருகன் நினைவு ஒன்றே தலைதூக்கி நிற்கிறது. புதியதாகப் போதம் புகுந்தது. பிரபஞ்சம் எல்லாம் அவனுக்கு இப்போது புதியதாகத் தோன்றுகின்றதைக் காண்கின்றான். அவனுக்கு ஒரே வியப்பு உண்டாகிறது.

''போயின அகந்தை; போதம்
புகுந்தன; வலத்த தான
தூயதோர் தோளுங் கண்ணுந்
துடித்தன; முன்ன மெங்கும்
மேயின பொருள்கள் முற்றும்
வெளிப்படு கின்ற; விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன்;
நற்றவப் பயனீ தன்றோ?''

என்று அந்தப் பேரானந்தக் கொந்தளிப்பில் பேசுகின்றான். ''பலகாலம் நல்ல தவம்செய்து அதனால் பெறுவதற்குரிய பேறு அல்லவா இது! எம்பெருமான் தன்னுடைய திருக்கோலப் பேரெழிலைக் காட்டிக் கொண்டு முன் வந்து நிற்கும் பாக்கியம் அவனுடைய பகைவனாகிய மாபாவியாகிய எனக்கும் கிடைத்ததே!'' என்று இறைவனுடைய கருணையை எண்ணி ஆச்சரியமுறுகிறான். போதம் புகுந்தவுடன் இதுவரைக்கும் தனக்குத் தோன்றிய புவனம் இப்போது வேறுபட்டுத் தோன்றுகிறதைக் காண்கிறான். இதுவரைக்கும் அவனுக்குத் தோன்றியது மாயத் தோற்றம்; இப்போது தான் உண்மையான தோற்றம் புலனாகிறது. பிரபஞ்சம் இதுவரைக்கும் தனக்குச் சொந்தம் என்றும், தானே எல்லாவற்றுக்கும் தலைவன் என்றும் எண்ணிக் கொண்டிருந்தான் அவன். இப்போதோ நாயகனைக் கண்டவுடன், தன் நிலை புலனாகிறது. ''அவன் தான் இறைவன், நான் அடிமை'' என்ற உணர்ச்சி தோன்றுகிறது. இதன் மூலகாரணம் அவன் கண்ட எம்பெருமானுடைய தூய நல்ல பேரழகுக் கோலம்தான்.

பின்பும் அவன் பார்க்கிறான். முருகப் பெருமானின் திருமேனிக்குப் பக்கத்தில்சென்று பார்க்கிறான். பின்னே நின்று பார்க்கிறான். மேலே அண்ணாந்தும், கீழே குனிந்தும் பார்க்கிறான்; இன்னும் அந்த அழகுக்கு முடிவு கட்ட முடியவில்லை. எத்தனை காலம் பார்த்தாலும் அந்த அழகை முற்றும் பார்த்துத் திருப்தி அடைய முடியாது என்ற உண்மை புலனாகிறது. காலத்தினாலும், இடத்தினாலும் எல்லை கட்டி அறிய முடியாத அருள் வடிவம்அல்லவா அது! அதனைக் கண்டு கண்டு அவன்கண்கள் இன்புறுகின்றன. கருத்து இன்பம் பொங்க விடுகிறது. ஆனால் எல்லை இன்னது என்று தெரியாமல் வியப்பில் மீதூர்ந்து நிற்கிறான்.

''அண்ணலார் குமரன் மேனி
அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா வூழி காலம்
எத்திறம் நோக்கி னாலும்
கண்ணினால் அடங்கா துன்னிற்
கருத்தினால் அடங்கா தென்பால்
நண்ணினான் அமருக் கென்கை
அருளென நாட்ட லாமே''

இறைவனுடைய பேரழகைக் கண்ட மாத்திரத்தில் அவனுக்கு உருக்கமும் உணர்வும் அடியார்களுக்கு உண்டாவதுபோல உண்டாயின என்றால் சற்று முரணாகத் தோற்றலாம். பலகாலம் இந்திரிய நிக்கிரகம் செய்து, விரதம் காத்து, தவம் செய்கின்றவர்களுக்குக் கிடைக்க வேண்டிய இந்தக் காட்சி இந்தப் பாவிக்குக் கிடைக்கலாமா? என்ற கேள்வி எழுவதற்கு நியாயம் உண்டு. ஆனால் அந்தத் தவம் நிறைந்தவர்கள் யாவரும் தம்முடைய முயற்சியினால் இறைவனைக் கண்டுகொள்ள வேண்டுமென்று இருப்பார்கள். இங்கேயோ சூரபன்மன் முயலவில்லை. எம்பெருமானே அவனை ஆட்கொள்ள வேண்டுமென்று முயன்றான். முருகனைச் சூரபன்மன் சென்று காணவில்லை சூரபன்மனுக்கு முருகன் தன் திருவுருவத்தைக் காட்டினான்.

ஓர் அறை பலகாலமாகப் பூட்டி வைக்கப் பட்டிருந்தது. அந்த அறைக்குள் விளக்கை எடுத்துக் கொண்டு போனால், 'பலநாள் இருள் மண்டிக் கிடந்த அறை ஆயிற்றே, அதனால் பலநாட்கள் விளக்கின் ஒளி அங்கே பட்டால் தான் இருள்நீங்கும்' என்று சொல்லலாமா? விளக்கைக் கொண்டு போனவுடன் எத்தனை காலமாக இருள் மண்டிக் கிடந்தாலும் ஒளி பட்டபோதே இருள் ஓடிவிடுகிறது. அதுபோல எத்தனையோ காலமாக அறியாமை இருள் மண்டிக்கிடந்த உள்ளம் உடையவனாகச் சூரன் இருந்தாலும் அருள் ஒளிப் பிழம்பாகிய எம்பெருமானின் தரிசனம் கிடைத்த மாத்திரத்தில் அவன் அறியாமை நீங்கியது. போதம் புகுந்த பிறகு அவனுக்கு உண்மை தெளிவாகிறது.

''என்னுடைய முயற்சியினால் முருகப் பெருமானுடைய காட்சியை நான் கண்டேன் இல்லை. அவன் தன் திருவருளால் ஆட்கொள்ள எண்ணினான். வேறு எந்த வகையினாலும் என்பால் அருள்பாலிக்க ஒண்ணாது என்றல்லவா அமருக்கு நண்ணினான். இதுதான் அவனுடைய பேரருள் என்று நாட்டலாம்'' என்கிறான். ''நான் அவனைக் காணவேண்டுமென்று நினைக்கவில்லை. தன்னை எனக்குக் காட்ட வேண்டுமென்று அவன் உறுதியாக நினைத்தான். அவன் உள்ள இடத்திற்கு நான் போகவில்லை. நான் உள்ள இடத்திற்கு அவன் வந்தான். போர்க்களத்தைக் கோயிலாக்கி, போரைத் தரிசனம் ஆக்கி, பகைவன் இவன் என்ற உணர்வுடன் வாராமல் எனக்கு அருள் செய்ய வேண்டுமென்று வந்திருக்கிறான். போரை வியாஜமாகக் கொண்டு எனக்குக் காட்சிதர வந்தானே!''

''நண்ணினான் அமருக் கென்கை
அருளென நாட்ட லாமே''

என்று பாடுகிறான்.

பின்பு அந்தப் பெருமானைப் போய் அடைந்து காலில் விழவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. இறைவன் சிறிது திரையைப்

போட்டவுடன், 'மானம் தடுக்கிறது' என்று சொல்லி மீண்டும் போர் செய்கிறான். குறுகிய காலத்திற்குள் அவனை அடர்த்து வேலால் சூரத்துவத்தைப் போக்கி மயிலாகவும், சேவலாகவும் ஆக்கிக் கொள்கிறான் முருகன். அகங்கார மமகாரப் பிழம்பாகிய சூரபன்மாவைக் கூட வசப்படுத்தி, உள்ளம் உருகும்படியாகச் செய்தது முருகப் பெருமானது பேரழகு. பகைவனாகிய சூரபன்மனே இந்த அழகைக் கண்டு வேறு யாரும் சொல்ல முடியாத அளவுக்குப் பாராட்டியுள்ளான். ஆகவே முருகப் பெருமான் உண்மையான பேரழகு உடையவன். அந்த அழகைப் பகைவனாகிய சூரனே பாராட்டுகிறான். ஆகையால் அந்தப் பேரழகு கால எல்லை கடந்து, இட எல்லை கடந்து ஒளிர்வதோடு, அன்பர்கள், நொதுமலர்களுடைய உள்ளங்களை உருக்கிப் பகைவரையும் உருக்குவது என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். 'உண்மையான பேரழகன் முருகன்; உறுதியான பேரழகன் முருகன்; பயன்தரும் பேரழகன் முருகன்' என்பவற்றை எல்லாம் இந்த வரலாற்றினால் தெரிந்து கொள்ளலாம்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
Administration Dept

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ், கோயில்களில் நல்ல நிர்வாகம் நடைபெறுதல் குறித்து, பின்வருமாறு நிர்வாக அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

1. வேலூர் வட்டம், மேல் மானாவூர், அருள்மிகு காசி விசுவநாதர் கோயில், வேலூர் நகரம் வேலப்பாடி அருள்மிகு வரதராஜப் பெருமாள் கோயில், வேலூர் வட்டம், மூஞ்சூர் பட்டு அருள்மிகு காசி விசுவநாதசாமி கோயில், வேலூர் வட்டம். வேப்பங்குப்பம் அருள்மிகு வரசித்தி விநாயகர் கோயில், வேலூர் வட்டம் ஒடுக்கத்தூர் அருள்மிகு சப்தரிஷீசுவரர் கோயில் என்னும் ஐந்து கோயில்களும், வடஆற்காடு மாவட்டம், வட்டம் வேலூர் மற்றும் நகரம் அருள்மிகு சின்னி இராமசாமிச் செட்டி அறக்கட்டளையுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—30-6-81.

2. தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், பரங்கிப்பேட்டை, அகரம், அருள்மிகு கிருஷ்ணசாமி கோயில், பரங்கிப்பேட்டை அருள்மிகு முத்துகுமாரசாமி கோயிலுடன் இணைக்கப் பெற்று ஒரு நிருவாக அதிகாரி நியமிக்கப் பெற்றுள்ளார். 16—7—81.

3. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் நகரம் அருள்மிகு உச்சயினி மாகாளியம்மன் கோயில், அம்பாசமுத்திரம் அருள்மிகு கிருஷ்ணசாமி கோயிலுடன் இணைக்கப் பெற்று, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப் பெற்றுள்ளார் —16—7—1981

4. தென் ஆற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், நகரம் கடைவீதியில் உள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோயில், அந்நகரத்தைச் சேர்ந்த அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயிலுடன் இணைக்கப் பெற்று, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப் பெற்றுள்ளார்.—16—7—81.

5. சேலம் மாவட்டம், வட்டம், சின்ன சீரகம் பாடி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில், சேலம் வட்டம் உத்தமசோழ புரம் கோயிலுடன் இணைக்கப்பட்டு, ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப் பெற்றுள்ளார் 2—8—81.

6. வடஆற்காடு மாவட்டம், வேலூர் நகரம், சைதாப்பேட்டை அருள்மிகு சித்தி புத்தி சமேத சுந்தர விநாயகர் கோயில், வேலூர் நகரம், கலசப்பாளையம், அருள்மிகு கலச கற்பக விநாயகர் கோயில், வேலூர் நகரம், தோட்டப் பாளையம் அருள்மிகு தர்மராஜா கோயில் ஆகியவை, தோட்டப் பாளையம் அருள்மிகு தாரகேசுவரசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். 5-8-81.

7. வடஆர்க்காடு மாவட்டம், வட்டம் திருப்பத்தூர் நகரம் அருள்மிகு சுந்தர வீர ஆஞ்சநேயர் கோயில், திருப்பத்தூர் அருள்மிகு தர்மராஜா கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—5-8-81.

8. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அருள்மிகு முத்துமாலையம்மன் கோயில், அம்பாசமுத்திரம்வட்டம் அரியநாயகிபுரம் அருள்மிகு கைலாசநாதர் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.—5-8-81.

9. பெரியார் மாவட்டம், பெருந்துறைவட்டம் அத்தியூர் அஞ்சல் வெள்ளியம்பாதி அருள்மிகு பத்ரகாளியம்மன் பெருந்துறை அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—5-8-81.

10. தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், கூவனூர் அருள்மிகு அகத்தீசுவரர் கோயில், தென் ஆற்காடு மாவட்டம் கிழையூர் அருள்மிகு வீரட்டேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். 5—8—81.

11. பெரியார் மாவட்டம், பெருந்துறைவட்டம் குண்ணத்தூர் அருள்மிகு அங்காளம்மன் கோயில், பெருந்துறை அருள்மிகுசெல்லாண்டியம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—7-8-81.

# சேவகக் கண்ணன்

திரு. நா. வேணுகோபால்நாயகர், B.A.,B.L., வழக்கறிஞர்,

செயலாளர்: ஸ்ரீவைஷ்ணவ மகாசங்கம், சென்னை.

'இராமாயணத்தின் சிறப்பு, சிறை யிருந்தவள் ஏற்றம்' என்பது ஆசாரியர்களின் திருவுள்ளம். உலக அன்னையான இலட்சுமிப் பிராட்டியார், சீதையாகத் திருவவதரித்து இராவணனுடைய அசோகவனச் சிறைவாசம் இருந்து,தேவர்,முனிவர்களுடைய துயரத்தைத் தீர்த்ததுதான் இராமாயணத்தில் உள்ளசிறந்த அம்சம் என்பது பொருள்; அதுபோலவே,தூது சென்ற எளிமை மகாபாரதத்தின் பெருமை யைக் காட்டுகிறது. அனைத்துலக நாயகனான திருமால் கண்ணனாகத் திருவவதரித்து, பாண் டவர்களுக்காகத் தன் கழுத்திலே ஓலை கட்டிக் கொண்டு, தூதுவனாக நடந்தானாம்! இலட்சம் சுலோகங்களையுடைய மகாபாரதக் காவி யத்தில் பக்தர்களுக்குச் சுவையான பாகம் இதுவே!

சமண முனிவரான இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரக் காவியத்தில், இறை வனது இந்தப் பரம எளிமைக்கு-சேவகத்திற்கு உருகிக் குரவையர் வாயிலாக ''மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம் கடந்தானை, நூற்றுவர்பால் நால்திசையும் போற்ற,படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது நடந் தானை; ஏத்தாத நா என்ன நாவே? நாராயண என்னாத நா என்னநாவே?'' என்று எதிர் மறையில் வினவுகிறார். நரனான அர்ச்சுன னுக்காகத் தேர்த்தட்டிலே நின்று, சாரத்தியம் செய்ததை ஒரு பெருமையாகக் கொண்டு, பார்த்த சாரதியாக நித்திய சேவை சாதிக் கின்றான் கண்ணன், திருவல்லிக்கேணியிலே!

ஆண்டவன் பக்தர்களுக்காகத் தனது மிக உயர்வையும் மதியாமல் அடிமைப் படுவதைப் பல கதைகள் நமக்கு விளக்குகின்றன. இறை வனின் இப் பெருங்குணத்தில் ஈடுபடுகிறார் பாரதியாரும்! தமக்கே உரிய புதிய பாணியிலே இதை வெளியிடுகின்றார் ''கண்ணன் என் சேவகன்!'' என்ற மகுடமிட்டுக் கண்ணனை அனுபவிக்குமுன்பு, சேவகனைப் பற்றி நாம் சரியாகத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார் பாரதியார். சேவகன் என்றால் ஏதோ பழங்காலத்துச் சேவகன்-சொன்னபடி எல்லாம் நடப்பவன்-அடக்கமே உருவம் என் றெல்லாம் நாம் நினைத்து விடுவோம்! அதற் காகப் பாரதியார் தற்காலச் சேவகனைச் சரியாக அறிமுகப்படுத்துகிறார்! ''கூலி மிகக் கேட்பார்''. அதன்படியே நாமும் அள்ளித் தருகிறோம்! ஆனால் அவர்கள், ''கொடுத்த தெல்லாம் தாம் மறப்பார்!'' வீட்டில் தலை போகிற காரியம்! என்ன செய்வார்கள்! ''வேலை மிக வைத்திருந்தால்,வீட்டிலே தங்கிடு வார்''. வராததற்குக் காரணம் கேட்டால், விந்தையாக இருக்கும் அவர்கள் பதில்!

''பானையிலே தேளிருந்து
பல்லால் கடித்ததென்பார்!
வீட்டிலே பெண்டாட்டி மேல்
பூதம் வந்ததென்பார்!
பாட்டியார் செத்து விட்ட
பன்னிரண்டாம் நாளென்பார்''.

பேச்சுத்தான் இப்படி! நடத்தையோ! வயிற் றெரிச்சல்தான். ''ஓயாமல் பொய்யுரைப்பார்! ஒன்றுரைக்க வேறு செய்வார்!'' நமக்கு ஆகா தவர்களிடம் எப்படி எல்லாம் நடந்து கொள்ளு வார்கள்? ''தாயாதியோடு, தனிஇடத்தே பேசிடுவார்! ரகசியமான சேதியா? சரி! சரி! ''உள்வீட்டுச் சேதி எல்லாம், ஊர் அம்பலத் துரைப்பார்!''. மேலும்,''என் வீட்டில் இல்லை என்றால்'', போதுமே! கழுத்தில் டமாரத் தையே மாட்டிக் கொண்டு, ''எங்கும் முரசறை வார்!''. பாரதியார், ''சேவகரால் பட்டசிரமம் மிக உண்டு!'' என்றாலும்,அவருக்குச் ''சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை!''

எனவே, ஒரு தகுந்த வேலைக்காரனைத் தேடிக் கொண்டிருந்தார். இப்படி இடர்மிகுந்து வாடுகையில் பாரதியாருடைய அதிர்ஷ்டத்தைப் பாருங்கள். அவனாகவே எங்கிருந்தோவந்தான், வேலையும் கேட்டான். இந்த வேலைக்கார னுக்கு என்னவெல்லாம் தெரியும் என்றா கேட் கின்றீர்கள். அவனே சொல்வதைக் கேட்க லாமே! ''மாடு கன்று மேய்த்திடுவேன்! மக்களை நான் காத்திடுவேன்''. அதாவது பகுத்தறிவுடையது, இல்லாதது என்ற வித்தி

யாசமில்லை. அஃறிணை உயர்திணை எல்லா வற்றையும் காக்க முடியுமாம்! ''சின்னஞ்சிறு வேலைகளா? ஊம்! வீடு பெருக்கி, விளக்கேற்றி வைத்திடுவான். அவன் கால்பட்டால் போதும்; வீடு தூய்மையாகிவிடும். ஒளிவீசும். அது மட்டுமா! சொன்னபடி கேட்பான். என்ன வேலையானாலும் கொடுங்கள்! துணி மணிகள் தோய்த்திடுவான். ஊளையிட்டு உயிரை வாங் கும் பாப்பா இருக்கிறதா? சின்னக் குழந்தைக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே, ஆட்டங்கள் காட்டி, அழாதபடி பார்த்திடுவான். எவருடைய அழு கையும், துக்கமும் போய்விடுமாம் அவனைக் கண்டால்.

வீட்டைத் தானா அவன் காப்பான்! காட்டு வழியானாலும், கள்ளர் பயமானாலும் வேலை நேரமும், கட்டுப்பாடும் கிடையாதாம்! இரவில், பகலில், எந்நேரமானாலும் சிர மத்தைப் பார்ப்பதில்லை! தேவரீர் தம்முடனே சுற்றுவேன்! தங்களுக்கோர் துன்பமுறாமற் காப்பேன் என்பான்! மிக்க உரை பல சொல்லி விருதுபல சாற்றுகின்ற இந்த ஆள் ஆரம்பிக் கிறதே இப்படி இருக்கிறது! கூலிக்காகத்தான் அடி போடுகிறானோ! அந்தச் சந்தேகத்திற்கும் பதில் கிடைக்கிறது!

'ஐயனே! தாலி கட்டும் பெண்டாட்டி சந்ததிகள் ஏதுமில்லை. நானோர் தனியாள்.' கடைசியில் பார்த்தால் அவன்தான் மிச்சம். ஒண்டிக் கட்டைதான். எனவே செலவுகள் கிடையாது. இவன் வயதையும் பார்க்கலாமே. நரை திரை தோன்றாவிடினும், ஆன வயதிற்கு அளவில்லை. சரி வேலை செய்கிறவனுக்கு, ஏதாவது கொடுக்கத்தானே வேணும். இவனுக்கு அப்படி ஒன்றும் தேவையில்லை. ஆனால், தேவரீர் ஆதரித்தாற்போதும் அடியேனை. கூலி என்று கொடுக்கத் தேவையில்லையாம். பட்சமாக வைத்துக் கொண்டால் போதுமாம். ஏன் இப்படிச் சொல்லுகிறான். நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை என்றான். அவனிடம் அன்பு செலுத்திவிட்டால் போதும்! ஐந்து, ஐம்பது என்று கொடுக்க வேண்டியதில்லையாம்

தற்காலச் சேவகர்களின் இலட்சணத்தை மேலே பார்த்தோம். இந்தக் காலத்தில் இப் படியும் ஒரு வேலைக்காரனா! இவன் பண்டைக் காலத்துப் பயித்தியத்தில் ஒன்றெனவே கண்ட பாரதியாரும், களிப்புடனே அவனை ஆளாகக் கொண்டு விட்டார். அதனால் என்ன பலன் ஏற்பட்டது. அன்றுமுதற்கொண்டு நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப் பற்று மிகுந்து வரப் பார்க்கின்றேன். கண்ணனுடைய பற்று மிகுந்ததால் என்னவெல்லாம் நன்மை கிடைத்தது. பாரதியாரின் கவிதா சாமர்த்தியம் போதவில்லை, ஒப்புக் கொள்ளுகிறார்! கண்ண னால் பெற்றுவரும் நன்மை எல்லாம் பேசி முடியாது. சரி எப்படித்தான் கண்ணன் வேலை செய்கிறான். கண்ணை, இமை இரண்டும் காப் பதுபோல், என்குடும்பம் வண்ணமுறக் காக் கின்றான். இமையிருந்தால் விழிக்கு அபாய மில்லை. இவனிருக்கிறதால் பாரதியார்க்கும் அபாயமில்லையாம்!

கண்ணன் வீதி பெருக்குகிறான், வீடு சுத்தமாக்குகிறான்! தவறு கண்டு பிடித் தால், தமுக்கா போடுகிறான்? தாதியர் செய் குற்றமெல்லாம், தட்டியடக்கு கிறான். குழந்தைகளிடம் எப்படி? பெரியவர் களுக்கு எல்லா வேலைகளையும் செய்யாமல் போனால், அவர்கள் பார்த்துக் கொள்ளு வார்கள். ஆனால் குழந்தைகள் விஷயம் அப்படி யல்லவே! அதனால்தான் கண்ணன்:

மக்களுக்குவாத்தி!<br>
வளர்ப்புத் தாய்!<br>
வைத்தியனாய்!<br>
ஒக்கநயம் காட்டுகிறான்!

பொருள்கள் என்றால் மிக அலட்சியம் வேலைக் காரர்களுக்கு. விலைவாசிகளின் கஷ்டம் ஒன்றும் தெரியாது அவர்களுக்கு. கண்ணனோ, ஒன்றும்குறைவின்றிப் பண்டமெல் லாம் சேர்த்து வைத்துப் பால் வாங்கி, மோர் வாங்கி, வைப்பான். இதுமட்டுமா? இந்தப் பொறுப்பை ஆற்றவேண்டியவர்கள் வீட்டுப் பெண்மணிகள்! சோம்பலும் அறியாமையும் அகன்றால்தானே, அவர்கள் இவைகளைக் கவனிப்பார்கள். அப்படியிருந்தும், பெண்டு களைத் தாய்போல், பிரியமுற ஆதரித்து வீட் டில் எல்லோருக்கும் கண்ணன் நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் விளங்கு கிறான்.

பாரதியார் ஐயப்பட ஆரம்பித்தார். இவைகள் சாதாரண வேலையாளின் குணங்க ளல்லவே! தெய்வத் தன்மைகள்தாம்! ஆனா லும் அவன் பார்க்கிற பார்வையைப்பார்த்தால் வேலைக்காரனாகவே தோன்றுகிறானே! பண் பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய் எங்கிருந்தோ வந்த இவன், சந்தேகத்துக்கு இடம் வைக்காமல், தன்னை இடைச்சாதி என்று சொல்லிக்கொண்டான். இத்தகைய கண்ணனை அடைந்த பாரதியாருக்கு ஏற்படும் பெருமையைப் பாருங்கள். ''இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் ?''

''உண்ணுஞ் சோறு, பருகும்நீர், தின்னும்<br>
வெற்றிலையு மெல்லாம்<br>
கண்ணன், எம்பெருமான் என்றே<br>
கண்கள் மல்கி''

என்று உருகினார் நம்மாழ்வார்!

''சேம நல்வீடும், பொருளும்,<br>
தருமமும், சீரிய நல்<br>
காமமும் என்றிவை நான் கென்பர்,<br>
நான்கினும் கண்ணனுக்கே<br>
ஆம் அது காமம். அறம், பொருள், வீடு<br>
இதற்கென் றுரைத்தான்;<br>
வாமனன் சீலன், இராமாநுசன்,<br>
இந்த மண்மிசையே''

என்று அனைத்து வாழ்க்கைப் பேறுகளையும் கண்ணனுக்கே அர்ப்பணிக்க வேண்டுமென இராமாநுசர் உபதேசித்தருளியதைத் திருவரங் கத்து அமுதனார் இராமாநுச நூற்றந்தாதி யில் சாதித்தருளுகின்றார்.

நாம் இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். அவன் நம் வேலைகளையெல்லாம் முடித்துவைப்பான்; உடனிருந்தும், முன்னிருந்தும் என்று மகான்கள் உபதேசித்தருளிய பெரும் உண்மையை மகாகவி பாரதியார், புதுமை மெருகு கொடுத்து இப்படியெல்லாம் நம்மை ரசிக்க வைத்துள்ளார். மேலும்:

''எண்ணம், விசாரம், எதுவும்
அவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு,
நற் கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை

முதலான ஒளிசேர் நலமனைத்தும் கண்ணனால் ஓங்கி வருமாம்! அருச்சுனா! சகல பற்றுக்களையும் விடுவாயாக! என்னையே சரணாகப் பற்றுவாயாக! நான் காப்பாற்றுகிறேன். எனக் கண்ணன் கீதையில் அருளியதைக் கடைப்பிடித்து:

கண்ணனை நான் ஆட்கொண்டேன்!
கண்டு கொண்டேன்; கண்டு கொண்டேன்
கண்ணனை (நான்) ஆட்கொள்ளக்
காரணமும் உள்ளனவே.

எனத் தன் எக்களிப்பை வெளியிடுகின்றார், வரகவி சுப்பிரமணிய பாரதியார்! நம் கவலைகளை எல்லாம் கண்ணனிடம் ஒப்படைத்தால், அவைகளை அவனே நிறைவேற்றி வைப்பான் என்ற மயர்வறும் மதிநலத்தைப் பெறுவோமாக!

## நிர்வாக அதிகாரிகள் நியமனம்

12. சென்னை 10, கீழ்ப்பாக்கம் தோட்டச் சாலை அருள்மிகு செல்லியம்மன் கோயில், சென்னை-34, நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் - பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—22-8-81.

13. கோவை மாவட்டம், பொள்ளாச்சிவட்டம் கொண்டாம்பட்டி, அருள்மிகு இராம-ஆஞ்சநேயசுவாமி கோயில், பொள்ளாச்சி வட்டம் சூலக்கல் அருள்மிகு மாரியம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—25-8-81

14. திருச்சி மாவட்டம், வட்டம், நகரம் பெரிய கடைத்தெரு அருள்மிகு போஜராஜ செல்வ விநாயகர் கோயில், திருச்சி நகரம் அருள்மிகு நாகநாதசுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—16—9—81.

15. கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் வேலாயுதம் பாளையம், அருள்மிகு பட்டத்தரசியம்மன் கோயில், பொள்ளாச்சி வட்டம் சூலக்கல் அருள்மிகு மாரியம்மன்-விநாயகர் கோயில்களுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—16—9—81.

16. தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம், வானவன்மாதேவி அருள்மிகு பேசும் பெருமாள் கோயில், காட்டுமன்னார்குடி வட்டம், ஸ்ரீமுஷ்ணம் அருள்மிகு பூவராக சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—16—9—81.

17. சென்னை 34, நுங்கம்பாக்கம் அருள்மிகு கற்கொடியம்மன் கோயில், நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.—16—9—81.

18. சென்னை தண்டையார்பேட்டை அருள்மிகு தேவி திருக் கருமாரியம்மன் கோயில், சென்னை இராயபுரம் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—16—9—81.

19. சென்னை, 17. பாண்டிபஜார் அருள்மிகு செல்வ விநாயகர் கோயில், சென்னை 34 நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீசுவரர்—பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—17—9—81.

20. தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், சித்தலிங்கமடம் அருள்மிகு வியாக்ரபுரீசுவரர் கோயில், தென்ஆற்காடு மாவட்டம், கீழையூர் அருள்மிகு வீரட்டேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். 17—9—81.

21. தஞ்சாவூர் மாவட்டம், மாயூரம் வட்டம் குத்தாலம் நகரம் அருள்மிகு ஓம் காளீஸ்வரர் கோயில், மாயூரம் வட்டம் திருவேள்விக்குடி அருள்மிகு மணவாளீசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—17—9—81.

22. சென்னை 21 சிங்காரத்தோட்டம், அருள்மிகு சின்ன சென்னியம்மன் கோயில், சென்னை 13, இராயபுரம் அருள்மிகு அங்காள பரமேசுவரிஅம்மன் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—22—9—81.

23. சென்னை 3 பெரிய மேடு, தொப்பைப் பிள்ளைத் தெரு, அருள்மிகு பிரசன்ன வேங்கடேசப் பெருமாள் கோயில், சென்னை 7, புரசவாக்கம் அருள்மிகு கங்காதரேசுவரர் கோயிலுடன் இணைக்கப்பட்டு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்—22-9-81.

# இந்து சமயத்தின் உலகளாவிய இனியநல் இயல்பு

Dy Commissi... (Retired) HR&CE Administration

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

நமது இந்தியப் பெருநாட்டில், பலதிற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடுகளும், ஆங்காங்கே அமைந்து விளங்கக் காண்கின்றோம். ஆயினும், இப் பலதிற வேறுபாடுகளுக்கும் இடையே ஒரு பெரும் பொதுத் தன்மையும், ஊடுருவி நின்று பொலிந்து திகழ்ந்து காணப்படுகின்றது. இந்திய மக்களின் புறக்கோலங்களும் பிறவும் வேறுபட்டாலும், அவர்கள் அனைவருடைய உள்ளப்போக்கும் உணர்வும், பெரும்பாலும் ஒரே தன்மை உடையனவாக விளங்குகின்றன. இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும், பற்பல துறைகளில், மிகவும் வியக்கத்தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர்வும் உடையவராகவே இருக்கின்றனர்.

கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழிபாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம் புண்ணியம் ஊழ்வினை இறப்பு பிறப்பு மறுபிறப்பு சுவர்க்கம் நரகம் என்பன பற்றிய கொள்கைகளிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வருகின்றது. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந்திருக்கக்காண்கின்றோம். சார்வாகம் சமணம் பௌத்தம் சைவம் வைணவம் சாக்தம் சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்துவிதம் விசிட்டாத்துவிதம் துவிதம் சுத்தாத்துவிதம் முதலிய எத்துணையோ பற்பல தத்துவக் கொள்கைகளும், நமது இந்தியப் பெருநாட்டில் விளங்கி வழங்கி வருகின்றன. ஆயினும் ,அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக் கொண்டுவிளங்கி வரும் சிறந்த பொதுமைப் பெருநெறியே, இந்து சமயம் ஆகும் என நாம் சுருக்கமாகக் கூறலாம்.

பழமைநலம்:

உலகில் நிலவி வரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ்வது, நமது இந்துசமயம். பிற சிலசமயங்களைப் போல நமது இந்து சமயமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று. யூத மதம் (கி.மு. 1500—1200), ஷிண்டோ மதம் (கி.மு.660), சொராஸ்ட்ர மதம் (கி.மு. 660), டாவோயிஸ்ம் (கி.மு. 604), சமணம் (கி.மு.599), பௌத்தம் (கி.மு. 560), கன்ஃபூசியம் (551), கிறிஸ்துவம் (4 கி.பி.), இசுலாமியம் (570 கி.பி.) ,சீக்கியம் (1469 கி.பி.) என்னும் மற்றைச் சமயங்கள், இன்ன காலத்தில் இன்னாரால் தோற்றுவிக்கப் பட்டன என்றெல்லாம், வரலாற்று நூல்கள் கூறக் காண்கின்றோம்.

அவ்வாறு காலம் ஏதும் கூறுதற்கு இயலாத நிலையில், வரலாற்றுக் காலத்திற்கும் மிக முற்பட்டு, மிக்க பழமை வாய்ந்ததாக நமது இந்து சமயம் விளங்கிவருகின்றது. எகிப்து, மெக்சிகோ, பாபிலோனியா, அசீரியா, பினிசீயா, சிறிய ஆசியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளில் முன்னொரு காலத்தில் விளங்கியிருந்த, எத்தனையோ பலசமயங்கள் இருந்த இடமும் தெரியாமல் மருங்கற மாய்ந்தொழிந்தன. அவ்வாறு இன்றி, நம்முடைய இந்து சமயம் தொன்று தொட்டு இன்று காறும் நின்று நிலவி வழங்கி வருகின்றது. பேரறிஞர் பாலகங்காதர திலகர், பேராசிரியர் எர்மன் ஜேக்கோபி ஆகிய பெருமக்கள், வான நூற் குறிப்புக்கள் பல கொண்டு கணித்து, வேத காலம் கி.மு. 4500க்கு முற்பட்டது என்று வரையறை செய்துள்ளனர். இதனால் இந்துசமயத்தின் பழமை எத்தகையது என்று யாவரும் இனிது உணரலாம். இத்தகைய சிறந்த தொன்மையுடைமை பற்றியே, இந்து சமயத்தினைச் ‘சநாதன தருமம்’ (PERENNIAL RELIGION) என்று நம் சான்றோர்கள் போற்றி வந்துள்ளனர்.

சொற்பொருள்:

‘‘இந்து மதம்’’ என்னும் சொல், நமது பழைய வேதம் உபநிடதம் ஆகமம் புராணம் முதலிய நூல்கள் எதிலும் காணப்படவில்லை என்றும், அஃது அண்மையிற் சில காலமாகவே வழங்கி வருகின்ற வேற்றுப் புலச்சொல் என்றும், ஒரு சிலர் கூறுவது உண்டு. அஃது ஒரு வகையில் உண்மையே யாகுமாயினும், அது பற்றி ஏதும் குறையில்லை.

''தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா; இன்று
தோன்றியன எனும் எவையும்
தீதாகா''

என நம் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவர் ஆகிய உமாபதி சிவம் கூறுவது, இங்கு நாம் எண்ணியுணர்தற்கு உரியது.

''கடிசொல் இல்லைக்
காலத்துப் படினே''

என ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலும் ,இங்கு நாம் பெரிதும் சிந்திக்கத் தகுவதாகும். இச்சொல் அண்மையது ஆயினும் அது குறிக்கும் பொருள் மிக்க தொன்மையுடையதேயாகும் என்பதில் ஐயமில்லை. (The name is recent but the religion is ancient).

பொருள் விளக்கம் :

(1) ஒரு சொல்லின் பொருளை விளக்குதலில், பொதுவாக இரு வகை முறைகள் உண்டு. அவைகளை முறையே உண்மை கூறல், பொருந்தக்கூறல் எனலாம். பாரசீகர்கள், கிரேக்கர்கள் முதலிய பிற நாட்டார், சிந்து நதியையும் அதனைச் சார்ந்த நிலப்பகுதியையும் (Indus, India, Hindu), இந்து என்று வழங்கி வந்தனர். அதுவே பின்னர்ப் பராத தேசம் முழுமைக்கும், அதன்கண் வாழும் மக்கள் தொகுதியினர்க்கும், அவர்களின் பழக்க வழக்கம் பண்பாடு சமயம் ஆகியவற்றிற்கும், நாளடைவில் வழங்குவதாயிற்று. முதலில் நிலப் பரப்பைக் குறிக்கும் பெயராகவே இருந்த இந்து என்னும் சொல், இன்று இந்தியா என வழங்கப்படும் நம் பாரதநாடு முழுவதற்கும் பொதுவாக உரிய சமயப் பண்பாட்டு நெறியினைக் குறிப்பதாக விளங்கி வருகின்றது. இச்சொல் அண்மைக் காலத்திலேயே பெருவழக்குப் பெற்றது. எனினும், இதனால் குறிக்கப்படும் சமய நெறி தொன்மை வாய்ந்ததாகும். இஃது உண்மைகூறல் என்னும் தந்திர உத்தியாகிய நூல் வழக்காறு.

(2) இனி, பொருந்தக்கூறல் என்னும் உத்தி வகையினால், இந்து என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் பல புதிய பொருள் விளக்கங்களையும், அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்ந்து கூறுவதுண்டு. அம்முறையில் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

இந்து என்னும் சொல், நம்முடைய பழைய வேதாகம உபநிடதங்கள் முதலியவற்றில் யாண்டும் வரப்பெறவில்லை. ஆயினும், இன்று நம் பாரத தேசத்திலுள்ள சைவம் வைணவம் சாக்தம் சமணம் பவுத்தம் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய பல்வேறு சமய நெறிகளையும் ஒன்றுசேர்த்துத் தொகுத்துப் பொதுவாகக் குறிப்பிடுவதற்குரிய ஒரு தொகுதிப் பெயராக (Collective Noun), இந்து மதம் என்னும் சொல் பெருவழக்காக நிலவி வருகின்றது. ஆதலின் பொருந்தக்கூறல் என்னும் உத்தி பற்றி அறிஞர்கள் இந்து மதம் என்பதற்குப் பின்வருமாறு பொருள் விளக்கங்கள் கூறுவர்.

''இம்ஸாயாம் தூ யதேய: ஸ: இந்து
இத்யபி தீயதே''

என்றபடி, (இம்—இம்சையில், து—துக்கிக்கிறவன்; இந்து) ''ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக மிகவும் துக்கித்து, அவ்வுயிர்க்கு நேர்ந்த துன்பத்தைத் தனக்கு வந்ததாகக் கருதி, அதனை அகற்றுவதற்கு எவன் ஒருவன் பணி புரிகின்றானோ, அவனே இந்து ஆவான். அவனது சமயமே இந்து சமயம்'' என்று அறிஞர்கள் இதற்குப் பொருள் கூறுவர்.

(3) இனி, மற்றும் சில அறிஞர்கள் இதற்கு வேறொரு பொருளும் கூறுவர். 'சப்த கல்பதரு' என்னும் புகழ் பெற்ற வடமொழி இலக்கண நூல், 'ஹேயம் நிந்தாதி இதி ஹிந்து' எனக் கூறுகின்றது. ''நினைவிலும் சொல்லிலும் செயலிலும் எத்தகைய இழிவும் பிழையும் நேராமல் கருத்தாகப் புறக்கணித்து ஒழுகுபவன் எவனோ அவன் இந்து; அவனுடைய மதமே இந்து மதம்'' என்பது மற்றொரு வகை விளக்கம்.

இவ்விருவகைப் பொருள்களும், இந்து மதத்தைப் பின்பற்றி ஒழுகும் மக்களாகிய நாம் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய உயரிய சிறந்த குறிக்கோள்களை உணர்த்துவனவாகத் திகழ்கின்றன. ஆதலின் இப்பொருள் விளக்கங்கள் நாம் பெரிதும் போற்றிப் பாராட்டுவதற்குரியனவாகும்.

''இந்து மதத்தின் மூலமாகவே தெளிவும் இன்பமும் அமைதியும் அடைய முயலுதலைத் தவிர, இவ்வுலகில் எனக்கு வேறு பிறிதொரு விருப்பமும் இல்லை'' எனக் காந்தியடிகள் கூறியருளியுள்ளார் என்பது, இங்கு நாம் அறிந்து இன்புறத் தக்கது. அன்னி பெசன்ட் அம்மையார், ஆல்டஸ் அக்ஸ்லி போன்ற எத்தனையோ வேறு பல அயல் நாட்டுப் பேரறிஞர்கள், இந்து சமயத்தையும், அதன் உயர்ந்த தத்துவக் கோட்பாடுகளையும் வியந்து போற்றிப் பாராட்டியுள்ளனர் என்பதும், நாம் பெரிதும் சிந்தித்து மகிழ்தற்குரியது.

பெருமை:

இந்து சமயமானது, ஒரு வகையில், ''முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியினதாய்'' பெருமையுற்றுப் பிறங்கி வருகின்றது. உலகின் பல பகுதிகளில் இந்து சமயம் பண்டும் பரவியிருந்தது; இன்றும் பரவியிருந்து வருகின்றது. சமணமும், பௌத்தமும் சீக்கியமும் போன்ற மதங்கள் இந்து மதத்தினின்று தோன்றிய கிளை மதங்களேயாகும். எத்தனையோ பல கோடிக்கணக்கான மக்களுக்குரிய மதமாக இந்து மதம் இலங்குகின்றது. இந்து மதத்தை எதிர்த்துப் பல இயக்கங்களும் கொள்கைகளும் அவ்வப்போது தோன்றின எனினும், அவற்றை யெல்லாம் வென்று புறங்கண்டு, இன்றும் உயிர்ப்பாற்றலுடன் இந்து சமயம் நின்று நிலவி வருகின்றது. உலகப்புகழ் பெற்றவர்களாகிய விவேகானந்தர், அரவிந்தர், இரவீந்திரநாத் தாகூர், காந்தியடிகள் போன்ற பல பெருஞ் சான்றோர்கள் இந்து மதத்தினைப் பெரிதும் விரும்பிப் போற்றி மகிழ்ந்துள்ளனர்.

சிறப்பு:

தமிழ் நாட்டில் தோன்றிய தத்துவ ஞானிகளில் தலைசிறந்த ஒருவரும், சிவஞான சித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவப் பெருநூலை இயற்றியருளியவரும் ஆகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் (கி.பி. 13நூற்), சிறந்த சமயம் எது? என்பது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். ''உலகத்திலுள்ள பல சமயங்களும், அவற்றிற்குரிய பல நூல்களும், தம்முள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மிகவும் மாறுபட்டனவாக உள்ளன. இவற்றுள் சிறந்த சமயம் யாது? சிறந்த பொருள் நூல் யாது? என்று நாம் ஆராய்ந்தால், எந்தச் சமயத்தையும் நூலையும் இகழாமலும், 'இதுவேபொருந்தும், அது பொருந்தாது' என்னும் பூசல்கள் இன்றியும், பல சமயங்களும் நூல்களும் கூறுகின்ற எல்லா உண்மைகளையும் ஏற்ற பெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொண்டு, அவைகள் அனைத்திற்கும் பொதுவானதாய், ஒருபெரும் நிலைக்களனாகத் திகழும் சமயமும் நூலுமே, உண்மையிமேயே சிறந்த ஒரு பெரும் சமயமும் நூலும் ஆகும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

''ஓது சமயங்கள்
பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடொன்று ஒவ்வாமல்
உளபலவும்; இவற்றுள்
யாது சமயம்? பொருள் நூல்
யாது இங்கு? என்னில்,
இது ஆகும்; இது அல்லது
என்னும் பிணக்கது இன்றி,
நீதியினால் இவையெல்லாம்
ஓர் இடத்தே காண
நின்றது யாதொரு சமயம்!
அது சமயம்; பொருள் நூல்!''

என அவர் சைவ சித்தாந்தத்தின் சிறப்பைப் பற்றி விதந்து கூறியிருப்பது, இந்து சமயத்திற்கும் கூட ,ஒரு வகையிற் பெரிதும் ஏற்பு உடைத்தொன்றேயாகும் எனலாம்.

மானியர் வில்லியம்ஸ்:

இவ்வுண்மையை நன்கினிது வலியுறுத்தி வற்புறுத்தும் முறையில், சர். மானியர் வில்லியம்ஸ் என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர், இந்து சமயம் பற்றிக் கூறியிருக்கும் பின்வரும் கருத்துக்கள், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியன.

''இந்து மதம், எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்ற பெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துலகிற்கும் உரிய இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன்கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும் தனது பரந்து விரிந்த பெருநோக்கினால், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக்கொள்ளும் பெரு மாட்சிமை உடையதாக, இந்து மதம் இலங்குகின்றது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து மதம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும் மனித மனப்போக்கிற்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி, இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்துமதம் இணையற்றதாகத் திகழ்கிறது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சி மிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்கவல்லதாக, இந்து சமயம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது.''(1)

அன்னை வசந்தை:

இவ்வாறே இங்கிலாந்தில் தோன்றியவரும் உலகப் புகழ்பெற்ற ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, சார்லஸ் பிராட்லா முதலியவர்களோடு நட்புரிமை கொண்டு பழகிய பெருநாவலரும், பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய திருமதி அன்னை வசந்தை அம்மையார் (Dr. Annie Besant) அவர்கள் கூறியிருப்பதும், இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

''கடந்த 40 ஆண்டுகளுக்கும்மேலாக, உலகின் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து சமயம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப்போல நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக்கூடியதும் ஆகிய சிறந்த சமயம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகிறேன். அதனை எவ்வளவுக் கெவ்வளவு உணர்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்கு விளங்கிக் கொள்ளுகின்

---

(1) " A characteristic of Hinduism is its receptivity and all comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embrancing and ever-widening fold.

And, in real truth, Hinduism has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has highly spiritual and abstract side suited to the metaphysical philosopher, its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion......"

—SIR MONIER WILLIAMS

றோமோ, அத்துணை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம் ''.(2)

**அறுவகைச் சமயங்கள் :**

இந்து சமயத்தின் பலதிறப் பெருஞ்சிறப்புக் களுள், அதன் தத்துவக் கொள்கைகளும்சிறந்த நூற்பெருக்கமும் குறிப்பிடத் தக்கனவாகும். 'அறுவகைச் சமயங்கள்' என்னும் தொடர், தொன்றுதொட்டு வழங்கி வருவது. சமய தத்துவ நூலாசிரியர்கள், இவ்வறுவகைச் சம யங்கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல்களில் பல்வேறு வகைகளில் குறிப்பிட்டுள்ள னர். எனினும், அறுவகைச் சமயங்கள் அல்லது 'ஷட்தரிசனங்கள்' எனப்படும் நியாயம் வைசே டிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந் தம் என்னும் ஆறுமே, ஏனையவற்றை விட மிகவும் பழமை வாய்ந்தனவாகும். இவைகளை விளக்கி முறையே அக்கபாதர் கணாதர் கபிலர் பதஞ்சலி ஜைமினி வாதராயணர் என்னும் முனிவர்கள் நூல்கள் இயற்றியுள்ளனர்.

**வில்லியம் ஜோன்ஸ்:**

மிகப் பழைய காலத்திலேயே, நம் இந்திய நாடானது கிரேக்கர் உரோமர் முதலியமேலை நாட்டு மக்களுடன் வாணிகம் முதலியதொடர் புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இந் நாடுகள் இந்தியாவுடன் பல பொருள்களைக் கொண்டும் கொடுத்தும் கலந்து உறவாடி மகிழ்ந்தன.

இந்திய் நாட்டுத் தத்துவக் கொள்கை களை ஆராய்ந்துணர்ந்து வியந்த சர். வில்லியம் ஜோன்ஸ் என்னும் பேரறிஞர், ''இந்தியத் தத் துவக் கொள்கைகளுள் நியாயம் 'பெரிபடெடிக்' கொள்கையையும், வைசேடிகம் 'ஐயோனிக்' கொள்கையையும், மீமாம்சம் 'பிளேட்டோ வின்' கொள்கையையும், சாங்கியம் 'இட்டா லிக்'' கொள்கையையும், யோக தத்துவம் 'ஸ்டாயிக்' கொள்கையையும் பெரிதும் ஒத் துள்ளது. இவ்வாற்றால் கௌதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணாதர் தேல்ஸ்ஸையும், ஜைமினி சாக்ரடீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட் டோவையும், கபிலர் பித்தாகரசையும், பதஞ் சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்பெறுகின்றனர்''. என்று ஆராய்ந்து ஒப் பிட்டுக் கூறி மகிழ்கின்றார். (3)

இங்ஙனமே மாக்ஸ்முல்லர், பெரிடேல் கீத், விண்டர்நிட்ஸ், கிரிஃபித், எட்வின் ஆர் னால்ட், வில்லியம் காரி, ஷோஃபனேர், உரோமைன் ரோலண்ட் முதலிய நூற்றுக்கணக் கான மேலை நாட்டு அறிஞர்கள் பலர், இந்து சமய நூல்களை ஆராய்ந்து வியந்து போற்றிப் பதிப்பித்திருக்கின்றார்கள்.

**விக்டர் கசின் :**

''இந்திய நாட்டின் கவிதை இலக்கியங் கள் தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது அவைகளிற் பொதிந்துள்ள உண்மை கள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படு கின்றன. அவற்றின் உயரிய தத்துவக்கொள்கை நலங்களை, நம்முடைய ஐரோப்பிய அறிவுநல னுடன் ஒருங்கு வைத்து ஆராயும்போது, நாம் மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டியநிலை யில் இருக்கின்றோம்'' (4) என்று விக்டர் கசின் என்னும் பேரறிஞர் விளம்புகின்றார்.

இங்ஙனமே மாக்ஸ்முல்லர் என்னும் பேரறிஞரும், '' ஐரோப்பியர்கள் வெறும் கிரேக்க, உரோம, யூத தத்துவங்களை மட் டுமே, படித்தால் போதாது. நம்முடைய அக வாழ்க்கை நிறைவானதாகவும், பல நலம் பொதிந்ததாகவும், உலகளாவி விரிந்ததாகவும், உண்மையிலேயே உயரிய மனித இயல்புடைய தாகவும் அமைய வேண்டுமாயின், இந்தியத் தத்துவ நூல்களை நாம் படிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். அது நம்மு டைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப்படுத்தவல்லதாக உள்ளது'' (5) என்று கூறுகின்றார். இவற்றினாலெல்லாம் இந்து சமயத்தின் சிறப்பு இனிது புலனாதல் காண லாம்.

---

(2) "After a study of some forty years and more, of great religions of the world, I find none so perfect ; none so scientific, none so philosophical, and none so spiritual, as the great religion known by the name of Hinduism. The more you know it, the more you will love it ; the more you try to understand it, the more deeply will you value it."

—DR. ANNIE BESANT

(3) "Of the philosophical schools, it will be sufficient here to remark that the first Nyaya seems analogous to the Peripatetic; the second, sometimes called vaisesika, to the Ionic; the two Mimamsas, of which the second is often distinguished by the name of Vedanta, to the Platonic ; the first Samkhya to the Italic ; and the second of Patanjali to the Stoic philosophy ; so that Gautama corresponds with Aristotle, Kanada with Thales, Jaimini with Socrates, Vyasa with Plato, Kapila with Pythogoras, and Patanjali with Zeno."

—SIR WILLIAM JONES.

(4) "When we read with attention, the poetical and philosophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race, the native land of the highest philosophy."

—VICTOR COUSIN

(5) "If I were to ask myself from what literature, we here in Europe, we who have been nurtured almost exclusively on the thoughts of Greeks and Romans, and of one scientific race the Jewish, may draw that corrective which is most wanted, in order to make our inner-life more perfect, more comprehensive, more universal, in fact more truly human, a life, not for this life only, but a transfigured and eternal life, again I should point to India."

—PROF. F. MAXMUELLER,
*India, What can it Teach us.*

உலகின் பல பகுதிகளில்:

இந்து சமயமும், அதன் பல்வகைப் பண்பு நலங்களும், உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன. சுமத்திரா (சுவர்ணதீபம்), ஜாவா (யவத் தீபம்), பாலி, போர்னியோ, மலேசியா, சயாம், கம்போடியா (காம்போஜம்), சம்பா, இந்தோனேஷியா, இந்தோசைனா, நடுஆசியா, திபெத்து, பர்மா, சிலோன், சைனா, கொரியா, ஜப்பான் முதலிய பல பகுதிகளிலும், இந்து சமயத்தின் பண்பாடுகளும், சாயல்களும் பரவிக் காணப்படுகின்றன. கிழக்காசிய நாடுகளில்தேவவர்மன், குணவர்மன், உத்திரவர்மன், யசோவர்மன், சஞ்சயன், கௌணியன், அர்ச்சுனன், உக்கிரசேனன், சித்திர சேனன், பிரம்மதத்தன், இந்திராதித்தன் முதலிய பல இந்து சமயப் பெயர்கள் இன்றளவும் பெருக வழங்கப்பட்டு வருகின்றன.

ஜாவாவில் உள்ள போராபுதூர்ப் புத்தர் கோயிலும் (கி.பி. (750—850), கம்போடியாவில் உள்ள அங்கோர்தாம் என்னும் சிவபிரான் கோயிலும் (கி.பி. 902—860), அங்கோர்வாட் என்னும் திருமால் கோயிலும் (கி.பி. 1110—1150), நமது தமிழக இந்துக் கோயிற் கட்டடக் கலை, சிற்பக் கலைகளினுடைய வளர்ச்சியையும், சிறப்பையும், பரவலையும் விளக்குவனவாக அமைந்து திகழ்கின்றன. கம்போடியாவில் அங்கோர்வாட் என வழங்கும் ஒரு பெருங்கோயில் திருமாலுக்கென அமைக்கப்பட்டுள்ளது. அதன்கண் இராமாயணம், மகாபாரதம், அரிவம்சம் என்னும் நூல்களிலிருந்து பல அழகிய சிறந்த சிற்பக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. இராமன் மாயமானைப் பின்தொடர்தல், வாலி சுக்ரீவப்போர், அசோகவனத்தில் சீதையின் சோகநிலை, கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபிரான் காமதகனம் செய்தல், தேவர்கள் திருப்பாற் கடல் கடைதல், முதலிய காட்சிகள் மிகப் பெரிய அளவில் செதுக்கப்பெற்று இன்றளவும் உயிரோவியங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

ஈலியோடொரஸ்:

மிகப் பழங்காலத்தில் வெளிநாட்டவர்களும் இந்திய நாட்டில் வந்து தங்கியிருந்து இந்து சமயத்தைத் தழுவிப் போற்றியுள்ளனர். கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் குவாலியர் மாநிலத்தில் பெஸ்நகர் என்னுமிடத்தில், பிராமி எழுத்துக்களில் நிறுவப்பட்டுள்ள கல்வெட்டுத்தூண் ஒன்றில், ''சுங்க வம்சத்து மன்னனாகிய பகபத்திரன் என்பவனின் அரசவைத் தூதுவனாக அந்தால்கிதாஸ் என்னும் கிரேக்க மன்னவனால் அனுப்பப் பெற்றவனும், டியோன் என்பவனின் புதல்வனும், தட்ச சீலத்தில் வாழ்பவனும், 'பாகவதன்' எனப்படும் விஷ்ணுபக்தனும்ஆகிய ஈலியோடொரஸ் என்பவனால், பரவாசுதேவன் எனப்படும் விஷ்ணுவுக்குரிய, புனிதம் மிக்க பறவையாகிய கருடனின் வடிவத்தை உச்சியில் செதுக்கப்பெற்றுள்ள, இத்தூணானது நிறுவப் பெற்றது''(6) என்று காணப்படுகின்றது. இதனால் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே, கிரேக்கர் முதலிய பிறநாட்டவர்கள், இந்து சமயத்தைத் தழுவியுள்ளனர் என்னும் சிறப்பு மிக்க செய்தி அறியப்படுதல் காணலாம்.

அண்மையில் உருசிய நாட்டில் நமது இந்துசமயத்திற்குரிய இதிகாசங்களாகிய இராமாயணம் பாரதம் முதலிய நூல்கள் மொழி பெயர்த்துப் போற்றப்பட்டு வருகின்றன. பேரறிஞர் ஃபிலியோசா (Dr. Filliozat) என்பவரால், ஃப்ரெஞ்சு மொழியில் பெரிய புராணம் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றது. இன்னோரனைய பற்பல செய்திகளால் இந்து சமயம், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்ப் பிறங்கிவருதல் உணரலாம்.

R. RAJU,
Dy. Commissioner H.Qrs
(Retired)
HRACE Administration Dept

சமன்லால்:

''திருமாலின் கூர்மாவதாரப் படிமையினைக் கொய்ராகுவாவிலும், ஆதிசேடனின் கோயிலை மெக்சிகோ நகரின் அருகிலும், வாமனன் இந்திரன் ஆகியோர் படிமங்களை மெக்சிகோ நகரின் தேசியக் காட்சிச் சாலையிலும், இன்றும் யாவரும் காணலாம்.''

''பெருவிய நாட்டுக் கவிதை நூல்களில் ஒவ்வொரு பக்கத்திலும், இராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றின் இலச்சினைகள் காணப்படுகின்றன. மெக்சிகோ, குவாதமாலா, பெரு, பொலிவியா, ஒண்டுரஸ் முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளில், சிவபிரான் திருமால் விநாயகர் வாமனர் இந்திரன் சூரியன் அநுமன் முதலிய தெய்வங்கள் வழிபடப்பெற்றன. நடு அமெரிக்காவிலும் தென்னமெரிக்காவிலும் இத்தெய்வங்கள் வழிபடப்பெற்றன'' என்று சமன்லால் என்னும் ஆராய்ச்சிப் பேரறிஞர் கூறுகின்றார்.(6).

இராமாயணம்:

எகிப்து தேசத்தில், நமது இராமரின் திருப்பெயர், பெரிதும் பரவியிருந்ததாகத் தெரிகின்றது. அந்நாட்டின் வரலாற்று நூல்களில் முதலாம் இராமேசஸ், இரண்டாம் இராமேசஸ், மூன்றாம் இராமேசஸ் என்னும் பெயர்கள் பல காணப்படுகின்றன. எகிப்து நாட்டிலுள்ள சகாரா என்னும் பாலைநிலப் பெயருக்கும், இராமாயணத்தில் வரும் பகீரதனின் முன்னோர்கள் ஆகிய சகரர் என்பவர்களின் பெயருக்கும் இடையே, தொடர்பு இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

---

(6) "Every page of Peruvian poetry bears the imprints of Ramayana and Maha-Bharatha....Shiva, Ganesha, Indra, the Sun, Hanuman, Vishnu and his tortoise-incarnation (Kurma-Avatar), were some of the Hindu Gods worshipped in Central and South America... After 17 years of research, I can now claim to have proved my theory of Hindu colonisation of America. The stones in every corner of America speak of Hindu influences."

—CHAMAN LAL,
*HinduAmerica*

கிரேக்க நாட்டின் இணையற்ற பெருங் காப்பியம் ஆகிய இலியதம் (Iliad) என்னும் காப்பியத்தின் கதையில் வரும் மாந்தர்களுக்கும் Characters), இராமாயணம் என்னும் நம் நாட்டு இதிகாசத்தில் வரும் மாந்தர்களுக்கும் இடையே, பல திற ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்விரு பெருநூல்களுமே, போர் நிகழ்ச்சியினை அடிப்படைப்பொருளாகக் கொண்டவை. இரண்டிலுமே ஒருவன் மனைவியை மற்றொருவன் கவர்ந்துகொண்டு சென்றுவிடும் செய்தி கூறப்படுகின்றது.

கிரேக்க நாட்டில் இலியதம் என்னும் காவியத்தில் வரும் மெனிலஸ் (Menelaus) இராமன்; ஹெலன் (Helen) சீதை; ஸ்பார்ட்டா நகர் (Sparta) அயோத்திநகரம்; அகமெம்னன் (Agamemnon) சுக்கிரீவன்; பெட்ராக்ள்ஸ் (Patroclus) இலக்குவன்; நெஸ்ட்டார் (Nestor) ஜாம்பவான்; யுலிசிஸ் (Ulysses) ஆஞ்சநேயன், ஹெக்டார் (Hector) இந்திரசித்து என்று கூறலாம்படி, ஓரளவு ஒப்புமைத் தன்மை இவ்விரு பெரு நூல்களிலும் அமைந்து கிடக்கின்றது. இன்னோரனைய சான்றுகள் பலவும், இந்து சமயத்தின்கருத்துக்கள் கதைகள் கொள்கைகள், உலகின் பல பகுதிகளிலும் சென்று பரவியிருந்த செய்தியினை நுண்ணிதின் எண்ணியுணரப் பயன்படும் இனிய அரிய சான்றுகள் ஆகும் எனலாம்.

ஒப்புமைத் தன்மைகள்:

எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருவவதாரம் பற்றிய வரலாறு, மேலை நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் அமைந்து காணப்படுகின்றது. இரண்டிற்கும் இடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை மிக்குத் திகழ்கின்றது.

இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்சன் பொருட்டு ஒளிந்து வளர்ந்தான். இயேசுநாதர், ஏரோது (Herod) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைந்து வளர்க்கப் பெற்றார். கம்சனைப் போலவே, ஏரோது அரசனும், தனது உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கம்சனுக்குக் கண்ணபிரானின் அவதாரம் பற்றிய அறிவிப்பு, முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே, ஏரோது அரசனுக்கும் அசரீரியினால் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப் பெற்றது. கண்ணபிரான் சிறையிலே பிறந்தார். இயேசுநாதர் தொழுவத்திலே பிறந்தார். இயேசுவை 'நல்ல மேய்ப்பன்' (Good Shepherd) என்றுபோற்றுவர். அவ்வாறே கண்ணபிரானும், ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனாகப் பசுக்களை மேய்ப்பவனும் காப்பவனுமாகக் 'கோபாலன்', 'கோவிந்தன்' என்று பெயர் பெற்று விளங்கினான். இயேசு மலைச் சொற்பொழிவு ( Sermon on the Mount ) நிகழ்த்தினார். கண்ணபிரான் குருட்சேத்திரத்தில் தேர்த்தட்டின்மீது இருந்து, பகவத் கீதை (Song Celestial) உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் பலவும் நாம் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன. (7).

விவேகானந்தர்:

இந்து மதத்தின் இணையற்ற சிறப்பு, விவேகானந்த சுவாமிகள் அவர்களால், அமெரிக்க நாட்டில் சிகாகோவில் கூடிய உலகச் சமய மகாநாட்டில், அனைத்து அறிஞர்களின் உள்ளங்களையும் கவரும் முறையில் எடுத்து விளக்கப்பெற்றதனை, நாம் அறிவோம். வீர புருஷராகிய விவேகானந்த சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற இராமகிருஷ்ணர் பணி மன்றம், இன்று உலகத்தின் பல பகுதிகளிலும், நூற்றுக்கு மேற்பட்ட பல கிளை நிலையங்களைத் தோற்றுவித்து, இந்து சமயத்தைப் பரப்பிச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

முடிவுரை:

இந்து சமய வரலாற்றிலும், மறுமலர்ச்சியிலும் விவேகானந்தருக்கு மிகச் சிறந்த பங்கு உண்டு. தேச பக்தி, தெய்வ பக்தி ஆகிய இரண்டையும் சேர்த்து இணைத்து, நமது இந்து சமய வளர்ச்சிக்கு அவர் சீரிய சிறந்த பணி புரிந்துள்ளார். நாட்டுப் பற்றுப் போலவே, சமயப் பற்றும் நமக்கு மிக மிக இன்றியமையாததாகும். நாம் நமது இந்து சமயத்தை மிகவும் போற்றி வளர்க்கக்கடமைப்பட்டிருக்கின்றோம். 'இந்து சமயம் வாழ்ந்தால் தான் இந்தியாவும் வாழும்' என்பது விவேகானந்தர் விடுத்த எச்சரிக்கை. ஆதலின் நாம் நம் இந்து சமயத்தை இக்காலநிலைக்கு ஏற்பப் போற்றி வளர்த்து,நலம் பலவும் அடைய முற்படுவோமாக!

---

(7) " The birth stories of Krishna and Jesus have a certain striking resemblances suggestive of mutual borrowing. The similarities in the teachings of the 'Bhagavad Gita' and the Gospels have led some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the two religions of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings is undoubtedly an instructive study. The study of the ancestry of ideas is a fertile branch of Comparative Religion..."

—DR. S. RADHAKRISHNAN.

# 'இராமபிரானின் இனியதொரு குணம்,

'மகாவித்துவான்'—'மகாமகிமோபாத்யாய'

திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

வான்மீகி நாரதசம்வாதத்தில்'கிருதஜ்ஞன்' யாவன்? என்னும் ஒரு வினா வருகின்றது. இராமபிரானின் எல்லையற்ற குணங்களுள் ஒன்றைப்பற்றிய விளக்கம், இதன் வாயிலாக வெளிப்படுகின்றது.

செய்த நன்றியை மறவாதவனுக்குக் 'கிருதஜ்ஞன்' என்று பெயர். மனிதர்களுக்கு உரிய குணங்களுள் இக்குணமே முதன்மை பெறும். ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண் டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்பது திருக்குறள். எல்லாப் பாவங் களுக்கும் பிராயச்சித்தங்களால் போக்கடி உண்டு. செய்ந்நன்றி மறக்கை, அல்லது செய்ந் நன்றி கொல்லுகையாகிற பாவம் ஒன்றுக்கு மாத்திரம், பிராயச்சித்தம் என்னும் கழுவாய் ஒரு நூலிலும் காணக் கிடைக்காது என்றே, வட நூலாரும், தமிழ் நூலாரும் ஒருமிடறு ஆகக் கூறியுள்ளார்கள்.

'சங்கல்ப சூரியோதயம்' என்னும் நாட கத்தில், வேதாந்த தேசிகர் இப்பொருள் பற்றிச் சிறிது விவரித்து மிக விசித்திரமாகக் கூறியுள் ளார். பிறர் செய்த உதவிகளை மறப்பது என் கிற அளவிலே நில்லாமல், உபகாரம் செய்தவர் களுக்குப் பிரதியாக அபகாரங்களைச் செய்த வன் 'க்ருதக்நன்' எனப்படுவான். அவன் பஞ்ச மகாபாதகர்களிற் காட்டிலும் மேம்பட்டவன். என்றைக்கோ செய்து கழிந்த உபகாரங்களை மறப்பதென்பது கிடக்கட்டும்; செய்து கொண் டேயிருக்கும் உபகாரங்களை மறப்பவனும், அவ்வுபகாரங்களுக்குப் பிரதியாகத் தீங்கிழைப் பவனும், அவனினும் மேம்பட்ட காதகி. இது கிடக்க; 'இவர் நாளைக்கு நமக்கோர் பேருதவி செய்யப்போகிறார்' என்று தெரிந்து கொண்டு, முந்தியே அப்பெரியோர்க்குத் தீங் கிழைப்பவன் பாதகர்களில் மிக மேலானவன் என்றபடி.

கிருதஜ்ஞதை என்னும் நன்றியுணர்வுக் குணம் வாய்ப்பதரிது. இப்பெருங் குணத்தை நாம் அஃறிணைப் பொருள்களிடத்துக் காண முடியுமேயன்றி, உயர்திணைப் பொருள்களிடத் துக் காண்பது மிகவும் அரிது என்று கருதி, ஒரு பெரியார் கூறுகிறார். ''நின்று தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்'' என்று. தென்னை மரங் களுக்கு நாம் உமிழ்நீர் முதலிய அற்பமான நீர்களை விடுகிறோம்; இதற்குப் பிரதியாக அவை நமக்கு நல்கும் நீர் மிக மதுரமான சுவையுடையதென்பதைக் காணாநின்றோம். இத்தகைய நன்றியுணர்வு உலகில் சிலரிடத் தில்தான் காணமுடியும்.

வான்மீகி ராமாயணத்தில், அயோத்தியா காண்டத்தில் உள்ள ஒரு சுலோகமானது (1-11) இராம பிரானுடையதான நன்றியுணர்வுக் குணத்தை நன்கு வெளியிடுகின்றது. ஏதேனும் ஒருவிதத்தில் யாரேனும் ஓர் உதவிசெய்தாலும், அதனால் எப்போதும் உள்ளம் பூரித்திருப்ப தாகவும், நூற்றுக்காணக்கான தீங்குகள் இழைத் தாலும் அவற்றைச் சிறிதும் நெஞ்சில் கொள் வது இல்லையாகவும், இந்தச் சுலோகத்தில் இராமகுணாதிசயம் கூறப்பட்டுள்ளது. இதில் 'கதஞ்சித்' என்று முன்னம் பிரயோகிக்கப்பட் டுள்ள நுட்பம் குறிக்கொள்ளத்தக்கது. உப காரம் செய்ய வேணும் என்கிற எண்ணத் தோடு செய்கையன்றியே, அபுத்தி பூர்வமாகச் செய்ததாயிருந்தாலும் அதையும் பேருதவி யாகக் கொண்டு மகிழ்பவனாம் இராமன். நெஞ்சாரவே நூற்றுக்கணக்கான தீங்குகள் செய்யினும், அவற்றை நெஞ்சிற் கொள்ளா னாம்.

இப்பெருங் குணத்தை நாம் இராமாயணத் தில் எங்கே கண்டோம் என்னில்; பல விடங் களில் கண்டாலும் சிலவிடங்களையே இங் கெடுத்துக் காட்டுவோம். ஆனால், இங்கு முன்னம் ஒன்று சொல்ல வேண்டியதாகிறது; ''வெறிதேஅருள் செய்வர்'' என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி, ஒன்றுமே செய்யாதவர்க் குங்கூட, மிகச் சிறந்த அருளைச் செய்யும் இயல்பினனான இராமன், ஒன்று செய்தவர் களுக்கு உகந்திருக்கிறானென்றால், இது ஒரு வியப்போ? இது பாராட்டத் தக்கதொரு குண மாகுமோ? ஆகாதுதான். ஆனாலும், இராமன் தன்னை ஒரு மனிதனாக நடித்துக்காட்டினான் ஆதலால், 'உலகில் மனிதர்களிடத்துக் காணுங் குணங்களெல்லாம் இராமனிடத்து உள்ளன' என்று காட்ட வேண்டுவது பிராப்தமாகிறபடி யால், அந்த முறையில் காட்டலாமன்றோ? கேண்மின்:

குரக்கரசனான சுக்ரீவனிடத்திலும், அரக் கர் கோமானான விபீடணனிடத்திலும், இராம பிரான் காட்டியருளிய திருவருள், வாயாற் சொல்ல வொண்ணாதது, நெஞ்சாலும் நினைப் பரிது. இதற்கீடாக அவர்கள் செய்த நன்றி யாதென்று பார்க்குமளவில், விபீஷணன் சரணாகதி செய்தான் என்றாவது சொல்லத் தக்கதாக உள்ளது; சுக்ரீவனிடத்திலோ என் னில் அதுவுமில்லை; இராமன் சுக்ரீவனைச் சரணம் புக்கதாகக் காண்கிறோமே யல்லாது, சுக்ரீவன் இராமனைச் சரணம் புக்கதாக இல்லை. ஆனாலும், இராமபிரானது திருவுள்

ளத்தினால் சுக்கிரீவன் பேருதவி செய்தானாகக் கொள்ளப்பட்டான்; அவ்வுதவி யாதெனில் இராமன் சீதையைப் பிரிந்து மிகவருந்தி இன்னது செய்வதென்று தோன்றாமல் சென்று கொண்டிருக்கையில், பம்பைக் கரையில் அனுமன் வந்து சந்தித்தனன் அன்றோ; இது சுக்ரீவனதுகட்டளையினால் தானே நிகழ்ந்தது!

அனுமன் இராமனிடம் வந்து சேர்ந்து, 'நான் சுக்ரீவனால் அனுப்பப்பட்டு இவ்விடம் வந்தேன் உங்களைக் காண' என்றே சொல்லியிருக்கின்றனன். இத்தகைய மகா குணசாலியான ஆஞ்சநேயனை அனுப்பியது, சுக்ரீவன் தன்னுடைய காரியத்திற்காகவாயினும், இராமன் அங்ஙனம் கொள்ளாது அதனைத் தனக்குச் செய்த பேருதவியாகக் கொண்டே, சுக்ரீவனிடத்துப் பேரருள் புரிந்தனன். விபீடணன், ''சர்வலோக சரண்யாய ராகவாய மகாத்மநே'' என்று சொல்லிக் கொண்டு, தன்னிருப்பிடம் தேடிவந்த ஒரு சிறிய செயலையே பேருதவியாகக் கொண்டு, அவனிடத்து மிக்க பரிவு காட்டியருளினன் இராமன்! அந்தப் பிரிவு எப்படிப்பட்டது என்பதைச் சீர்வசநபூடணத்தில், ஒரு வாக்கியத்தில் காணலாம்; அதாவது (228) ''விபீஷணனை இராவண குலபாம்சநம் என்றான்; பெருமாள் இட்சுவாகு வம்ஸ்யராக நினைத்து வார்த்தையருளிச் செய்தார்.''

இராமன் விபீடணனை இட்சுவாகு வம்சத்தவர்களுள் ஒருவராகத் திருவுள்ளம்பற்றி வார்த்தை யருளிச் செய்தான் என்பது, இராமாயணத்தில் எங்கே காண்கிற தென்னில்; விபீடணனை இராமபிரான் அங்கீகரித்த பிறகு இலங்கையிலுள்ளாருடைய பலாபலங்களைச் சொல்லுமாறு வினவுகின்ற இராமன், 'இராட்சசர்களின் பலாபலத்தை உள்ளபடி எனக்குச் சொல்லு' என்றான். 'விபீஷணா! உன்னினத்தாருடையபலாபலங்களைச்சொல்லு' என்றோ, இராவணனுடைய பலாபலங்களைச் சொல்லு என்றோ சொல்லவேண்டுமிடத்து, அப்படிச் சொல்லாமல் 'இராட்சசர்களின் பலாபலங்களைச் சொல்லு' என்றதானது, விபீடணனை இராட்சச சாதியில் வேறுபடுத்திக் காட்டியே தீரும் என்று ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றி ''செல்வ விபீடணற்கு வேறாக நல்லானை'' என்கிறார் திருமங்கையாழ்வார். பெரிய திருமொழியில், இராமபிரானுக்கு மற்ற பக்தர்கள் யாவரும் ஒரு தட்டு, விபீடணாழ்வான் தனித் தட்டு என்பது இப்பாசுரத்தின் கருத்து.

ஆக, விபீடணன் சுக்ரீவன் போல்வார் செய்த செயல்களைக் கனத்ததாகக் கொண்டு, அவர்களுக்கு நன்மை புரிந்த விஷயம் நிற்க; 'பிறர் எவ்வளவு அபகாரங்கள் செய்தாலும் அவற்றைச் சிறிதும் நினைப்பதில்லை'' என்று இதுவும் ஒரு பெருங்குணமாக இராமனுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றதே! சுக்ரீவன் விஷயத்தில் மாறுபாடாகக் காண்கின்றதே; எங்ஙனே எனின், வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்கு மகுடாபிடேகஞ்செய்து, கார்காலம் நீங்கினவுடனே வானரசேனைகளைத் திரட்டிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டு, அவனைக் கிட்கிந்தைக்குப் போகவிட்டனன் இராமன். போனவன் மன்மத லீலைகளில் கால் தாழ்ந்திருந்ததனால், கெடு தவறிப் போனதை நினையாமலேயிருந்தான்.

அப்போது இராமன் இளையோனை நோக்கிக் கூறுகின்றனன்; 'இலட்சுமணா! அரசர்கள் போர்க்குப் புறப்படவேண்டும் இக்காலத்தில் சுக்ரீவன் என்னை அடியோடு மறந்து வாளா கிடக்கின்றனனே; செய்நன்றி மறந்த காதகன் அல்லவா அவன்; நீ உடனே அவனிடஞ் சென்று நான் சொன்னதாக இங்ஙனம் கூறுவாயாக; செய்ந்நன்றி மறந்த தீ வினையாளன் புருஷர்களில் கடையானவன்; மாமிசம் தின்னப் பிறந்த பிராணிகளும் கூட அவனது மாமிசத்தைத் தின்னாதென்று சொல்லு; இலட்சுமணா! என் பராக்கிரமத்தை அவன் நன்கறிந்திருந்தும், மழைக்காலம் சென்ற பின்பும் சிறிதும் அச்சமின்றிக் காமபரவசனாய்க் கிடக்கிறானே; வாலி சென்ற வழி அவனுக்கும் திறந்திருக்கின்றதென்று அவனிடம் கூறு. அவனை உற்றார் உறவினரோடும் கூட எமபுரம் அனுப்பச் சித்தமாயிருக்கிறேன் என்று தெரிவி; அப்படிப்பட்ட கதியை வரவழைத்துக் கொள்ள வேண்டாமென்று சொல்லு'' என்று.

இவ்வளவு சீற்றம் இராமனுக்கு ஏன் உண்டாயிற்று! 'நூற்றுக்கணக்கான தீங்குகள் கண்டாலும் நெஞ்சு கன்றுவதில்லை' என்று கொண்டாடப் பெற்ற இராமனுக்கு, உயிர்த்தோழன் திறத்து இத்தனைச் சீற்றம் தகுமா? இதுகுணக் கேடு அல்லவா? என்கிற கேள்வி பிறக்கக்கூடும்.

இதற்குச் சொல்லுகிறோம் கேண்மின்; மேற்சொன்ன விதமாக இராமன் இலட்சுமணனிடம் சொன்னபோது அவ்விளையோன் ''சத்தியம் தவறின சுக்ரீவனை இன்றே கொன்று விடுகிறேன்; வாலியின் மகனான அங்கதன் நமக்குத் துணை புரிவான், சுக்ரீவனைத் தொலைத்தே விடுவோம்'' என்றனன். அதற்கு இராமன் சொல்லுகிறான்; 'இலட்சுமணா, நன்னடத்தையுள்ள நீ இப்படிப்பட்ட நண்பனை ஆராயாது கொல்லலாகாது; அவனிடம் பழையபடி நல்ல குளிர்ந்த வார்த்தைகளையே பேசு; அவன் நம் விஷயத்தில் நன்றிகெட்டவனே என்பது நிச்சயமாகத் தெரிந்தால், பிறகு உன் விருப்பத்தின்படி செய்!'' என்று.

இதனால் நாம் தெரிந்து கொள்வதென்ன? உலகில் நன்றி மறத்தல் என்பது பெரும் பாதகம். அப்பாதகனை என்ன செய்யினும் குற்றமில்லை என்கிற நூற்கொள்கையை எடுத்துரைப்பதொன்றே இராமனுக்கு இலக்கியமானது; தருமத்தை நிலைநாட்டுவதற்காக நான் பிறக்கின்றேன் என்று சொல்லித் தருமநெறியை நிலைநாட்டுவதற்கென்றே திருவவதாரம் செய்தருளின பெருமாள், இத்தகைய நூற்கொள்கைகளைத் தெரிவிக்கும் முகத்தால், தர்ம ஸ்தாபனம் செய்ய வேண்டுவதும் அவசியமாதலால், இதனால் இராமனுக்கு நேரும் குணக்கேடு யாதொன்றுமில்லை என்றுணர்க. இதனால் இராமபிரான் நன்றியுணர்வு உடைமையினை எவ்வளவு மதித்துப் பெரிதும் போற்றியருளினான் என்பது தெளியப்படும். **

# பெரிய குந்தவையார்

'பேராசிரியர்'
திரு. கே. எம். வேங்கடராமையா, M.A., B.O.L.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

## பெற்றோரும் கணவனும்

குந்தவையார், இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழனுக்கு (957 - 970), அவன் பட்டத்தரசியாகிய வானவன் மாதேவி பால் பிறந்தவர் ஆவர். இவர் முதலாம் இராசராச சோழனின் தமக்கையார் ஆவர். இராசராசன் 1985 - 1014 வரை ஆண்டார். முதல் இராசராசனுக்குக் குந்தவையார் என்ற ஒரு மகள் இருந்தமையால், முதல் இராசராசனின் தமக்கையாகிய இக்குந்தவையார் பெரிய குந்தவையார் எனப் பெற்றார். இப்பெரிய குந்தவையார் வல்லவரையன் வந்தியத் தேவர் என்பவரை மணந்து கொண்டார். அவ்வந்தியத் தேவர் வேங்கி நாட்டில் வாழ்ந்த கீழைச் சளுக்கிய மரபினர். அவர் குந்தவையாரை மணந்த பிறகு சோழநாட்டிலேயே தங்கிவிட்டார்: சிறந்த சோழப் படைத் தலைவராக விளங்கினார்; முதல் இராசேந்திரன் காலத்தில் வட ஆர்க்காடு ஜில்லாவில் பிரம தேசம் என்ற ஊரைச் சூழ்ந்த பகுதிகளை அரசாண்டார். ஆனால் குந்தவையார், பழையாறையிலேயே ஒரு சிறந்த அரண்மனையில் தங்கியிருந்ததாகவே அறியப்பெறுகின்றது.

## இராசராசனது அன்பு

இராசராசனுக்குத் தன் தமக்கையினிடத்து அளவு கடந்த பற்றும் மதிப்பும் உண்டு. அவ்வன்பு காரணமாகவே தன் மகளுக்கும் குந்தவை என்று பெயர் வைத்தான்போலும், அன்றியும் தான் எடுப்பித்த தஞ்சைப் பெரிய கோவிலுக்குத் தானும் தன் தமக்கையும் கொடுத்தவற்றை நடு விமானத்தில் கல்லில் வரையும்படி குறிப்பிட்டதும், இவ்வரசனுக்குத் தன் தமக்கையாரிடத்திருந்த பெருமதிப்பை வலியுறுத்தும். அக்கல்லெழுத்துப் பகுதி வருமாறு:

''நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீராஜராஜேஸ்வரமுடையார்க்கு நாம் குடுத்தனவும் அக்கன் குடுத்தனவும் நம் பெண்டுகள் குடுத்தனவும் மற்றும் குடுத்தார் குடுத்தனவும் விமானத்தில் கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள.'' (இதில் அக்கன் என்றது குந்தவையாரைக் குறிக்கும். )

## பெற்றோரைப் போற்றியமை

''ஆழ்வார் பராந்தகன் குந்தவையார்'' "பொன்மாளிகைத்துஞ்சிய தேவர் திருமகளார்" என்று இவ்வம்மையார் கூறப்படுவதற்கேற்ப, இவர் தஞ்சைப் பெரிய கோவிலில் தன்தந்தை சுந்தரசோழன் படிவத்தையும், தாய் வானவன் மாதேவியின் படிவத்தையும் எழுந்தருளுவித்து, அவற்றிற்கு நாள்வழிபாட்டிற்கு நிவந்தமாகப் பெரும்பொருள் வழங்கினார். அன்றியும் தன் தந்தை சுந்தரசோழன் பெயரால் ,சுந்தர சோழன் விண்ணகர் ஆதுரசாலை என்ற மருத்துவ நிலையம் அமைத்ததாகவும் அறியப்பெறுகின்றது.

## சுந்தரசோழ விண்ணகர் ஆதுரசாலை

இது குந்தவையாரால் தன் தந்தையின் நினைவாகத் தஞ்சாவூரில் அமைக்கப்பெற்றது. பண்டார வாடையில் உள்ள முதலாம் இராசேந்திரனின் 3-ஆம் ஆண்டுக் கல்லெழுத்து ஒன்று, இவ்வாதுர சாலையை நடத்துவதற்காக, 70 காசு கொடுத்து, 9 மாநிலம் இறையிலியாக வாங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. இம் மருத்துவ நிலையத்தில் இருந்த வைத்தியர் ''சவர்ணன் அரையன் மதுராந்தகன்'' என்ற பெயருடையவர் என்று அக்கல்லெழுத்துக் கூறுகின்றது. இம் மருத்துவசாலைக்கு விடப்பட்ட ''வைத்திய போகம்'' போதாமை எண்டு, இக்குந்தவையார் இன்னும் மனைகள் வாங்கி இம் மருத்துவ சாலைக்கு அளித்ததாகவும், முன் அளித்த நிலமும், இப்பொழுது அளித்ததும், சவர்ணன் அரையன் மதுராந்தகனும், அவருடைய சந்ததியாரும் அனுபவிக்கலாம் என்றும், அவ்வைத்தியர் மருகல் என்னும் ஊரினர் என்றும், பழையாற்றில் தன் அரண்மனையில் இருந்து இவ்வுத்தரவுகளை இவ்வம்மையார் அளித்தனர் என்றும், இவற்றைப் பேரவையினர் கல்லில் வெட்டினார்கள் என்றும், இன்னொரு கல்லெழுத்துக் கூறுகின்றது.

அரசரின் பட்டப் பெயர்கள் வளநாடுகளுக்கும், சேரிகளுக்கும் அமைத்தவாறுபோல, குந்தவையார் செம்பியன்மாதேவியார்போன்ற சிறந்தவர்களின் பெயர்களும் ஊர்களுக்கும், பெரிய நகரங்களில் உள்ள சேரி(தெருக்)களுக்

கும் இடப்பெற்றிருந்தன. தஞ்சைத் திருக்கழித் திட்டை பல சேரிகளையுடையதாய் இருந்தது. அச்சேரிகளுள் ஒன்று குந்தவைச்சேரி (தெரு) என்பது ஆகும் என்று, முதலாம் இராசேந்திர னின் 9-ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக் கூறுகின்றது. சோழ பாண்டியன் சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியன் கல்வெட்டொன்று, திருநெல்வேலி ஜில்லா மன்னார் கோயிலில் உள்ளது. இம்மன்னார்கோயிலில் 12 சேரிகள் இருந்தனவென்றும், அவற்றுள் ஒன்று குந்தவைச் சேரி என்றும், அக்கல்வெட்டுகளினின்று அறியப் பெறும்.

திருமாகாளத்தில் உள்ள கல்வெட்டு, முழையூர் நாட்டுக் குந்தவைச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரைக் குறிப்பிடுகின்றது. தஞ்சை இராசராசேச்சரத்துக்கு இவ்வூர்ச் சபையார் திருப்பரிசாரகஞ்செய்யும் மாணி ஒருவரை அனுப்பவேண்டும் என்று, முதலாம் இராசராச சோழனுடைய தஞ்சைப் பெரிய கோயிலின் கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளது. முதல் இராசேந்திர சோழனின் 27ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, பிரமதேசம் என்ற ஊரில் காணப்பெறுகின்றது. அதில் குந்தவையாரின் பெயரால் ஒரு ஏரி இருந்ததெனக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

குந்தவை ஆழ்வார் திருமடம்

சேரி, பேரேரி, ஊர் முதலியன குந்தவை யாரின் பெயரால் அமைந்தவாறு போலக் குந்த வையார் பெயரால் திருமடம் ஒன்று உத்தர மேரூரில் இருந்ததாக அறியப் பெறுகின்றது. இது வைணவர்களுக்குரிய மடம் .அங்கு வைண வர்களுக்கு உணவளிக்க நிபந்தம் அளிக்கப் பெற்றது. இனி மைசூரைச் சேர்ந்த தடிமலிங்கி என்ற ஊரில் பெரியகுந்தவையார் பேரால் ஒரு பண்டாரம் (Treasury) இருந்ததென்வும் அறியக் கிடக்கிறது.

குந்தவையார் தஞ்சைப் பெரிய கோயிலில் தட்சிண மேருவிடங்கர், நம்பிராட்டியார் உமா பரமேசுவரியார்க்குக் கொடுத்த ஆபரணங் களும் பல. அவற்றின் விரிவு ஒரு கல்வெட்டிற் கூறப் பெற்றுள்ளது. அதன்கண் குறிக்கப்பெற் றுள்ள அணிகலன்கள் யாவும் முத்து, வயிரம், மாணிக்கம் முதலிய இரத்தினங்கள் பதிக்கப் பெற்றவை. ஒவ்வொன்றிலும் எவ்வளவு முத்துக்களுள்ளன, வயிரம் பதிக்கப்பெற்றன, மாணிக்கங்கள் கட்டப்பெற்றன என்ற விவ ரங்களும் இக்கல்லெழுத்தில் தரப்பெற்றுள்ளது.

இவ்வாறே தஞ்சைப் பெரிய கோயிலில் உமாபரமேசுவரியார் திருமேனியை எழுந்தருள் வித்துப் பல அணிகலன்களை முதலாம் இரா சேந்திரனின் 3ஆம் ஆட்சியாண்டில் அளித்த குந்தவையார், தென்னாற்காடு ஜில்லா உடை யார்குடியில் சூரிய தேவர் திருமேனியை எழுந் தருள்வித்து, நிலையாக விளக்கெரிக்க 25 கழஞ்சு பொன்னையும் தானமாக அளித்துள் ளார்.

இராசராசசோழனின் 17ஆம் ஆட்சியாண் டில் இராசகேசரிச் சதுர்வேதிமங்கலத்துச் சபை யார் குந்தவையார்க்கு நாலரை மாநிலத்தை எட்டரை காசுக்கு விற்றார்கள். இந்நிலத்தைக் குந்தவையார் தஞ்சைக் கருந்திட்டைக்குடி மகாதேவர்க்கு நந்தாவிளக்கு நன்கெரிப்பதற்குக் கொடுத்தார்.

தாராபுரம் என்பது முதலாம் இராசராசன் காலத்தில், இராசராசபுரம் எனப் பெற்றது. இது தென்னாற்காடு மாவட்டத்திலுள்ளது. இத்தலத்தில் குந்தவையார் மூன்று கோயில் களைக் கட்டினதாக அறிகின்றோம். குந்தவை விண்ணகர் என்பது திருமால் திருக்கோயில்; இரவிகுல மாணிக்க ஈசுவரம் என்பது சிவபெரு மான் திருக்கோயில்; குந்தவை ஜினாலயம் என்பது சைனப்பள்ளி. முதல் இராசராசனது 2ஆம் ஆட்சியாண்டில் இவற்றைப் பற்றிய செய்திகள் காணப்பெறுகின்றன. இம்மூன்று திருக்கோயில்களுக்கும் பொன், வெள்ளி, இரத் தினங்களால் ஆகிய அணிகலன்களும், பாத் திரங்களும் குந்தவையார் கொடுத்தார். அன்றி யும் அரசாங்க உத்திரவு வந்ததும், ஆரூரன் அரவணையான் ஆன பராக்கிரமசோழ மூவேந்த வேளான் என்னும் அரசியல் அதிகாரி, கோயில் பண்டாரத்தை ஆராய்ந்து, கோயிற்கு வந்த அணிகலன்கள் முதலியவற்றைக் குறித்து அவ் வக்கோயில்களில் வெட்டுவிக்க வேண்டுமென் னும் உத்தரவளித்தான்.

குந்தவை விண்ணகர்

இத்திருமால் கோட்டத்தில் நிலையாக விளக்கெரிக்கக் குந்தவையாரால் ஆடுகள்விடப் பெற்றதாகவும், சேனாபதி மும்முடிச் சோழ பிரம்மராயர் கோயில் காரியங்களை மேற் பார்வை செய்தார் என்றும், முதல் இராச ராசனின் 25ஆம் ஆண்டுக் கல்லெழுத்து அறி விக்கின்றது. அன்றியும் முதலாம் இராசேந்திர னின் 43ஆம் ஆண்டுக் கல்லெழுத்து, மீண்டும் குந்தவையார் பத்து விளக்கெரிக்க ஆடுகளை விட்டதாகக் கூறுகிறது. அன்றியும் தேவரடி யார், திருமஞ்சனத்துக்கு ஒரு பாத்திரம் அளித் தார் என்றும், குந்தவை விண்ணகர்க்கும், இரவி குல மாணிக்க ஈசுவரத்துக்கும் உரிய தேவரடி யார்கள் இறைவன் திருவுலாப் போகும்பொழுது உடன் செல்லுதல் வேண்டும் என்றும், அம்பு போடும் விழாவில் ஆடல் பாடல்களை நிகழ்த்த வேண்டும் என்றும் அறிகிறோம். இச்சிவாலயத் தில் நாடோறும் பத்தி விளக்குகள் எரிப்பதற்கு மூன்று ஆட்டிடையரிடத்துக் குந்தவையார் ஆடுகளை விட்டு வைத்தார்கள். இறைவன் திரு வுலாப் போகையில் ஆட்டும் பாட்டும் தேவரடி யார் நிகழ்த்தவேண்டும் என்று இவ்வாலயத் திற்கு ஏற்பாடு செய்யப்பெற்றது என்பது முற் பகுதியில் கூறப் பெற்றது.

குந்தவை ஜினாலயம்

தாராபுரத்தில் குந்தவையார் ஒரு சமணப் பள்ளியை அமைத்தாற் போல, வடாற்காடு ஜில்லா போளூர்க்கு அருகிலுள்ள திருமலையில் ஒரு ஜினாலயத்தை அமைத்தார். இந்த ஜினா லய தேவர்க்குப் பெரும் பாணப்பாடிக் கூரை வழிமல்லியூர் என்ற ஊரில் இருந்த வியாபாரி

நன்னப்ப ஐயன் என்பவருடைய மணவாட்டி சாமுண்டப்பை என்பார், ஒரு நுந்தா விளக்கு எரிக்க இருபது காசு அளித்தார்; திருவமுதுக்குப் பத்துக் காசு அளித்தார்.

திருவாவடுதுறையில் இராசேந்திரசிங்க வள நாட்டு இன்னம்பர் நாட்டுப் பழைய வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், முதல் இராசேந்திரனின் 4-ஆம் ஆட்சியாண்டில், 120 காசுபெற்று நிலமும் மனைகளும் விற்றனர். அந்நிலங்களைப் பெரிய குந்தவையார் ''சவர்ணன் அரையன் சந்திரசேகரன் ஆன உத்தம சோழ அசலன்'' என்பானும், அவன் வழியினரும், அவ்வூர் வைத்தியராக இருந்து பணியாற்றும் பொருட்டு அளித்தார். அந்நிலம் வீடு இவற்றுக்காக அளிக்கவேண்டிய வரியைச் சபையினரே 80 காசு பெற்றுக் கொண்டு அளிப்பதாக ஒப்புக்கொண்டனர்.

திருவிசலூரில் குந்தவையார் சல்லியக் கிரியை போகமாகத் திருவிசலூரில் நிலதானம் செய்த செய்தியை, முதலாம் இராசேந்திரனின் 4-ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து அறிவிக்கிறது. இத்தானம் செய்தபொழுது இவர் பழையாறையில் இருந்ததாக அறிய வருகிறது.

திருநல்லம் என்னும் கோனேரிராசபுரத்தில், இராசேந்திர சோழனின் 5-வது ஆண்டுக் கல்லெழுத்து, அவ்வரசனின் மூன்றாவது ஆண்டில் குந்தவையார் அளித்த தருமங்களைக் குறிப்பிடுகின்றது. எனவே இவ்வம்மையார் முதல் இராசேந்திரனின் 5-ஆம் ஆண்டிற்குள் (கி.பி 1016-17ல்) சிவபிரான் திருவடி நிழலை எய்தியிருத்தல் கூடும் எனத் தெரிகின்றது.

## முடிவுரை

இங்ஙனம் பல்லாற்றானும் பல சமயங்களுக்கும் தொண்டுகள் புரிந்த குந்தவையார் சைவ சமயத்தில் மிக்க பற்று உடையவர்; தன் பெற்றோரிடத்தில் இடையறாப் பேரன்பு உடையவர்: முதலாம் இராசராசன் சிவபாத சேகரன் ஆயினமைக்கு இப்பெரிய குந்தவையாரும், செம்பியன் மாதேவியாரும் காரணம் ஆவர். எனவே இவ்வம்மையாருடைய நினைவு தமிழ் மக்களுக்குப் பெரிதும் இன்பம் பயக்கும்.

நூல் அறிமுகம்

# உண்மை விளக்கம்

(1) **உண்மை விளக்கம்** : சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், திருவதிகை மனவாசகங் கடந்தார் இயற்றிய 'உண்மை விளக்கம்' என்பது ஒன்று. சைவ சித்தாந்தம் கற்க முற்படுவோர், இதனையே முதல் முதலாகக் கற்கத் தொடங்குவர். 51 வெண்பாக்களால் இயன்ற இந்நூல், 36 தத்துவங்கள், ஆணவம் கன்மம் மாயை என்னும் மலங்கள், மற்றும் உயிரியல்பு, இறையியல்பு, நாதன் நடம், திருவைந்தெழுத்து, அதன்பொருள், முத்தியின் இயல்பு, குருலிங்க சங்கம வழிபாடு ஆகியவற்றை, எளிதாகவும் தெளிவாகவும் விளக்குகின்ற சிறப்புடையது. இச்சிறந்த நூலைச்சென்னைச் சைவசித்தாந்த மகா சமாசத்தின் ஆங்கிலச் 'சைவ சித்தாந்தா' இதழின் இணையாசிரியர் திரு **சி. என். சிங்காரவேலு முதலியார்**, எம்.ஏ. அவர்கள், ஆங்கிலத்தில் அழகுற மொழிபெயர்த்துப் பலவகை விளக்கங்களுடன், சிறப்புற எழுதியிருக்கின்றார்கள். தமிழின் மூலச் செய்யுட்களும், அவற்றிற்கான ஆங்கில விளக்கங்களும் சிறப்புற இணைத்துத் தரப் பெற்றுள்ளன. பயன்மிக்க சிறந்த நல்ல நூல். சிறந்த முறையிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இலங்கையில் தெல்லிப்பழை என்னுமிடத்தில் நடைபெற்ற சென்னைச் சைவசித்தாந்த மகா சமாசத்தின் 75-ஆம் ஆண்டுப் பவழ விழாவில், இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது. அறிஞர்கள் பலர் இந்நூலின் சிறப்பைப் புகழ்ந்து, அணிந்துரை அளித்துப் போற்றியுள்ளனர். அன்பர்கள் வாங்கிப் படித்துப் பயன்பெறுதற்குரியது.

கிடைக்குமிடம் :

**திரு. சி. என். சிங்காரவேலு முதலியார், M.A.,**
'சிவமணம்',
31-இரண்டாம் குறுக்குத் தெரு,
மேற்கு சி. ஐ. டி. நகர்,
சென்னை-600 035.

விலை ரூ. 6.

(வெண்பா)

ஓங்குசைவ சித்தாந்த உண்மை விளக்கநூல்,
ஆங்கிலத்தில் ஆக்கிஅழ காய்அளித்தார்;
—ஈங்கெவரும்
நன்காரத் தோய்ந்து நயந்துமிகக் கற்றுவப்பச்,
சிங்கார வேலர் சிறந்து.

—ந. ரா. முருகவேள்.

# "வாழ்முதல் ஆகிய பொருள்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

"போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே" என்று மணிவாசகப் பெருமான், தமது திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சியில் இறைவனைப் போற்றி வணங்கித் துதிக்கின்றார்.

"போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு இணைதுணை
மலர்கொண்டு,
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழு
கோம்;
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
ஏற்றுயர் கொடியுடை யாய்! எனை உடையாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே"

என்பது மணிவாசகர் அருளிய திருவாசகத் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்.

வாழ்முதல்:

நம்முடைய மனித வாழ்க்கைக்கு இன்றியமையாமல் தேவைப்படுகின்ற பொருள்கள் பல. நம்முடைய வாழ்க்கைக்கு உணவும் நீரும் காற்றும் உடையும் உறையுளும் ஆகிய எத்தனையோ, பல பொருள்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. உணவு உண்ணாமலும், நீர் அருந்தாமலும், காற்றை உட்கொள்ளாமலும், உடை அணியாமலும், உறையுள் இல்லாமலும், நாம் உயிர் வாழ்தல் பெரிதும் கடினமான செயலாகும். இவைகள் அனைத்தும் வாழ்க்கைக்குரிய இன்றியமையாத பொருள்களாகத் திகழ்கின்றன.

எனினும், இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பொருளின் உதவி, நமக்கு மேலும் மிகமிக இன்றியமையாத முதற்பொருளாக இருந்து வருகின்றது. அப்பொருளின் அடிப்படையும் ஆதரவும் துணையும் இல்லாமல் நாம் வாழ்தல் இயலாது. அப்பொருளையே கடவுள் என்றும், இறைவன் என்றும், பலவகைகளில் ஞானநூல்கள் நவில்கின்றன. அப்பொருள் தான், நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாமல் உள்ள முதற்பொருளாகத் திகழ்கின்றது. நம் வாழ்க்கைக்கு வேண்டுவன பலவற்றுள்ளும் மிகமிக முதன்மையாக வேண்டப்படுவதொன்றாதலின், கடவுட் பொருளை மாணிக்கவாசகர் 'வாழ்முதல் ஆகிய பொருள்' என்றார். "வாழ்முதல் ஆகிய பொருள்" என்னும் தொடர், வாழ்க்கைக்கு முதன்மையான இன்றியமையாத பொருள் எனப் பொருள்படும்.

இறையுணர்வும், வழிபாடும், அவற்றின் பயனாக விளைந்து பெருகுகின்ற சான்றாண்மைப் பண்பு நலன்களும், பிறவும், தனிமனிதனுக்குப் போலவே, ஒரு சமுதாயம் அல்லது நாட்டிற்கும், அடிப்படைத் தேவையாக அமைந்து ஆக்கங்கள் பல அளிக்கின்றன, உண்மையான சமய வாழ்வும், உயரிய சமய நெறி உள்ளப்பாங்கும், தனிமனிதனின் வாழ்க்கையைச் சிறந்த முறையில் உருவாக்கி, அவனை வையத்து வாழ்வாங்கு வாழச் செய்கின்றன. இவ்வாறே சமுதாயத்திற்கும் நாட்டிற்கும்கூட, அவைகள் பல்லாற்றானும் நலம்பெருக்கி நன்மை புரிகின்றன.

வாழ்வின் வேர்:

ஒரு சிலர், "மனிதன் நல்லவனாக-நல்லொழுக்கமுடையவனாக -பிறருக்குத் தீங்கு செய்யாமல்-இயன்ற உதவி புரிபவனாக-இருந்தால் அதுவே போதும். இறையுணர்வும் வழிபாடும் சிறிதும் தேவை இல்லை" எனக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் மனிதன் நல்லவனாக நல்லொழுக்கமுடையவனாக, பிறருக்குத் தீங்கு செய்யாமல், இயன்ற உதவி புரிபவனாக வாழ்வதற்கு, இறையுணர்வும் வழிபாடும் இல்லாமல் இயலாது. வேர் இருந்தால்தான் மரஞ்செடி கொடிகள் வளரும், மலர் காய் கனிகள் முதலியன தரும். அதுபோலவே இறையுணர்வு இருந்தால்தான், நல்லொழுக்கம் தோன்றவும், வளர்ந்து நிலைபெறவும் கூடும். (1)

தனக்கு மேற்பட்டு எல்லா அறிவும், எல்லா ஆற்றலும் வாய்ந்த பரம்பொருள் ஒன்று, எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும்

---

(1) " Without relegious root there can be no real sincere morality. Just as without roots there can be no real flowers.

—*Count. Leo Tolstoy, Essays & Letters p.* 154.

பரவி நின்று, எல்லாவற்றையும் கண்டு கொண்டிருக்கின்றது என்ற திண்ணமான எண்ணம் இருந்தால் தான், ஒரு மனிதன் உண்மையிலேயே நல்லவனாகவும், நல்லொழுக்கமுடையவனாகவும் இருத்தல் இயலும். எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்று, இவ்வுலகத்தினையும், இதன்கண் வாழும் எண்ணிறந்த உயிர்களையும், தன்னுடைய பேரறிவாலும் பேரருளாலும் படைத்துக் காத்து வருகின்றது என்று திண்ணமாக உணர்ந்து தெளிந்திருந்தால்தான், ஒரு மனிதன் பிற உயிர்களுக்குத் தீங்கு சிறிதும் இயற்றாமல் நலம்புரிந்து வாழ முற்படுவான். இறையுணர்வும் வழிபாடும் எய்தப்பெறாத ஒருவன், வெறும் மனித நலக் கோட்பாடு (Humanism) கடைப்பிடித்தலால் மட்டும், சிறந்த நிலையை அடைந்து விடுதல் இயலாது.

'சிறுகலை வாணியம்':

''முதல் இலார்க்கு ஊதியம் இல்லை'' என்பது திருக்குறள். வாணிகம் செய்து பொருளீட்டி நலம் பெறுதற்கு முதற்பொருள்தேவை. முதற்பொருள் (மூலதனம்) இல்லையேல், நாம் வாணிகம் செய்து ஊதியம் பெறுதல் இயலாது. மனித வாழ்க்கையின் இயல்புகளைக் கவிஞர்களும் ஞானிகளும் பல வகைகளில் உருவகம் செய்து விளக்கியிருக்கின்றனர். வாழ்க்கை என்பது ஒரு வகை வாணிகம்; அன்பைக்கொடுத்து அருளைக் கொள்வது. ''சிறுகாலை நாமுறு வாணியம்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பிடுதல் காணலாம். இந்தச் சிறுகாலை வாணியத்திற்கு முதன்மையாகத் தேவைப்படுகின்ற மூலதனம், கடவுளுணர்வும் வழிபாடுமேயாகும். கடவுளுணர்வும் வழிபாடும் வாழ்க்கையைத் தூய்மைப் படுத்துகின்றன. நாம் நெறியல்லாத தீநெறிகளில் சென்று உழன்று வருந்தாமல், புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, நம்மை மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து, கடவுளுணர்வும் வழிபாடும் நமக்கு நலம்பல புரிகின்றன.

உடலின் தூய்மையையும் நலத்தையும் விரும்பாதார் எவருமிலர். உடலின் தூய்மையும் நலமும் எங்ஙனம் இன்றியமையாதனவோ அங்ஙனமே, உள்ளத்தின் தூய்மையும் நலமும் பெரிதும் போற்றத்தக்கனவாகும். உள்ளத்தின் தூய்மைக்கும் நலத்திற்கும் கடவுளுணர்வும் வழிபாடும் பெருநலம் பயப்பனவாகும். புறந்தூய்மை நீரான் அமைவதுபோல், அகந்தூய்மை இறையுணர்வாலும், வழிபாட்டாலும் ஏற்படுகின்றன. உடற்பிணியைத் தீர்ப்பதற்கு மருந்துகள் பயன்படுவது போல, உள்ளம் அல்லது உயிர் பற்றிய பிணிகள் நீங்கி நலம் பெறுவதற்கு இறையுணர்வும் வழிபாடும் பெருந்துணை புரிகின்றன.

ஒரு தனிமனிதனின் வாழ்க்கை வளம் பெற்றுச் சிறப்பதற்கு, எங்ஙனம் இறையுணர்வும் வழிபாடும் துணைபுரிந்து பெருநலம்விளைவிக்கின்றனவோ, அங்ஙனமே ஒரு சமுதாயத்தின் அல்லது நாட்டின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்குங்கூட, இறையுணர்வும் வழிபாடும், அவற்றின் அடிப்படையில் அமைந்த பழக்க வழக்க நல்லொழுக்க நாகரிகப் பண்பாடுகளும், இன்றியமையாதனவாக விளங்கிப் பெருநலம் பயக்கின்றன. எகிப்து, பாபிலோனியா, சீனா, இந்தியா, கிரீசு, உரோம் முதலிய பல நாடுகளின் வரலாறுகள் இவ்வுண்மையை வலியுறுத்தும்.(2)

மனித நலக்கோட்பாடு என்பது தன்னளவில் ஓரளவு நல்ல கொள்கையே யாகுமெனினும், அது மேலும் மிகச் சிறப்புற்றுப் பயன் விளைவிப்பதற்கு இறையுணர்வும் வழிபாடும் இன்றியமையாதனவாகும். மனிதன் மனிதனாக மட்டுமல்லாமல், அதனினும் மேம்பட்ட தெய்வ நிலைக்கும் உயருதல் வேண்டும். மனிதன் புனிதமுற்றுத் தெய்வநிலையை அடைதலை வற்புறுத்தியே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.' என்று திருவள்ளுவர் அருளிச் செய்தார். ''மனிதன் சமயம் இல்லாமல் வாழமுடியாது. ஏனெனில் அஃது ஒன்றே அவனுடைய ஒழுக்கத்தினை உருவாக்குகின்றது'' என்று பேரறிஞர்கள் கூறியிருக்கின்றனர்.

இறையுணர்வும் வழிபாடும்:

இறையுணர்வும் வழிபாடும் மனிதவாழ்க்கைக்கு எத்தனை இன்றியமையாதவை என்பதனை லின் யூ டாங் என்னும் சீன நாட்டுப் பேரறிஞரும் பின்வருமாறு கூறியிருத்தல் கொண்டு தெளிவுற உணரலாம்.(3)

---

(2) " Belief is great, life-giving! The History of a Nation, becomes fruitful, soul-elevating, and great as soon as it believes.

—*Thomas Carlyle*
Heroes & Heroworship

(3) " A systematic study of such cases in the history of great civilizations of ancient Egypt, Babylonia, China, India, Greece, Rome and the Western Countries, the principal steps in religious and moral progress have uniformly been taken either during periods of major and protracted calamity or immediately after there termination."

—*Dr. A. Sorokin.*
Power & Morality.

(5) " For over 30 years my only religion was humanism; the belief that man, guided by reason, was sufficient unto himself, that progress only in knowledge would automatically bring a better world. But, having witnessed the advances of 20th century materialism, and the doings of nations living without God, I am now convinced that humanism is not enough—that man or his very survival, needs contact with a Power outside and greater than himself. And that is why I have returned to christianity. I wish to re-enter that knowledge and love of God which Jesus taught with such clarity and simplicity."

—*Dr. Lin Yu-tang,*
My Steps Back to Christianity.

''கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக, என்னுடைய ஒரே சமயமாக மனித நலக்கோட்பாடே இருந்து வந்தது. 'மனிதன் அறிவை வழி காட்டியாகக் கொண்டு நடந்து வந்தால், அதுவே அவனுக்குப் போதும். அறிவில் முன்னேற்றமடைதல் ஒன்றே, தானாக ஒரு சிறந்த உலகத்தைக் கொண்டு வரும்' என்ற நம்பிக்கை எனக்கு இருந்து வந்தது. ஆனால் இந்த 20ஆம் நூற்றாண்டின் உலகாயத முன்னேற்றங்களையும், கடவுள் இன்றி வாழ்ந்து வருகின்ற நாடுகளின் அழி செயல்களையும் பார்த்த பிறகு, வெறும் மனித நலக்கோட்பாடு மட்டும் போதாது. மனிதன் தான் தப்பிப் பிழைத்து உயிர் வாழ்தல் ஒன்றற்கேகூட, தனக்குப் புறம்பாகத் தன்னைவிடப் பெரிதாக உள்ள ஒரு பேராற்றலுடன் தொடர்புகொள்ள வேண்டியவனாக இருக்கிறான் என்பதனை, நான் இப்போது மிகவும் தெளிவாக நன்கு உணர்ந்து கொண்டு விட்டேன். அதனால்தான், நான் மீண்டும் கிறித்தவ சமயத்திற்குத் திரும்பி விட்டேன். இயேசுபெருமான் எளிய முறையிலும் தெளிவான நிலையிலும், கற்பித்தருளிய கடவுள் உணர்விலும், கடவுள் அன்பிலும், யான் மீண்டும் சென்று சேர்தலை விரும்புகின்றேன்'' என்று சீன நாட்டுப் பேரறிஞராகிய லின் யூடாங் அவர்கள், கூறியிருப்பது, ஒருவகையில் நம்முடைய மாணிக்கவாசகப் பெருமான் இறைவனை ''வாழ்தல் ஆகிய பொருள்'' என்று குறிப்பிட்டு அருளியதின் சிறப்பையும், உண்மையையும் தெளிவுற விளக்குகின்றது எனலாம்.

முடிவுரை :

எனவே நாம், நமக்கு வாழ்முதலாக அமைந்து விளங்குகின்ற, எல்லாம் வல்ல இறைவனை, நம்மனம் மொழி மெய்களால் நினைத்துத் துதித்து வணங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலமுற முயலுவோமாக !

---

# திருவாய் மொழி

யாவையும் எவரும் தானாய், அவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலன் ஐந்துக்கும் சொலப்படான்; உணர்வின் மூர்த்தி;
ஆவிசேர் உயிரின் உள்ளால் ஆதும்ஓர் பற்று இலாத
பாவனை அதனைக் கூடில், அவனையும் கூட லாமே!

நண்ணாதார் முறுவலிப்ப, நல்உற்றார் கரைந்து ஏங்க,
எண்ஆராத் துயர்விளைக்கும் இவைஎன்ன உலகியற்கை?
கண்ணாளா! கடல்கடைந்தாய்! உனகழற்கே வரும்பரிசு,
தண்ணாவாது அடியேனைப் பணிகண்டாய்! சாமாறே.

கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி
கண்ட இன்பம், தெரிவரிய அளவு இல்லாச் சிற்றின்பம்!
ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக்,
கண்ட சதிர் கண்டொழிந்தேன்; அடைந்தேன் உன் திருவடியே!

—''நம்மாழ்வார்''

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept.

# வள்ளலார் கண்ட சித்தமருத்துவம்

டாக்டர் திரு. ச. செகசோதிபாண்டியன், B.I.M.

அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், வள்ளலார் என்று வழங்கப்படுகிறார். அவரருளிய திருவருட்பா என்னும் நூலில் சித்த மருத்துவக் கருத்துக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இவண்நோக்குவோம்.

ஞாலமே ஐம்பூதக் கூறுபாடாலானது. இதனை 'அண்டத்திலுள்ளதே பிண்டம்' எனும் மொழியால் உணரற்பாலது. பழம்பெரும் சித்தர்களால் உருவாக்கப்பட்ட சிறந்த சித்த மருத்துவத்தில் ஐம்பூதச் சேர்க்கையால் குற்றங்கள் உருவாதல் கூறப்பட்டுள்ளது. எவ்வாறெனில் வெளியும் வளியும் சேர்ந்து வாதத்தினையும், அனலானது பித்தத்தினையும், நீரும் நிலமும் சேர்ந்து கபத்தினையும், உண்டாக்குமென்பது சித்தர்கள் கணிப்பு. ஞாலத்தேயுள்ள பொருட்கள் அனைத்தும் ஐம்பூதக் கூறுபாடாலானது என்பதும் அவர்தம் கருத்தே.

வள்ளலார் பெருந்தகை, 'திருநெறிக் குறிப்புகள்' என்னும் பகுதியில் சித்த மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவமான 96 தத்துவங்களின் விவரங்களை அழகுறக் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றின் கருத்துக்களை ஆங்காங்கே தமது பாக்களின் நடுவே தெளித்திருப்பதைத் திருவருட்பாவை ஊன்றிப்படித்தால் உணரமுடியும்.

''நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்'' என்ற தலைப்பின்கீழ்க் காலைக்கடன் பற்றி, மலங் கழிக்கின்ற போது வலதுகையால் அடிவயிற்றை பிடித்திருத்தல் வேண்டும். சலம் கழிக்கும்போது இடதுகையால் வலது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். மலமாவது சலமாவது பற்றறக் கழியும் வரையில் வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல், மலசல சங்கற்பத்தோடு இருக்க வேண்டும். மலம் பின்னுந் தடைபடுமானால் இடது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராண வாயுவை வலத்தே வரும்படி செய்து கொண்டு, மல சங்கற்பத்தோடு மலவுபாதி கழித்தல் வேண்டும். சலம் தடைப்பட்டால் வலது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராணவாயுவை இடதுப் பக்கம் வரும்படி செய்துகொண்டு சலசங்கற்பத்தோடு சலவுபாதி கழித்தல் வேண்டும்.

மலசல வுபாதிகழித்தபின் செவிகள், கண்கள் நாசி, வாய், தொப்புள் இவைகளில் அழுக்கு பீளை, சளி, ஊத்தை என்கிற அசுத்தங்களையும், கை, கால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளையும், வெந்நீரினால் பற்றறத் துடைத்தல் வேண்டும், பின் வேலங்குச்சி, ஆலம் விழுது இவைகளைக் கொண்டு பல்லழுக்கெடுத்து அதன்பின் கரிசலாங்கண்ணித் தூள் கொண்டு உள்ளே சிறிது சாரம் போகும்படி பல்லில் தேய்த்து வாய்அலம்பின பின்பு, காலை ஆகாரம், கொள்ளல் வேண்டுமென்றும், காலை வெய்யில் கூடாது என்றும், சுவாமிகள் இயம்பியுள்ளனர்.

ஆகார வகையைப் பற்றிக் கூறுகையில், கிழங்கு வகைகளைப் பொதுவாக நீக்குதல் வேண்டுமென்றும், கருணைக் கிழங்கினை மட்டும் சேர்க்கலாமென்றும் கூறியுள்ளார்கள். பழங்களில், பேயன் வாழைப்பழம், ரசதாளி வாழைப்பழம் மட்டும் சிறிது கொள்ளலாம். பழைய கறிகளை நீக்குதல் வேண்டும். புளி மிளகாய் இவைகளைச் சிறிதும், மிளகு, சீரகம் அதிகமாயும் சேர்க்க வேண்டும். எக்காலத்தும் உப்பினைக் குறைத்து உபாயமாகக் கொள்ளுவது தேகத்திற்கு நல்லது. தாளிப்பதற்குப் பசுவெண்ணெய் பயன் படுத்துவது நல்லது. புளியாரைத் துவையலை நித்தம் உண்ணினும் நன்றே.

குடிப்பதற்கு, சுக்கைச் சுண்ணாம்பு தடவிச் சுட்டு, மேலழுக்கைச் சுரணடிப் போட்டுச் சூரணமாக்கி வைத்துக்கொண்டு, நல்லநீரில் கொஞ்சம் போட்டு, ஐந்து பங்கில் மூன்று பங்குநீர் சுண்ட, இரண்டு பங்குநீர் நிற்கக் காய்ச்சி வைத்துக் கொண்டு இந்த நீரைப் பருகுதலே நலமாம். முடியாத காலத்தில் வெந்நீரேனும் கொள்ளல் வேண்டுமேயன்றிக் குளிர்ந்த நீரே கூடாவாம்.

பசித்தாலன்றி எந்த வகையிலும் உண்ணக் கூடாது. வாதபித்த சிலேத்துமங்கள் அதிகரிக்கச் செய்யும் உணவுகளை நீக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

பகலில் எக்காரணங் கொண்டும் துயிலக் கூடாது. மாலை வெய்யில் உடம்பிற் படும்படி சிறிது உலாவுதல் நலம். இரவு ஆகாரம் பகலில் கொள்ளுவதிலும் குறைவாகக் கொள்ளல் வேண்டும். இரவில் தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ந்த பதார்த்தம் சேர்க்கக் கூடாது சூடான பதார்த்தங்களையே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இரவில் துயிலுங்கால் இடதுகைப் பக்கமாகவே துயிலவேண்டும். நான்கு நாளைக்கு ஒருமுறை தலைமுழுகுதல் வேண்டும். முடியாது போயின் வாரத்திற்கு ஒரு முறையேனும் முழுகுதல் வேண்டும். பொற்றலைக் கையாந்தகரையை உலர்த்திப் பொடித்து, நல்லெண்

ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு முழுகுதல் வேண்டும்.

எக்காலத்தும் பழஞ்சோறு, பழங்கறி, எருமைப்பால்-தயிர், மோர், நெய், செம்மறிப் பால்-தயிர், மோர், நெய், கேழ்வரகு வரகு, தினை, சாமை, பருப்பு, அதிரசம், அப்பம், சுகியம், தயிர்ச்சோறு புளிச்சோறு, காரரசிச் சோறு, அகத்திக்கீரை, சுரை, பூசணி, பறங்கி, பீர்க்கு, புடல், பாகல், கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை, கள், சாராயம், கஞ்சா, மாமிசம் இவைகளை நீக்குதல் மிக அவசியம்.

நித்தமும் சூரியோதயமாக ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை நீங்கி எழுந்திருக்க வேண்டும். காலையில் சூரியோதயமானவுடன் தூதுளை, பொன்னாங்கண்ணி, வில்வம், சீந்தில், பொற்றலைக் கையாந்தகரை, புளியாரை, வல்லாரை, நன்னாரி, கடுக்காய், மிளகு, அறுகம்வேர்-இவைகளில் ஏதாயினும் ஒன்றைப்பசும் பாலிற் சுத்திசெய்து சூரணமாக்கிச் சர்க்கையில் கலந்தாவது, பசும்பாலில் அனுபானித்தாவது சிறிது சிறிதாக உண்ணுதல் நன்று.

உண்பதற்கு பச்சரிசிச்சாதம், பசும்பால், நெய், முருங்கை, கத்தரி, முள்ளி, தூதுளை, முதலியவைகளின் பிஞ்சு பொன்னாங்கண்ணி தூதுளை முதலிய இளங்கீரை இவைகளில் மிளகு ஒரு பங்கு, சீரகம் காலே அரைக்காற் பங்கு, வெந்தயம் கால் பங்கு, புளி, உப்பு, மிளகாய், வகைக்கு வீசம் சேர்த்தகறியமுது குழம்பு, ரசம் முதலானவைகளைக் கொண்டு உண்ணல் வேண்டும்.

மதிய உணவில் அடிக்கடி நீரருந்தாது, உண்டபின்பே இளஞ்சூடுள்ள வெந்நீரைக் கிரமமாகத் தாகத்துக்குக் கொண்டு, குளிர்ந்த நீர் சிறிதும் கொள்ளாது நீக்கிவிடல் வேண்டும்.

வள்ளலார் பெருந்தகை மானிடர் யாவரும் நோயின்றி வாழப் பல்வேறு வழிகளையும், மருந்துகளையும் கூறியுள்ளதை நோக்கும் போது, அவரை ஒரு பெரும் சித்தராகவே கருதமுடிகிறது. அவற்றுள், சிலவற்றை இங்குக் காண்போம்:

*1. இருமலுக்கு:*

முசுமுசுக்கை மூலத்தைப் பசும்பாலில் உலர்த்தி ஊறவைத்து நன்றாக இடித்துச் சூரணமாக்கிப் பாலில் கொள்ளவும். காலையில் மிளகு, சர்க்கரை, சிறிது அளவு சேர்த்துச் சாப்பிடவும்.

*2. தேகமெலிவு, ஈளை, சுக்கிலக் கெடுதிக்கு:*

பொன்னாங்கண்ணி 1 பங்கு, கரிசாலை முக்கால் பங்கு, வேகவைத்து நீர் வடித்து மிளகுப் பொடி போட்டு நெய்யிலிட்டுச் சீரகத்தில் தாளித்துப் புரட்டிச் சாப்பிட வேண்டும்.

*3. நீர்க்கோவை, வாதபித்த, ஆபாசக்கெடுதி, மலபந்தம், சூலை—இவற்றிற்கு:*

சுக்கு பலம் 12 - சுண்ணாம்பில் 4 பலம் கவசித்து, மஞ்சளில் 4 பலம் கவசித்து எருமைச் சாணத்தில் 4 பலம் கவசித்து, கவசம் கருகச் சுட்டுஎடுத்துச் சீவி வைத்துக் கொண்டு மூன்று வகைகளிலும் மூன்று வராகன் எடை யெடுத்து நசுக்கி, காற்படி நீரில் போட்டுக் காய்ச்சி வீசம் படியாகச் சுண்டின பின்பு பனங்கற்கண்டு, நெய் இவைகளைக் கலந்து இளஞ்சூடாகச் சாப்பிட வேண்டும்.

*4. தேகவலிவு-சரீர திடத்திற்கு:*

கெட்டி மிளகு 2பலம் - பேயன் வாழைக் கிழங்குச் சாற்றில் 3 நாள், இளநீரில் 3 நாள், கரிசாலைச் சாற்றில் 3 நாள், பசுங்கோமயத்தில் 3நாள், பசும்பாலில் 3 நாள், தனித்தனியே இரவில் ஊறவைத்துப் பகலில் நிழலில் காய வைத்துத் தேய்த்துப் புடைத்து, மீண்டும் முன்போல ஊறவைத்துத் தேய்த்துப் புடைத்து வைத்துக் கொண்டு, 5 மிளகளவு எடுத்துக் கற்கண்டோடு சாப்பிட வேண்டும்.

சூடு அதிகமானால் அருகன்வேர்க்குடி நீரில் பசுவெண்ணெய் சேர்த்துச் சாப்பிடவும்.

*5. பஞ்ச கல்பம்:*


கஸ்தூரி மஞ்சள், வேப்பம் பருப்பு, வெள்ளை மிளகு, கடுக்காய்த்தோல், நெல்லி வற்றல் இவைகளை அரைத்துப் பாலில் காய்ச்சி நறுமணத்துடன் இறக்கித் தேய்த்துக் கொள்ளவும்.

*6. நீலகண்ட மணி மாத்திரை:*


மந்தாளிக்கள்ளி, சதுரக்கள்ளி, வெள்ளெருக்கின் வேர்ப்பட்டை இவைகளைச் சமனெடை எடுத்து நிழலிலுலர்த்தி, 5 பலம்குழித் தைலம் வாங்கிக் கொண்டு சுரைக்குடுக்கையில் வைத்து, பெருங்காயம், லிங்கம், அபினி, மூன்றையும் ஒவ்வொரு பலம் எடுத்து கல்வத்தி லிட்டுப் பொடித்துக் கொண்டு, குங்குமப்பூ கஸ்தூரி, கோரோசனை, பச்சைகற்பூரம், கூகை நீர்-இந்த ஐந்து சரக்குகளும் வகைக்கு 1 வராகனெடை சேர்த்து தைலத்தை விட்டு 8 சாமம் அரைத்து குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து மூங்கில் குழாயிலடைத்து, மண் குடத்தில் வைத்து, பூமிக்குள் 40 நாள் வைத்தெடுத்து, விஷ்ணுவுக்குப் பூசை செய்து தங்கக் குப்பியில் வைத்துக்கொண்டு வாந்திபேதி கண்டவருக்கு 3 மாத்திரை வீதம் அதனில் தர வாந்திபேதி நிற்கும்.

ஜன்னி வகைகளுக்கும், நல்ல பாம்பு முதலிய விஷக்கடிகளுக்கும் தகுந்த அனுபானங்களில் இம்மாத்திரையைப் பிரயோகிக்கலாம்.


திருவருட்பாவை ஊன்றிப் படிக்குங்கால் அருட்பெருஞ்சோதி வள்ளலார் பெருந்தகை சித்த மருத்துவக் கருத்துக்களைப் பற்றி நிரம்பவே பாடியுள்ளமை புலப்படுகிறது. மேலும் மானிடர் துயரின்றி நீடு வாழ்ந்திட, வாழ்க்கை ஒழுக்க முறைகளையும், மருத்துவ நெறிகளையும் நல்லமுறையில் எடுத்தியம்பியுள்ளார்கள். அவர் பாடிய ஒழுக்கநெறிப்படி வாழ்ந்து அவர் பாடியருளிய சித்த மருத்துவத்தை வளர்த்து வாழ்வோமாக. **




சென்னை திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்குத் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வருகை தந்தபொழுது, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், அறங்காவலர் குழு உறுப்பினர்-நிர்வாக அதிகாரி ஆகியோர்களும், வரவேற்பு அளித்தல்.



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



சென்னைத் திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு மா. து. குப்புசாமி முதலியார் அவர்களின் மணிவிழா நிகழ்ச்சியில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், 'முத்தமிழ்க் காவலர்' டாக்டர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

